72

# நவயு[illegible] வாசகம்

நான்காம் பாடிவத்துக்கு

SCANNED

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

இராவ்சாகிப், கு. அருணாசலக் கவுண்டர்
ம. தி. தா. இந்து காலேஜ், திருநெல்வேலி.

SCANNED

S.R.S

TB
031(9)
N49
86493

ரூ. 1—2—0

எஸ். ஆர். சுப்பி[illegible]ரிய பிள்ளை [illegible]

# நவயுக வாசக

லர் ஒன்பது நான்காம் படிவத்துக்கு

472
2-49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

இராவ்சாகிப், கு. அருணாசலக் கவுண்டர்
ம. தி. தா. இந்து காலேஜ், திருநெல்வேலி.

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர் : : : : திருநெல்வேலி

பதிப்புரிமை] [விலை ரூ. 1—2—0

—1949

TB
031(9)
N49

86493

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

புரபசர் ரா. பி. சேதுப் பிள்ளை,
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னை
25—4

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

# அணிந்துரை

திரு எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை அவர்களைத் தப மாணவர் உலகம் நன்கறியும். கல்வித்துறையிலே சென்ற கால் நூ ருண்டுக்கு மேலாக அவர்கள் சிறந்த சேவை செய்து வருகின்றார்கள் அவர்கள் பதிப்பிக்கின்ற பாடப்புத்தகங்களை நமது பள்ளிச் சிறுவர் கள் விருப்புடன் பயில்வதை நான் கண்டு மகிழ்ந்ததுண்டு. அவர்கள் தமது நீண்ட நாள் அனுபவத்தைக் கொண்டு, புதிய பாடத்திட் டத்தை அடியொட்டி, நவயுக வாசகங்களை வெளியிட்டிருக்கின்றார் கள். அவற்றுள் அடங்கிய கவிகளும் கட்டுரைகளும் பொன்போற் போற்றத்தக்கன. அவற்றைத் தெரிந்தெடுத்துப் பதிப்பித்த நல்லாசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் அவர்களைப் பாராட்டு கின்றேன்.

இவை போன்ற தொகுப்பு நூல்களிலே, தமிழ்ப் புராணங் களிலிருந்து சில பல பாடல்களும், புள்ளி விவரங்களடங்கிய உரை நடைகளுமே இடம் பெறுவது வழக்கம். ஆனால், நவயுக வாசகங்களிலே, ஆழ்ந்தகன்ற தமிழ்க் கடலிலே குளித்த நன் முத்துக்களைக் காணலாம். பத்திப் பனுவல், தனிப்பாடல், வருணனை, சிற்றிலக்கியம், பேரிலக்கியம், அறநூல் என்ற தலைப்புக் களிலே, தற்காலம் இடைக்காலம் முற்காலம் என்னும் முக்காலக் கவி மலர்களைத் தெரிந்தெடுத்துத் தொடுத்திருப்பது, இலக்கிய வளர்ச்சியை அறிந்து இன்புறுவதற்குச் சிறந்த சாதனமாகும். தமிழார்வத்தை வளர்க்கும் வகையிலே கட்டுரைப் பகுதியில் செம் பாதி கவிதையும், கலையும் பற்றி அமைந்திருப்பது வரவேற்கத் தக்கதே.

ரா. பி. சேதுப் பிள்ளை.

எங்கள் வாசகங்களிலே தங்கள் கவிதைகளைச் சேர்த்துக் கொள்ள அனுமதி தந்த பெரியார்களுக்கும், கட்டுரை வழங்கிய பேராசிரியர்களுக்கும், பத்திரிகை அதிபர்களுக்கும், தமிழகச் சிறூர் சார்பிலே எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பண்பான பாடநூல்களை வெளியிடும் முயற்சியில் எங்களுக்குத் தங்கள் மேலான ஆலோசனைகளை வழங்கி, எங்களை மேன் மேலும் ஊக்கிவரும் புரபசர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பேராசிரியர் கு. அருணசலக் கவுண்டரவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகுக.

**சங்கரசுப்பிரமணியன்**
(எஸ். ஆர். எஸ்.)

குறிப்பு

பயிற்சிக்குரிய பாடம்

நான்காம் படிவம்

பொது : கவிதை :— 400 வரி ; 100 வரி மனப்பாடம்.
கட்டுரை :— 33-106 முடிய 74 பக்கம்.

சிறப்பு : கவிதை :— 600 வரி ; மனப்பாடம் 100 வரி.
கட்டுரை :— 33-128 முடிய 96 பக்கம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

# பொருளடக்கம்

## செய்யுள்


| எண் | | வரி | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | பத்திப்பனுவல் | 98 | ... | 1 |
| 2. | தனிப்பாடல் | 78 | ... | 7 |
| 3. | வருணனை | 62 | ... | 11 |
| 4. | சிற்றிலக்கியம் | 72 | ... | 15 |
| 5. | பேரிலக்கியம் | 152 | ... | 19 |
| 6. | அறநூல் | 138 | ... | 27 |
| | | 600 | | |


## உரைநடை


1. ஒழுக்கமே அறம் ... 33
—பரிமேலழகர்

2. யானையை வென்ற முயல் ... 34
—பஞ்சதந்திரம்

3. சங்க இலக்கியங்கள் ... 37
—புரபசர் எஸ். வையாபுரிப் பிள்ளை பி. ஏ., பி. எல்.

4. இளவரசர் துறவு ... 43
—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

5. இளங்கோ துறவு ... 48
—அடியார்க்கு நல்லார்

6. தமிழிசை ... 49
—இராவ்பகதூர்—சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் பி. ஏ., பி. எல்.

7. காப்பிய ஆசிரியர் வீரமாமுனிவர் ... 53
—எஸ். தனிநாயக அடிகள். டி. டி. (ரோம்) ; எம். ஏ.

8. பாட்டை எப்படிப் படிக்க வேண்டும் ? ... 59
—பி. என். அப்புஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்.

எண் பக்கம்

9. அழகிய சொக்கநாத பிள்ளை ... 63
—இராவ்சாகிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

10. கவித்துவ சக்தி ... 69
—பி. ஸ்ரீ.

11. பாரதியார் தமிழ்ப் புலமை ... 73
—எஸ். சோமசுந்தர பாரதி, எம். ஏ., பி. எல்.

12. சரம கவிராயர் ... 77
—புரபசர் ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ., பி. எல்.
சென்னைப் பல்கலைக் கழகம்

13. மெய்யுணர்வு ... 86
—பரிமேலழகர்

14. எல்லைப்புறத்திலே ! ... 87
—என் கதை : நாமக்கல் கவிஞர்

15. சோழர் ... 95
—புரபசர் க. அ. நீலகண்ட சாஸ்திரி

16. கிராமச் சீரமைப்பு ... 103
—புரபசர் ஜே. எஸ். பொன்னையா, எம். ஏ.

17. பழைய இரஸவாதம் ... 107
—புரபசர் கே. வி. வீரராகவையர் எம். ஏ., எல். டி.

18. முனிவர் யார் ? ... 112
—நக்கீரர்

19. அதியமானும் ஔவையாரும் ... 113
—வித்துவான் பெ. கோவிந்த மூப்பனார்

20. மண்ணியல் சிறு தேர் ... 119
—மகாமகோபாத்தியாய மு. கதிரேசச் செட்டியார்

21. தேசியம் ... 127
—புரபசர் வ. பொன்னுசாமிப் பிள்ளை எம். ஏ.

# நவயுக வாசகம்

(ஒன்பதாம் புத்தகம் : நான்காம் படிவத்துக்கு)

## 1. பத்திப்பனுவல்

### வாழ்க தமிழ்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே.
வானம் அளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே.

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே.
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே.

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே.
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே.
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே.

—பாரதி

## காந்தி மகாத்மா

வாழ்க நீ எம்மான்! இந்த
வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று, வறுமை மிஞ்சி,
விடுதலை தவறிக் கெட்டுப்,
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை,
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!

' தன்னுயிர் போலத், தனக்கழி(வு) எண்ணும்
பிறன் உயிர் தன்னையும் கணித்தல்,
மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்கள் என்(று)உணர்தல்,
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை, மற்றுங்(கு)
இழிபடு போர்கொலை தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியல் அதனிற்
பிணைத்திடத் துணிந்தனை பெரும!

—பாரதி

## வேண்டுவன

அப்பா! நான் வேண்டுதல் கேட்
டருள் புரிதல் வேண்டும்;
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்;

எப்பாரும் எப்பதமும்
எங்கணும் நான் சென்றே
எந்தை நின(து) அருட் புகழை
இயம்பிடல் வேண்டும்;

செப்பாத மேல் நிலை மேல்
திவ்வியசன் மார்க்கம்
திகழ்ந் தோங்க அருட்சோதி
செலுத்தியிடல் வேண்டும் ;

தப்பேது நான் செயினும்
நீ பொறுத்தல் வேண்டும் ;
தலைவ ! நினைப் பிரியாத
நிலைமையும் வேண்டுவனே.

—இராமலிங்க சுவாமிகள்

## இயற்கையின் தெய்விகக் காட்சி

வான வெளி னிலே,—கவிந்தெழு
மாலைப் பொழுதினிலே,
கூனப் பிறைவரவே—சிவன் திருக்
கோலம் தெளிவேனடி.

முற்றிய ஆழியிலே,—அலைவந்து
மோதி எறிகையிலே,
கற்றைக் கதிரெழவே—உமைதிருக்
காட்சி வியப்பேனடி.

தாமரைப் பொய்கையிலே,—கதிரொளி
தட்டும் அவ் வேளையிலே,
பூமலர்ந் தோங்கிடவே—அரி என்று
போதம் நயப்பேனடி.

மாமலைச் சாரலிலே,—மதமிகு
வாரணக் கூட்டத்திலே,
காமலர் சிந்திடவே—கணேசர் என்
கண்முனே நிற்பாரடி.

மேட்டு நிலங்களிலே,—தினைக்கதிர்
விம்மி விளைகையிலே,
காட்டு மயில் வரவே—குகனும் என்
காதல் விளைப் பாரடி.

—தேசிக விநாயகம் பிள்ளை

## நிராமயமே

வற்றாச் சமுத்திரமே! வள்ளலே! வான்பொருளே!
சித்தர் உளத்தில் தெளிவே நிராமயமே!
துன்புறும் என்னெஞ்சத் துயரமெலாம் தீர்க்க எனக்(கு)
அன்புறுவாய் நின்ற அருளே நிராமயமே!
தாயிருக்கப் பிள்ளை தளரா(து) ஒருபோதும்
நீயிருக்க நான் தளரல் நேரா நிராமயமே?

—மஸ்தான் சாகிபு

## பராபரமே

எல்லாரும் இன்புற்(று) இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!
அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே!

—தாயுமானவர்

## திருப்புகழ்

*தந்ததன தான தானத் தான*
*தந்தன தான தானத் தான*
*தந்தன தான தானத் தான தனதான.*

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி,
சந்தமொடு நீடு பாடிப் பாடி,
முஞ்சர் மனை வாசல் தேடித் தேடி-உழலாதே,

முந்தைவினை யேவ ராமற், போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக,
முந்தடிமை யேனை ஆளத்தானும்-முனைமீதே

திந்திதிமி தோதி திதித்தீதி
தந்ததன தான தானத்தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு-நடமாடும்

செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூலப் பார்வைத் தீர
செம்பொன் மயில் மீதி லேஎப்போதும்-வருவாயோ?
பெருமாளே.

—அருணகிரி

தானந்த தானத்தந் தனதான
நீலங்கொள் மேகத்தின் மயில் மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே,
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே!
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே!
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா!
நாலந்த வேதத்தின் பொருளோனே!
நானென்று மார்தட்டும் பெருமாளே!

—அருணகிரி

## திவ்வியப் பிரபந்தம்

செந்தழலே வந்தழலைச் செய்திடினும், செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்;
வெந்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட் டம்மா! உன்,
அந்தமில்சீர்க் கல்லால் அகங்குழைய மாட்டேனே.

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் விற்றுவக் கோட் டம்மா! என்
சித்தமிக உன்பாலே வைப்பன் அடியேனே.

—குலசேகரப்பெருமாள்

## தேவாரம்

மாதர் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்;
யாதும் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது,
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்;
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன்.

சுண்ணவெண் சந்தனச் சாந்தும், சுடர்த்திங்கட் சூளா மணியும்,
வண்ண உரிவை உடையும், வளரும் பவள நிறமும்,
அண்ணல் அரண்முரண் ஏறும், அகலம் வளாய அரவும்,
திண்ணன் கெடிலப் புனலும், உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை.

—நாவுக்கரசர்

# மார்கழி நோன்பு

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கும் பெருஞ் செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்த சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடநிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய் !

வையத்து வாழ்வீர்காள் ! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ ; பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் ; பாலுண்ணோம் ; நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் ; மலரிட்டு நாம்முடியோம் ;
செய்யா தனசெய் யோம் ; தீக்குறளை சென்றோதோம் ;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையுங் கைகாட்டி,
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய் !

—ஆண்டாள்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே !
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம் ;
உன்னடியார் தாள்பணிவோம் ; அங்கவர்க்கே பாங்கா
அன்னவரே எங்கணவர் ஆவார் ; அவர்உவந்து [வோம்;
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம் ;
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலேம் ஏலோர் எம்பாவாய் !

—மாணிக்கவாசகர்

# 2. தனிப்பாடல்

## தன்மை நவிற்சியா?

பாக்காவது கமுகம்பழம் ; பருப்பாவது துவரை ;
மேற்காவது கிழக்கே நின்று பார்த்தால் அது தெரியும் ;
நாற்காதமும் முக்காதமும் நடந்தால் ஏழுகாதம் ;
ராக்கா ! உண்மை சொன்னேன் ரட்சிப்பாயோ ? பட்சிப்பாயோ ?

—பழம்பாடல்

## போலிப்புலமை

' சுந்தரியே, புறமேகி வந்ததுணை—
—வரை நோக்கிச் ' சுபம் என் ' என்றேன் ;
' வந்ததோர் அசுவம் ' என்றார்; ' கோரம் ' என்றார் ;
மயங்கி நின்றேன் ; ' மாமா ' என்றார் ;
நொந்தழுதேன், பலர் மொய்த்தார் ; ' வாசி ' எனத்
தேறினேன் ; நுவன்ற யாவும்
அந்தமுறும் குதிரை என்று சொல்லிச்
சினந்தார் ; நாண மிகுந் தஞ்சினேனே.

—மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை

## உதவுஞ்சாமி

மூங்கிலிலே ஒளித்திருந்தான் முக்கண் சாமி ;
முதியகடற் போய்ப்படுத்தான் முகுந்த சாமி ;
தாங்கமலப் பொகுட்டுறைந்தான் தலைநற் சாமி ;
தடவரையில் உழன்றுநின்றான் தகப்பன் சாமி ;
வாங்கியுண்ண வழிகாத்தான் வயிற்றுச் சாமி ;
வாணருக்கிங் குதவுவரார் மற்றோர் சாமி ?
ஓங்கியசீர் மயிலையிற்பொன் னப்ப சாமி
உதவிய வேங் கடசாமி உசித வேளே !

—இராமச்சந்திர கவிராயர்

## சிவபெருமான் சிரிப்பு

நாண்என்றால் நஞ்சிருக்கும் ; நாற்சாபம் கற்சாபம் ;
பாணந்தான் மண்தின்ற பாணமே ; - தாணுவே !
சீராரூர் மேவும் சிவனே ! சிரிப்பன்றோ
நேராரூர் அட்ட நிலை ?

## ஆனார் இலையே !

ஆனார் இலையே ! அயனுந் திருமாலும்
கானார் அடிமுடிமுன் காண்பதற்கு - மேனாள்
இரவுதிரு வாரூரில் எந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி.

## நீரா ? மோரா ?

காரென்று பேர்படைத்தாய், ககனத் துறும்போது ;
நீரென்று பேர்படைத்தாய், நெடுந்தரையில் வீழ்ந்ததற்பின்;
வாரொன்று மென்மயில்நேர் ஆய்ச்சியர்கை வந்தபின்பு,
மோரென்று பேர்படைத்தாய், முப்பேரும் பெற்றாயே !

## பெருவயிறு !

கம்பமத கடகளிற்றான் தில்லைவாழும்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டுவாடி,
உம்பரெலாம் விழித்திருந்தார் ; அயில்வேற் செங்கை
உடைய அறு முகவனுங்கண் ணீராறானான் ;
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண் டான் ; மால்
பயமடைந்தான் ; உமையும் உடல் பாதியானாள் ;
அம்புவியைப் படைத்திடுவ(து) அவமதே என்று
அயனும் அன்னம் இறங்காமல் அலைகின்றானே.

—காளமேகம்

## வேகுதே !

ஆசு கவியால் அகில உலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே ! - பூசுரா !
விண்கொண்ட செந்தழலாய் வேகுதே ! ஐயையோ !
'மண்தின்ற பாணம்' என்ற வாய்.

—பழம்பாடல்

## சிவசிவா !

அடிபட்டீர் ; கல்லாலும் எறிபட்டீர் ;
அத்தனைக்கும் ஆளாய் அந்தப்
படிபட்டும் போதாமல் உதைபட்டீர் ;
இப்படியும் படுவார் உண்டோ ?
முடிபட்ட சடையுடையீர் ! கழுக்குன்றீர் !
முதற்கோணல் முட்டக் கோணல் ;
இடிபட்டும் பொறுத்திருந்தீர் ! சிவசிவா !
உமைத்தெய்வம் என்ன லாமே.

—சொக்கநாதப் புலவர்

## விருந்து விமரிசை

வாயில் ஒன்று கல்லும் ஒன்று
நெல்லுமான அன்னமும்,
வாடலாக ஆறுமாதம்
வைத்திருந்த கத்திரிக்
காயில் இட்ட கறியும், உப்(பு)
இலாதகஞ்சி வண்ணமும்
காம்பொடிந்த ஓர் அகப்பை
கைப்பிடித்த வண்ணமும்,
தூயதாய்த் துலக்கலின்றி
அழுக்கடைந்த பாத்திரம்
தூக்கஉள் அசுத்தநீர்
துறுத்துவந்த நேர்த்தியும்,
ஓயலின்றி ஈக்கள் வீழ்ந்து
மொலுமொலென்ற சட்டியும்,
உடன்கொணர்ந்த நாகதேவன்
ஊண்மறப்ப(து) இல்லையே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

## இரண்டாம் குலோத்துங்கன்

மூவாத் தமிழ்பயந்த முன்னூல் முனிவாழி !
ஆவாழி ! வாழி அருமறையோர் !—காவிரிநாட்(டு)
அண்ணல் அனபாயன் வாழி ! ; அவன் குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை !

அன்னைபோல் எவ்வுயிரும் தாங்கும் அனபாயா !
நின்னையார் ஒப்பர் நிலவேந்தர் ?—அன்னதே
வாரி புடைசூழ்ந்த வையகத்துக்(கு) ; இல்லையால்
சூரியனே போலும் சுடர்.

தண்கவிகை யால்உலகம் தாங்கும் அனபாயன்
வெண்கவிகைக்(கு) உள்அடங்கா வேந்தில்லை—எங்கும்
மதியத் துடன்இரவி வந்துலவும் வானில்
பொதியப் படாத பொருள்.

—தண்டி

## நீ பாட

ஈட்டு புகழ்நந்தி பாண ! நீ, எங்கையர்தம்
வீட்டிருந்து பாட, விடிவளவும்,—' காட்டிலழும்
பேய்'என்றாள் அன்னை ; பிறர்'நரி'என் றார் ; தோழி
'நாய்'என்றாள் ; 'நீ'என்றேன் நான்.

—நந்திக்கலம்பகம்

## ஈன்றவயிறு

சிற்றில் நல்தூண் பற்றி, ' நின்மகன்
யாண்டுளனோ ?' என வினவுதி ; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன் ; ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல,
ஈன்ற வயிறோ இதுவே ?
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

—புறநானூறு

# 3. வருணனை

## காலையிலே கடல்

எழுந்தது செங்க திர்தான்
    கடல்மிசை ; அடடா ! எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல்.
    வெளி எலாம் ஒளியின் வீச்சு.
முழங்கிய நீர்ப்ப ரப்பின்
    முழுதும்பொன் ஒளிப றக்கும்.
பழங்கால இயற்கை செய்யும்
    புதுக்காட்சி பருகு தம்பி !

கடல் நீரும் நீல வானும்
    கைகோக்கும் ; அதற்கி தற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்
    எழில் வீணை ; அவ்வீ ணைமேல்
அடிக்கின்ற காற்றே, வீணை
    நரம்பினை அசைத்(து)இன் பத்தை
வடிக்கின்ற புலவன் ; தம்பி !
    வண்கடல் பண்பா டல்கேள்.

—பாரதிதாசன்

## குன்றம்

மாலை மணங்கமழும்
    மௌவல் முகைவிரியும்—எந்தை குன்றம் ;
காலை மணிக்குவளை
    காதலர் போல் கண்விழிக்கும்—எந்தை குன்றம் ;
நீல மழைமுழங்கி
    நின்று சிலம்பதிரும்—எந்தை குன்றம் ;
மாலை மயிலகவ
    வந்தன்று வானமே—எந்தை குன்றம்.

—யாப்பருங்கலம்.

# புலிக்கூடு

பந்தம் எரியு தோடி ;—கண்களைப்
பார்க்க நடுங்குதடி ;
குந்தம்வாள் ஈட்டியெல்லாம்—கூடவே
கொண்டு திரியுதடி ;

வாயைப் பிளக்குதடி ;—கையுறை
வாளும் உருவதடி ;
பேயைப் படைத்த பின்னே—இதனையும்
பிரமன் படைத்தாண்டி ?

வாலை முறுக்குது பார் ;—வால் நுனி
வட்டஞ் சுழலுது பார் ;
சாலப் பதுங்குது பார் ;—நம்மீது
சாடவும் நோக்குது பார் ;

இடித்து முழங்குதடி—தொண்டையும்
இரும்பாலே செய்த தோடி ?
அடுத்து நெருங்கா தோடி ;—அதுமிக
ஆங்காரம் கொள்ளுதடி ;

கூட்டில் அடைத்திடினும் ;—இரையினைக்
கொண்டு கொடுத்திடினும்
காட்டில் வளர்ந்த குணம்—புலிகளும்
காட்டா திருக்கு மோடி ?

புன்னைப் புதுமலரும்—குவளையின்
பூவும் கலந்தது போல்,
மின்னி மிளிரும் உடல்—கொடிய
வேங்கைக்கும் வேண்டுமோடி ?

மானைப் படைத்த தெய்வம்—புலியையும்
வளர்த்து விடலா மோடி ?
தேனைப் பழித்த சொல்லாய்—எனக்கு நீ
தெரிந்துரை செய்வாயோடி ?

—சி. தேசிக விநாயகம் பிள்ளை

## சோலை

கழி மலர்ந்த காவிக் களிவண்டு பாடக்,
குழி மலர்ந்த நீலம் குறுமுறுவல் கொள்ளும் ;
குழி மலர்ந்த நீலம் குறுமுறுவல் கொள்ளப்,
பொழில் மலர்ந்த பூம்புன்னை நுண்தாது சிந்தும்.

—யாப்பருங்கலம்

## பசிப்பேய்

ஆர்காப்பார் எங்களைநீ அறிந்தருளிக்
காவாயேல் ? அடையப் பாழ்த்த
ஊர்காக்க மதில்வேண்டா ; உயிர்பாழ்த்த
உடம்பினை விட் டோடிப் போதும்.

ஓய்கின்றேம் ; ஓய்வுக்கும் இனியாற்றேம் ;
ஒருநாளைக் கொருநாள் நாங்கள்
தேய்கின்ற படிதேய்ந்து மிடுக்கற்றேம் ;
செற்றாலும் உய்ய மாட்டேம்.

வேகைக்கு விறகானேம் ; மெலியா நின்றேம் ;
மெலிந்தஉடல் தடிப்பதற்கு விரகுங் காணேம் ;
சாகைக்கித் தனையாசை போதும் ; பாழிற்
சாக்காடும் அரிதாகத் தந்து வைத்தாய்.

சாவத்தான் பெறுதுமோ ? சதுமுகன் தான்
கீழ்நாங்கள் மேனாள் செய்த
பாவத்தால் எம்வயிற்றில் பசியை வைத்தான் :
பசிக்கல்லேம் எங்கட் கல்லேம்.

பதடிகள்போற் காற்றடிக்கப் பறக்கின்றேம் ;
பசிக்கலந்து பாதி நாக்கும்
உதடுகளிற் பாதியுந்தின்(று) ஒறுவாயேம் ;
அடியேமை உய்யப் பாராய்.

மூக்கருகே வழுநாறி முடைநாறி
உதடுகளும் துடிப்ப, வாயை
ஈக்கதுவும் குறியால்உய்ந் திருக்கின்றோம் ;
அன்றாகில் இன்றே சாதும்.

—சயங்கொண்டார்

## காலைக்கதிர்

எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த,
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரங்குவிப்ப, வேலை என்னும்

மண்ணுமணி முழவதிர, வான்அரங்கில்
நடம்புரிவான் இரவி யான
கண்ணுதல் வா னவன் கனகச் சடைவிரிந்தால்
எனவிரிந்த கதிர்கள் எல்லாம்.

—கம்பராமாயணம்

## ஆற்றுவரி

உழவர்ஓதை மதகோதை உடைநீர் ஓதை தண்பதங் கொள்
விழவர்ஓதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி !
விழவர்ஓதை சிறந்தார்ப்ப நடந்த வெல்லாம், வாய்காவா
மழவர்ஓதை வளவன்தன் வளனே வாழி காவேரி !

பூவார் சோலை மயில்ஆடப், புரிந்து குயில்கள் இசைபாடக்,
காமர் மாலை அருகசைய, நடந்தாய் வாழி காவேரி !
காமர் மாலை அருகசைய நடந்தவெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறம்கண்டே அறிந்தேன் வாழி காவேரி !

—சிலப்பதிகாரம்

## கந்துக வரி

பொன்னிலங்கு பூங்கொடி பொலம்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்கஎன்று, சென்றுபந் தடித்துமே
தேவர் ஆர மார்பன் வாழ்க என்றுபந் தடித்துமே.

பின்னும் முன்னும் எங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின் இளங் கொடி வியன்நிலத் திழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்கஎன்று சென்றுபந் தடித்துமே
தேவர் ஆர மார்பன் வாழ்க என்றுபந் தடித்துமே.

—சிலப்பதிகாரம்

# 4. சிற்றிலக்கியம்

## குயிலும் குரங்கும்

மண்ணில் உயிர்க் கெல்லாம்
தலைவரென மானிடரே
எண்ணி நின்றார் தம்மை ;
எனில், ஒருகால் ஊர்வகுத்தல்,
கோயில், அரசு,
குடிவகுப்புப், போன்ற சில
வாயிலிலே அந்த
மனிதர் உயர்வெனலாம்.
மேனி அழகினிலும்,
விண்டுரைக்கும் வார்த்தையிலும்,
கூனி இருக்கும்
கொலு நேர்த்தி தன்னிலுமே,
வானரர்தம் சாதிக்கு
மாந்தர்நிகர் ஆவாரோ ?
ஆன வரையும்
அவர் முயன்று பார்த்தாலும் ?
பட்டுமயிர் மூடப்
படாத தமதுடலை
எட்டுடையால் மூடி
எதிர்உமக்கு வந்தாலும்,
மீசையையும் தாடியையும்
விந்தை செய்து, வானரர்தம்
ஆசை முகத்தினைப் போல்
ஆக்க முயன்றிடினும்,
ஆடிக் குதிக்கும் அழகில் உமை
நேர்வதற்கே
கூடிக் குடித்துக்
குதித்தாலும், கோபுரத்தில்

ஏறத் தெரியாமல்
ஏணி வைத்துச் சென்றாலும்,
வேறெத்தைச் செய்தாலும்,
வேகமுறப் பாய்வதிலே
வானரர் போல்ஆவரோ ?
வாலுக்குப் போவ தெங்கே ?
ஈனமுறுங் கச்சை
இதற்கு நிகராமோ ?
பாகையிலே வாலிருக்கப்
பார்த்த துண்டு, கந்தை போல் ;
வேகமுறத் தாவுகையில்
வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த
திருவாலைப் போலாமோ ?
சைவசுத்த போசனமும்,
சாதுரியப் பார்வைகளும்
வானரர் போல் சாதி ஒன்று
மண்ணுலகின் மீதுளதோ ?

—பாரதி

## கலம்பகம்

### மறம்

கோற்றவன்றன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா !
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய் ;
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென்(று)அறியாய் போலும் ;
மற்றதுதான் திருமுகமே யானல், அந்த
வாய்செவிகண் மூக்கெங்கே ? மன்னர் மன்னன்
பெற்றஇள வரசானல், ஆலின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்கப் பேசுவாயே.

வேறு

பேசவந்த தூத! செல் அரித்தலைசெல்லுமோ?
பெருவரங்கள் அருள்அரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம் வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா.
வாசலுக் கிடும்படல், கவித்துவந்த கவிகையே;
மகுடகோடி திணையளக்க வைத்தகாலு நாழியும்;
வீசுசாம ரங்குடில் தொடுத்த கற்றை; சுற்றிலும்
வேலியிட்டது அவர்களிட்ட வில்லும்வாளும் வேலுமே.

—மணவாளதாசர்

## யானைமறம்

வீறுசால் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற எறிந்த பரிசயத்தால்,- தேறுது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டுந்தன் கை.

மருப்பூசி யாக, மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்,- திருத்தக்க
வையகம் எல்லாம் எமதென் றெழுதுமே
மொய்யிலைவேல் மாறன் களிறு.

கொடிமதில் பாய்ந்திற்ற கோடும், அரசர்
முடிஇடறித் தேய்ந்த நகமும் - பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோள் கிள்ளி களிறு.

—முத்தொளாயிரம்

# நான்மணி மாலை

வீட்டிற்கு வாயிலெனுந் தொடைசாத்து சொல்
வேந்த! பொது
வாட்டிற்கு வல்லன் ஒருவற்கு ஞான
வமுதுதவி,
நாட்டிற் கிலாத குடல் நோய்
நினக்கு முன்நல் கினும், என்
பாட்டிற்கு நீயும் மவனும் மொப் பீர்எப்
படியினுமே.

படியிலா நின்பாட்டில் ஆரூர!
நனி விருப்பன் பரமன் என்ப
தடியனேன் அறிந்தனன்; வான்றெழுமீசன்
நினைத் தடுத்தாட் கொண்டும், அன்றித்
தொடியுலா மென்கை மடமாதர்பால்
நினக் காத்தூது சென்று,
மிடியிலா மனைகடொறும் இரந்திட்டும்
உழன்ற மையால் விளங்குமாறே.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?

யாதோ சிறந்த தென்குவீராயின்,
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவாசகம் இங்கொரு காலோதில்
கருங்கல் மனமும் கரைந்துகக், கண்கள்

தொடு மணற் கேணியிற் சுரந்து நீர் பாய,
மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர்விதிர்ப் பெய்தி,
அன்பராகு நர்அன்றி,
மன்பதை யுலகின் மற்றையர் இலரே.

—சிவப்பிரகாசர்

# 5. பேரிலக்கியம்

## சிலுவைப்பாட்டு

வள்ளல் குருராயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளி அவதரித்த எம்மான் சருவேசன்,
கொள்ளை புரிந்து கொலைத்தீர்ப்புப் பெற்றுவரு
கள்ளர் இருவரொடுங் கல்வாரி நோக்கினார்.

கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து,
வெய்ய சிலுவை சுமந்தலசி, மெய்வருந்தித்,
துய்ய திருவடிகள் சோர்ந்து, நடை தள்ளாடி,
அய்யன் மறுகூடு வரக்கண்டார் அணிநகரார்.

செந்தா மரைபோல் திகழுந் திருவதனம்
அந்தோ வதங்கி அழகுகுடி போயதென்பார் ;
நந்தாக் கருணை நறுத்துளிக்குங் கண்மலர்கள்
சிந்தா குலம்பொதிந்து தேசிழந்து விட்டதென்பார்.

இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி எவ்வுயிரும்
செப்பரிய துயர்உழப்பச் செருசலையைப் புறம்போக்கி,
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டுய்த்தார்
மைப்படுவன் மனக்கொலைஞர்வதைபுரிவான் கொலைக்களத்தில்.

ஈண்டினியான் புகல்வதெவன் ? எம்பெருமான் திருமேனி
தீண்டினார் ; சிலுவையொடு சேர்த்தினார் ; செங்கையிலும்
காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினார் ;
நீண்டசிலு வையைஎடுத்து நிறுத்தினார் நிலங்கீண்டு.

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போது பரிந் (து) ‘ எந்தாய்
இன்னதென அறிகில்லார் தாஞ்செய்வ(து); இவர்பிழையை
மன்னியும்’ என்றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல்.

இத்தகைய அரும்பொறையும் மனநலமும் இயைந்தவரே (று)
வித்தகனுக்கடித் தொழும்பர் எனத்தகுமெய்க்கிறிஸ்தவர் ; மற்
இத்தகைய குணம்இலருங் கிறிஸ்தவர்கள் என்றிசை பெறுதல்
செத்தவரைத் துஞ்சினவர் எனஉரைக்குஞ் சீர்மைத்தால்.

—இரட்சணிய யாத்திரிகம்.

## நண்பர் சந்திப்பு

### வாயிற்காவலர் கூறுதல்

'நின்னுடை வர(வு) உரைத்தேம்
நிருபனுக்(கு) ; அப்போழ்து உற்ற
பன்னருங் களிப்பை, யாமோ
பகர்ந்திட வல்லம் ? ஐய !
முன்னம் அங்கிருந்த இன்பம்
முழுவதும் மறந்து நின்றான் ;
நன்னர்நெஞ் சுடைய நீரார்
நட்பினிற் சிறந்த(து) உண்டோ ?

'ஆதலின்' எம்பிரானுக்(கு) அகத்துமிக்(கு)
உவகை உய்ப்ப
ஏதமில் முனிவர் ஏறே !
எழுந்(து) அருளுக' என்(று) அங்கைப்
போதகம் கூப்பி னார்கள் ;
பொருக்கென எழுந்து, செம்மை
வேதம்முற் றுணர்ந்த ஐயன்
விரைதர நடக்க லுற்றான்.

### கண்ணனைக் குசேலர் காணுதல்

எண் அனைக்(கு) இலங்கு மார்பம்
ஈந்தருள் பிரானை, நீல
வண்ணனைத், திகிரி சங்கம்
வலம் இட முறக்கொண் டானை,
மண் அனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனை, மணக்கும்
கண்ணனைத் துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான்.

### கண்ணன் குசேலரை வணங்குதல்

காண்டலும் உவகை பூத்துக்
 கால்விசை கொடுந டந்தான்,
ஆண்டகை அவனும் கண்ணுற்(று)
 அணை உடைத்(து) எழுநீத் தம்போல்,
நீண்டபூம் பள்ளி நீத்து,
 நிலவுபேர் அன்பு பொங்கப்
பூண்டமா தவன்முன் சென்று
 பொன்னடி வணங்கி னானால்.

### குசேலருடைய நிலை

நீருறும் உப்புப் போலும்,
 நெருப்புறு பளிதம் போலும்,
ஏருறு வடிவத் தண்ணல்
 இடத்துத்தன் மனம் கலப்பப்,
பேருறு பவஞ்ச வாழ்க்கைப்
 பிணிப்(பு) ஒழிந்(து) அகலக், கஞ்சத்
தாருறு மார்பத்(து) ஐயன்
 தன்னையும் மறந்தி ருந்தான்.

### கண்ணன் குசேலரைக் குசலம் விசாரித்தல்

'பூன்ற தயை என்னிடத்(து) எப்
 போதும் நீ வைத்தருள்க.
ஆன்றஎன(து) உளத்தினைவிட்(டு)
 அகன்றிலைஇந் நாள்காறும்:
சான்றகுணத் தாய்! இன்னும்
 சந்ததமும் நினைந்திருப்பேன்.
தோன்றஅனே கம் பெறினும்
 தொன்னட்பின் சிறந்தனவோ?

'நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்பு பெரு நீர்மையளே?
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய உயிராநின் தனைப் பேணும் தன்மையளே?
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல(வு) உஞற்றுவளே?

'பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்டுமே,
எங்கும் அரும் புகழுடையாய்! எத்தனைமைந்தர்கள் பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர் அணிதரச்செய் செயலனைத்தும்
சிங்கலறப் புரிந்தனையோ? செய்தனையோ உபநயனம்?'

## கண்ணன் ஏதேனும் தரும்படி குசேலரைக் கேட்டல்

'பந்தனை அகன்ற மேலோய்! பற்பல நாட்குப் பின்பு
வந்தனை; எனக்(கு) என்கொண்டு வந்தனை? அதனை இன்னே
தந்தனை யாயின் நன்று. தருசுவைப் பக்க ணத்(து) என்
சிந்தனை நின்ற(து)' என்றான் தெரிவரும் வஞ்சக் கள்வன்.

'திருந்த இங்களித்தி' என்று
செங்கரம் மலர்த்தி நீட்டப்,
'பொருந்த இன் பால் உண்பான்பால்
புளித்த காடியைக் கொடுத்திட்(டு)
அருந்தி(டு), என்(று) உரைத்தல்போல், இவ்
வவற்கொடை' என்று வாளா
இருந்தனன் குசேல மேலோன்.
இவன்உளம் அறிந்த கண்ணன்,

மலிதரும் அன்பின் வந்த
வண்பொதி அவிழ்த்து நோக்கி
'வலிதரும் அவற்றுள் நன்று
வாய்த்தது நமக்கி(து)' என்ன,
ஒலிதரு கழற்கால் ஐயன்
ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயில்
போகட்டுக் கொண்டான் மாதோ.

—குசேலோபாக்கியானம்

# நன்றி மறவாமை

[தூது சென்றபோது கண்ணன் கன்னனைக் கண்டு குந்தி அவனை ஈன்ற வரலாறு கூறி 'இளையர்பால் ஏகு' என்றான். அதற்குக் கன்னன் சொன்ன விடை]

'கன்றால் விளவின் கனிஉகுத்தும்,
கழையால் நிரையின் கணம் அழைத்தும்,
குன்றால் மழையின் குலந்தடுத்தும்,
குலவும் செல்வக் கோபாலா!
இன்றால் எனது பிறப்புணர்ந்தேன்
என்றன் புருகி எம்பியர்பால்
சென்றால் என்னை நீ அறியச்
செகத்தார் என்றும் சிரியாரோ?

ஆரென் றறியத் தகாதஎனை
அரசும் ஆக்கி, முடிசூட்டிச்,
சீரும் திறமும் தனதுபெருந்
திருவும் எனக்கே தெரிந்தளித்தான்;
பாரின் றறிய நூற்றுவர்க்கும்
பழிதீர் வென்றிப் பாண்டவர்க்கும்
போரென் றறிந்தும் செய்நன்றி
போற்றா தவரிற் போவேனோ?'

[தலைநாள் தான் ஈன்ற மைந்தனைக் குந்தியம்மை சந்திக்கிறாள். தான் அவன் தாய் என்பதை மெய்ப்பித்து, 'மதலாய்! இவரும் ஏவல்புரிய வாழ்வுகூர்வது கடன்' என்கிறாள்; அதற்குக் கன்னன்,]

'பெற்ற நீர்மகவன் பிலாமையோ? அன்றிப்
பெரும்பழி நாணியோ? விடுத்தீர்
அற்றை நாள்தொடங்கி என்னைஇன் றளவும்
ஆருயிர்த் துணையெனக் கருதிக்
கொற்ற மாமகுடம் புனைந்தர சளித்துக்
கூடஉண் டுரிய தம்பியரும்
சுற்ற மானவரும் என்னடி வணங்கத்
தோற்றமும் ஏற்றமும் அளித்தான்.

மடந்தை பொற்றிரு மேகலைமணி உகவே
மாசறத் திகழும் ஏ காந்த
இடந்த னிற்புரிந்தே யான்அயர்ந் திருப்ப,
'எடுக்கவோ? கோக்கவோ?' என்றான்;
திடம்ப டுத்திடுவேல் இராசரா சனுக்குச்
செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்
கடன்க ழிப்பதுவே எனக்கினிப் புகழும்
கருமமும் தருமமும்' என்றான்.

[போர்முனையிலே கன்னன் துரியோதனனிடம் சொல்லுவான்.]

'நஞ்சோற்றம் பெறநுகர்வுற் றிருண்ட கண்டர்
நற்றிருண்டர் வடிவமென நண்ணும் வெண்ணீற்று
அஞ்சோற்று மடற்கைதை கமழுங் கானல்
அகல்குருநாட் டரியேறே! யான்நின் தீம்பால்
வெஞ்சோற்றா டினிதருந்தி அமுத ருந்தும்
விண்ணவர்போல் இந்நெடுநாள் விழைந்து வாழ்ந்தேன்
செஞ்சோற்றுக் கடன் இன்றே கழியேன் ஆகில்
திண்தோள்கள் வளர்த்ததனால் செயல் வேறுண்டோ?

ஓருரும் ஒருகுலமும் இல்லா என்னை
உங்கள்குலத் துள்ளோரில் ஒருவன் ஆக்கித்,
தேருரும் அவர்மனைக்கே வளர்ந்த என்னைச்
செம்பொன்மணி முடிசூட்டி, அம்பு ராசி
நீருரும் புவிபாலர் பலரும் போற்ற
நின்னினும்சீர் பெறவைத்தாய்; நினக்கே அன்றி
ஏருரும் கதிர்முடியாய்! உற்ற போரில்
யார்க்கினி என் உயிரளிப்ப தியம்பு வாயே?'

[சமரமா முனையில் சாகுந் தறுவாயில் கன்னன் மறையவனாக வந்த கண்ணனுக்குத் தனது அறப்பயனை ஐயமாக அளிக்கின்றான்.]

'நீலநெடுங் கிரியும் மழை முகிலும் பவ்வ
நெடுநீரும் காயாவும் நிகர்க்கும் இந்தக்
கோலமும், வெங் கதைவாளம் சங்கு நேமி
கோதண்டம் எனும் படையும், குழையும் காதும்,

மாலைநறும் துழாய்மார்பும், திரண்ட தோளும்,
மணிக்கழுத்தும், செவ்விதழும், வாரி சாதக்
காலைமலர் எனமலர்ந்த முகமும், சோதிக்
கதிர்முடியும், இம்மையிலே கண்ணுற் றேனே.

தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ டெதிர்மலைந்து, தறுகண் ஆண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் ; தேவர் கோவுக்
குரைபெறுநற் கவசகுண் டலமும் ஈந்தேன் ;
உற்றபெரு நல்வினைப்பே(று) உனக்கே தந்தேன் ;
மருதிடைமுன் தவழ்ந்தருளும் செங்கண் மாலே !
மாதவத்தால் ஒருதமியேன் வாழ்ந்த வாறே !'

[கன்னன் இறந்தபோது துரியோதனன் புலம்புவான்.]

அணையார்தம் படைக்கடலின் அருநிலைக்குக் கரையேற
லான கோலப்
புணையாய் ! எத் திறங்களினும் பகிராமல் உற்றதெலாம்
புகலத் தக்க
துணையாய் ! என் உயிர்க்குயிராம் தோழனுமாகிய உன்னைத்
தோற்றே னகில்
இணையாரும் இலா அரசே ! யாரைக்கொண் டரசாள
இருக்கின் றேனே !

சூழ்வேலை உலகாளும் சூழ்ச்சியும்இப் பெருஞ்செல்வத்
துவக்கு நெஞ்சால்
வீழ்வேனோ ? அமராட வீமனொடு தலைநாளில்
விளைந்த செற்றம்
தாழ்வேனோ ? உனைஒழிந்தும் தம்பியரை ஒழிந்தும்இனித்
தனித்து நானே
வாழ்வேனோ ? வாழ்வே ! என்மனவலியே ! வருகின்றேன் !
வருகின்றேனே !

—வில்லி பாரதம்

## தந்தையும் தனயரும்

மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—' மக்காள் ! நீர்
என்மக்கள் போல்கின்றீர் ; யார்மக்கள் ?' என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

' மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம் ;
அன்னை தனைக் கான்விட்(டு) அவனேக,—இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான் ' என்றார் அழுது.

ஆங்கவர் சொன்ன உரைகேட்(டு) அழிவெய்தி,
நீங்கா உயிரோடு நின்றிட்டான்—பூங்காவில்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன்
உள்ளம்போற் கண்ணீர் உகுத்து.

' உங்கள் அரசொருவன் ஆள, நீர் ஓடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ ?—செங்கை
வளவரசே !' என்றுரைத்தான் ; மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து.

' நெஞ்சால் இம் மாற்றம் நினைந்துரைக்க நீ அல்லா(து)
அஞ்சாரோ மன்னர் ? அடுமடையா !—எஞ்சாது
தீமையே கொண்ட சிறு தொழிலாய் ! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.'

' மன்னர் பெருமை மடையர் அறிவரோ ?
உன்னை அறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல் ' என்று முடிசாய்த்து நின்றான்,
கனிந்துருகி நீர்வாரக் கண்.

—நளவெண்பா

# 6. அறநூல்

## நாலடியார்

### பொருள்

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும் ;
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்(து)
அடுவது போலும் துயர்.

### ஊக்கம்

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும், நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

இசையா தெனினும் இயற்றிஓ ராற்றல்
அசையாது நிற்பதாம் ஆண்மை ;—இசையுங்கால்
கண்டல் திரையலைக்கும் கானலங் தண்சேர்ப்ப !
பெண்டிரும் வாழாரோ மற்று.

### அறம்

ஆவே(று) உருவின ஆயினும், ஆபயந்த
பால்வே(று) உருவின அல்லாவாம் ;—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறம் ; நெறி, ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு.

இன்னர் இனையர் எமர்பிறர் என்னும்சொல்
என்னும் இலராம் இயல்பினால்—துன்னித்
தொலைமக்கள் துன்பம்தீர்ப் பாரே, யார் மாட்டும்
தலைமக்கள் ஆகற்பா லார்.

### புலமை

தவலரும் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகல் இலர், எஃகுடையார், தம்முட் குழீஇ
நகலின் இனிதாயின் காண்போம், அகல் வானத்(து)
உம்பர் உறைவார் பதி.

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்,—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

## மேலோரும் கீழோரும்.

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் ; சான்றோர் அஃதாற்றார் ; தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும், தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினர் ஈங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால், சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு.

## நட்பு

யானை அனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் ; யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் ; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

கடையாயார் நட்பிற் கமுகனையர் ; ஏனை
இடையாயார் தெங்கின் அனையர் ;—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன்(று) இட்டஞான் றிட்டதே
தொன்மை உடையார் தொடர்பு.

## தற்புகழாமை

கற்றனவும், கண்ணகன்ற சாயலும், இற்பிறப்பும்,
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும் ; தான்உரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்தில் தணியாத
பித்தன் என்(று) எள்ளப் படும்.

## பொது

அறிவ தறிந்தடங்கி, அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து,—பெறுவதனுல்
இன்புற்று வாழும் இயல்புடையார், எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

கல்லாக் கழிப்பர் தலையாயார். நல்லவை
துவ்வாக் கழிப்பர் இடைகள். கடைகள்
'இனிதுண்ணேம் ஆரப் பெறேஎம்யாம்,' என்னும்
முனிவினுல் கண்பா டிலர்.

ஓதியும் ஓதார் உணர்விலார் ; ஓதாதும்
ஓதி அனையார் உணர்வுடையார்.—தூய்தாக
நல்கூர்ந்தும் செல்வர் இரவாதார். செல்வரும்
நல்கூர்ந்தார் ஈயார் எனின்.

தெளிவிலார் நட்பின் பகைநன்று ; சாதல்
விளையா வருநோயின் நன்ருல் ;—அறிய
இகழ்தலின் கோறல் இனிதே ; மற்றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

# புறநானூறு

## பொருண்மொழிக் காஞ்சி

நாடா கொன்ருே காடா கொன்ருே
அவலா கொன்ருே மிசையா கொன்ருே
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலமே.

## மூதில் முல்லை

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே ;
சான்ருேன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே ;
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

# திருக்குறள்

## நடத்தையும் நாணயமும்

### கல்வி

கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

தொட்டனைத்தூறும் மணற்கேணி ; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

யாதானும் நாடாமால் ஊராமால் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு ?

### கல்லாமை

கல்லாதவரும் நனி நல்லர், கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

உளர் என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர் அனையர் கல்லா தவர்.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண் மாண் புனைபாவை அற்று.

### கேள்வி

செவியுணவிற் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோ(டு) ஒப்பர் நிலத்து.

கற்றிலன் ஆயினும் கேட்க ; அஃதொருவற்கு,
ஒற்கத்தின் ஊற்றாந் துணை.

எனைத்தானும் நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

## அறிவுடைமை

சென்ற இடத்தால் செலவிடா, தீதொரீஇ
நன்றின் பால் உய்ப்ப(து) அறிவு,

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எவ்வ துறைவ துலகம் ; உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு.

அறிவுடையார் ஆவ(து) அறிவார் ; அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

## சிற்றினம் சேராமை

சிற்றினம் அஞ்சும் பெருமை ; சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

மனத்தானும் மாந்தர்க்(கு) உணர்ச்சி, இனத்தானும்
இன்னன் எனப்படும் சொல்.

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் ; இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

நல்லினத்தின் ஊங்கும் துணைஇல்லை ; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

## பேதைமை

பேதைமை என்பதொன்று யாதெனின், ஏதங்கொண்(டு)
ஊதியம் போக விடல்.

பேதைமையுள் எல்லாம் பேதைமை, காதன்மை
கையல்ல தன்கண் செயல்.

நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும்
பேணாமை, பேதை தொழில்.

ஓதி யுணர்ந்தும் பிறர்க் குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையர் இல்.

## புல்லறிவாண்மை

வெண்மை எனப்படுவ(து) யாதெனின், ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

அற்றம் மறைத்தலோ புல்லறிவு ; தம்வயின்
குற்றம் மறையா வழி.

ஏவவும் செய்கலான் தான்தேறான் ; அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய்.

உலகத்தார் உண்டென்ப(து) இல்லென்பான், வையத்(து)
அலகையா வைக்கப் படும்.

## பெரியாரைப் பிழையாமை

கெடல் வேண்டின் கேளாது செய்க, அடல் வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு.

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால், ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்.

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம், உய்யார்
பெரியார் பிழைத்தொழுகு வார்.

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்
தகை மாண்ட தக்கார் செறின்.

# 1. ஒழுக்கமே அறம்

திருக்குறள் உரை—பரிமேலழகர்

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும், நெறி அறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு, உறுதி யென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை: அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

அவற்றுள் வீடு என்பது: சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து; ஆதலின், துறவறமாகிய காரண வகையாற் படுவ தல்லது, இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப் படுவன, ஏனைய மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது: மனு முதலிய நூல்களின் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூன்று வகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது: அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று அவற்றிற் கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல். வழக்காவது: ஒரு பொருளைத் தனித்தனியே எனதென்றிருப்பாரது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள் மேற்செல்வது. அது கடன் கோடல் முதலிய பதினெட்டுப் பதத்ததாம். தண்டமாவது: அவ் வொழுக்க நெறியினும் வழக்க நெறியினும் வழீஇயாரை அந்நெறி நிறுத்தற் பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தக ஒறுத்தல்.

இவற்றுள், வழக்கமும் தண்டமும் உலகநெறி நிறுத்தற் பயத்தவாயவல்லது ஒழுக்கம் போல் மக்கள் உயிருக்கு உறுதி பயத்தற் சிறப்பில; ஆகலானும், அவைதாம் நூலானே அன்றி உணர்வு மிகுதியானும் தேய இயற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை ஒழித்து, ஈண்டு, தெய்வப் புலமைத் திருவள்ளுவரான், சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது.

# 2. யானையை வென்ற முயல்

## பஞ்சதந்திரம்

ஒரு காட்டில் சதுரதந்தன் என்னும் அரச யானை பல யானைகளோடு கூடிக் கொண்டிருக்கும்போது, அங்கு மழை பெய்யாமையால், ஆறு, ஏரி, குளம் குட்டைகளெல்லாம் வற்றிப்போக, அப்போது யானைகளெல்லாம் தாகித்துச் சதுர தந்தனைப் பார்த்து, 'சுவாமி! நாங்களெல்லாம் தாகத்தினலே செத்தாற் போலானேம்; சிலர் தண்ணீர்க்காகச் செத்தார்கள். ஆகையால் மிகவும் தண்ணீருள்ள இடந்தேடிப் போயிருப்போமானல் எல்லாரும் சுகமடைவோம்' என, இவற்றின் பேச்சைக்கேட்டுத் தன்மனத்தில் யோசித்து, 'இதற்கு ஐந்து நாளைப் பயண தூரத்தில் ஒரு பெரிய மடு பாதாள கங்கையினல் நிறைந்திருக்கிறது, அங்கே போனல் எல்லோர்க்கும் மிகவுந் தண்ணீர் கிடைக்கும்' என்றுஇப்படி அது உறுதி சொல்ல, அப்படியே அவைகள் அங்கே போய்த், தெளிந்த நீரைக்கண்டு, அந்தி வரைக்குஞ் சலக்கிரீடை செய்து கொண்டிருந்தது. பின் கரையில் வந்திருந்தன. அப்போது அங்கே வாசம்பண்ணிக் கொண்டிருந்த பல முயல்களிற் சில யானைகளின் காலின் கீழ் அகப்பட்டிறந்தன; சிலசில முயல்களுக்குக் கால் கைகள் ஒடிந்தன; சிலவற்றிற்கு உடல்கள் நொறுங்கின; சிற்சிலவற்றிற்குக் குடல்கள் சரிந்தன; சிலச்சில இரத்தத்தில் நிறைந்தன. இப்படிப் பொல்லாங்கு நேரிட்டவுடனே, சில முயல்கள் ஒன்ருய்க் கூடி 'இன்றைக்கு யானைக் கூட்டம் வந்து நம்மை அழித்தது. இப்படியே தினமும் இருக்கும். ஏனெனில், இங்கே கிட்ட வேறே தண்ணீரில்லை. இதனல் நமக்கு மீளாச் சங்கடம் நேரிட்டது. யானை தொட்டாலும், பாம்பு மோந்தாலும், அரசன் நகைத்தாலும், துச்சனன் மரியாதை பண்ணினலும் உயிர்ச் சேதம் வரும். ஆதலால், இதற்கு ஏதாவது உபாயம் யோசிக்க வேண்டும்' என, அப்போது சில முயல்கள் 'உயிரைக் காப்பாற்றும் பொருட்டுப் பூமியை விட்டுவிட வேண்டும்' என்றன. இதைக் கேட்டு வேறு சில முயல்கள் 'நம்முடைய பெரியோர்கள் வாழ்ந்த இடத்தை விட்டு வேறிடத்துக்குப் போகாமல், யானைகள் அஞ்சத்தக்க தந்திரமெடுக்க வேண்டும். நஞ்சில்லாப் பாம்பு படமெடுத்தால் அதற்கு நஞ்சில்லாதிருந்தும்

பயங்கரமாயிருக்கிற படத்தின் வடிவைப் பார்த்து மனிதர்கள் பயப்படுகிறார்கள்' என்றன.

அதைக் கேட்டு ஒரு முயல் யானைகள் பயப்படும்படி ஓர் உபாயஞ் சொல்லுகிறேன். விசயதந்தன் என்னும் நம்முடைய சுவாமி சந்திர மண்டலத்திலிருக்கிறான்; அவன் தூதனுப்பினான் என்ற ஒரு நிமித்தம் வைத்து ஒரு பொய்த்தூதனை அவர்களிடத்துக் கனுப்பினால் நம் காரியமாகும்' என்றது. இதைக் கேட்டவுடனே எல்லாம் அப்படியே நிச்சயித்து, நெட்டைக் காதனைப் பார்த்து, 'நீ சாதுரியவன், எதிரிகளைச் சமாதானம் பண்ணுகிறவன்; ஆதலால் தூதகாரியத்தில் நிபுணனாயிருக்கிறாய்; மௌட்டிய மில்லாமையும், சோம்பலின்மையும், பொய்யாமையும், ஊகித்தறிதலும் தூது இலட்சணமென்று சொன்னவற்றிற்கு நீயே வாசஸ்தானமென்று நினைக்கிறோம். ஆகையால் நீ போனால் நம்முடைய காரியங் கைகூடும்; மூடத்தூதனை அனுப்பினால் காரியங் கெட்டுப்போம்' என்று சொல்லி அதை அனுப்ப, அது போய் யானைகள் வரும் வழியில் ஓர் உயர்ந்த மேட்டில் உட்கார்ந்திருந்து, யூதபதி வந்தவுடனே அதைப் பார்த்து, 'அடா துஷ்ட யானையே! வெட்கத்தை விட்டு இந்த மடுவில்வந்து பலவகைப்பட்ட விளையாட்டு விளையாடுகிறாய். ஆதலால் நான் எல்லோரையும் அடித்தெறிந்து விடுவேன்' என, இதைக் கேட்ட யானை, 'உன் பேச்சைக் கேட்டு நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். ஆனால் நீயார்?' என, முயல் 'நான் விசயதந்த ராஜனுடைய தூதன். அவன் கட்டளையை உனக்கு சொன்னேன். அவன் சந்திரமண்டலத்தில் இருக்கிறபடியால் சந்திரன், உன்னிடத்திற்கு என்னை அனுப்பினான் என்றது. இதைக் கேட்டு இவன் வலியவனுடைய தூதனென்றெண்ணி அதைப் பார்த்து, 'சந்திரனுடைய கட்டளை என்ன?' என, அது 'நீ இங்கே வந்து நாணமில்லாமற் கிரீடை செய்து பல முயல்களைக் கொன்றாய், ஆகிலும் நான் ஒருதரம் பொறுத்தேன். இப்போது உனக்கு உயிர் பே[...]சல் ஆசையிருந்தால், மீண்டும் இங்கே வரவேண்டாம் என்றிப் படி[...] சந்திரனுடைய கட்டளையாயிருக்கிறது. அதை உனக்கு நான் சொன்[...]னேன். இப்போது இதற்குப் பிரதி உத்தரஞ் சொன்னாற் சுவாமி [...] கூறும். [...]கு அறிவிப்பேன்' என்றது. யானை 'எசமானிடத்தி[...] ஆண்டுகொ[...] அழைத்துக் கொண்டுபோ. அவனுக்கு நமஸ்கார[...]தனவா[...] வேறொரு குளத்திற்குப் போவேன்' என்றது.

இதைக் கேட்ட முயல் ' நீ தனியாய் என்னோடு கூடவா. உனக்குச் சுவாமியைக் காண்பிக்கிறேன் ' என, பிறகு இரண்டும் போகையில் ஓர் ஏரியினருகே போனதும், முயல் யானையைப் பார்த்து ' சந்திரன் இந்தத் தண்ணீருக்குள்ளே வந்திருக்கிறான், அவனை நமஸ்கரித்து விட்டுக் கடுகெனப் போ. இல்லாவிட்டால் அவனுடைய சமாதிக்குப் பங்கம் வரும். அப்பொழுது அவற்கு வெகு கோபம் வரும்,' என, அப்போது யானை பயந்து, சந்திரபிம்பத்துக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போயிற்று. அது முதற்கொண்டு முயல்கள் அங்கே சுகமுற்றிருந்தன.

ஆகையால், பெரியோர்களை அடுத்திருந்தால் மலைபோல் வந்த வினை சூரியன் முன் பனிபோல நீங்கும்.

# 3. சங்க இலக்கியங்கள்

புரபசர், எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.

இப்போது கிடைக்கும் பழைய தமிழ்ச் செய்யுட்களிற் சில கிறிஸ்து அப்தத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டவை; ஆதலால், தமிழிலக்கிய சரிதம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தொடங்கியுள்ளது. இப்பெருமை எல்லா மொழிகளுக்கும் உரியதன்று. மலையாள மொழியில் கி. பி. பதினாலாம் நூற்றாண்டிலும், தெலுங்கு மொழியில் கி. பி, பதினோராம் நூற்றாண்டிலும், கன்னட மொழியில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலும் ஆதி இலக்கியங்கள் தோன்றின. இப்பொழுது பல தேசங்களிற் பயிலப்பட்டுப் பெருஞ் சிறப்புடன் விளங்கும் ஆங்கில மொழியிற்கூட இலக்கியம் முதன்முதலில், தோன்றியது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில்தான். ஆரியம், சீனம், லத்தீன், கிரேக்கு, எபிரேயம் முதலிய ஒரு சில மொழிகளிலுள்ள ஆதி இலக்கியங்களே தமிழ் இலக்கியங்களின் அளவு பழமை வாய்ந்தவை.

மிகப் பழமையான காலந்தொட்டே தமிழ் சிறப்புற்று வாழ்ந்து வந்த இடம் பாண்டிய நாடு என்று கூறுவர். வில்லிபுத்தூரார் என்ற கவிஞர்,

> "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து
> இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை"

என்று தமிழைக் குறித்துக் கூறுகின்றார். இப்பாண்டிய நாட்டிலே தலைநகராகிய மதுரையிலே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததென்பது கர்ணபரம்பரைச் செய்தி. கிறிஸ்து அப்தத்தின் இரண்டாம் நூற்றாண்டு இச்சங்கம் இருந்த காலம் என்பர் ஆராய்ச்சியாளர். தமிழ்ச் செய்யுட்களையும் புலவர்களையும் ஆராய்ந்து சீர்தூக்கி மதிப்பிடுதல் இச்சங்கம் செய்துவந்த பணியென்று கூறப்படுகின்றது. நாற்பத்தொன்பது புலவர்கள் இச்சங்கத்தில் இருந்தார்கள் என்பர். சங்கத்தைப் பற்றிய வரலாறு இறையனார் களவியலுரை என்ற நூலிலே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இது கடைச்சங்கம் என்றும், இதற்குமுன் இரண்டு சங்கங்கள் இருந்தன என்றும் களவியலுரை கூறும். தலைச்சங்கம் 4140 ஆண்டுகளும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகளும் இருந்தனவாம்.

கடைச்சங்க காலத்து நூல்களே நமக்கு இப்போது கிடைப்பவை. இந்நூல்களையே நாம் 'சங்க இலக்கியங்கள்' என வழங்குகிறோம். 'தொல்காப்பியம்' என்ற பேரிலக்கண நூல் இடைச்சங்க காலத்து இறுதியில், அதாவது சுமார் கி. மு. 5000-ல் தோன்றியதென்றும், தலை, இடைச் சங்கங்களிற் பிறந்த ஏனைய நூல்கள் கடல் கோட்பட்டு அழிந்துவிட்டன என்றும், பரம்பரை வரலாறு கூறுகின்றது.

சங்க இலக்கியங்களை இரு பெருங்கூறுகப் பகுக்கலாம்: பத்துப்பாட்டு எட்டுத்தொகையென. பத்துப் பாட்டுக்களாவன: முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றை,

> "முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
> கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலை கடாத் தொடும் பத்து."

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். மலைபடுகடாம் என்ற நூலுக்குக் கூத்தராற்றுப்படை என்ற பெயரும் உண்டு.

முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்ற ஐந்து பாட்டுக்களும் ஆற்றுப்படை என்ற நூல் வகையைச் சார்ந்தவை. கொடையாளி ஒருவனிடம் பெருஞ் செல்வத்தைப் பரிசாகப் பெற்றுத் திரும்பும் கூத்தர் முதலியோர் வழியிலே எதிர்ப்பட்ட இரவலரைக் கண்டு, அக்கொடையாளியின் பெருமையைக் கூறி, அவனிடம் சென்று தாம் பெற்றது போல் பெருஞ் செல்வம் பெறுமாறு வழிப்படுத்துதலே இந்நூல் வகையின் கருத்து. ஆறு-வழி; படை - படுத்துதல். ஏனைய ஐந்து பாட்டுக்களில் மதுரைக்காஞ்சி, நிலையாமையை ஓர் அரசனுக்கு அறிவுறுத்தி, இவ்வுலகில் வாழும் நாட்களை, உயர்ந்த லட்சியங்களை மேற்கொண்டு, இனிதாகக் கழித்தல்வேண்டுமென வற்புறுத்துகிறது. குறிஞ்சிப்பாட்டு ஓர் ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தும்பொருட்டு இயற்றப்

பட்டதென்று சரித்திரம் வழங்குகிறது. இப்பாட்டுகளுட் சில அகப் பொருளையும் சில புறப்பொருளையும் பற்றியவை. அகம் என்பது காதல் பற்றிக் கூறும் பகுதி. புறம் என்பது அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைக் கூறும் பகுதி.

பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனும், சோழருள் கரிகாற் பெருவளத்தானும், தொண்டைமான் இளந்திரையனும் பத்துப் பாட்டிற் புகழப்பட்டிருக்கின்றனர்.

எட்டுத் தொகையாவன : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றை,

'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பத்திற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புறமேன்(று)
இத்திறத்த எட்டுத் தொகை'

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றியவை ; ஏனைய மூன்றும் புறப்பொருள் பற்றியவை. ஐங்குறுநூற்றில் ஐந்நூறு செய்யுட்களும் பதிற்றுப்பத்தில் நூறு செய்யுட்களும், பரிபாடலில் எழுபது செய்யுட்களும், கலித்தொகையில் நூற்றைம்பது செய்யுட்களும் உள்ளன. ஏனைய நூல்கள் ஒவ்வொன்றிலும் நானூறு செய்யுட்கள் உள்ளன. கலித்தொகை கலிப்பாவாலும், பரிபாடல் பரிபாட்டாலும் இயன்றன. மற்றை ஆறுதொகை நூல்களும் ஆசிரியப்பாவால் இயன்றன. அகம் பற்றியவற்றுள்—ஐங்குறுநூறு—திணை ஒவ்வொன்றுக்கும் நூறு வீதம்—குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை, நெய்தல் என்ற ஐந்து திணைகளுக்குமாக ஐந்நூறு செய்யுட்கள் கொண்டது. புறம் பற்றிய நூல்களுள், ஒவ்வொரு சேரனுக்கும் பத்துச் செய்யுள் வீதம், பத்துச் சேர அரசர்களுக்குரிய நூறு செய்யுட்கள் கொண்டது, பதிற்றுப்பத்து. எட்டுத் தொகை நூல்களுள் பரிபாடலுக்கு ஒரு தனிப்பட்ட சிறப்பு உண்டு. அதிலுள்ள பாட்டுக்கள் பண்முறையால் தொகுக்கப் பெற்று உரிய பண்களுடன் பாடப்பெற்று வந்தவை. கலித்தொகையிலுள்ள தமிழிசைகள் இசையோடு பாடுதற்கு ஒத்தனவா யுள்ளன.

தொகை நூல் ஒவ்வொன்றிலுமுள்ள செய்யுட்கள் பல புலவர்களால் பாடப்பெற்றவை. அப்புலவர்கள் ஓரிடத்தவரல்லர் ; ஓரினத்தவரல்லர் ; ஒரு காலத்தவருமல்லர் ; ஒரு சமயத்தைச் சார்ந்தவருமல்லர். அவர்களைக் கணக்கிட்டு 'நானூற்று நாற்பத்தொன்பதின்மர்' என்று களவியலுரை கூறும்.

சில புலவர்களுடைய பெயர்கள் காணப்படவில்லை. ஒருவருக்குக் 'கல்பொரு சிறு நுரையார்' என்று பெயர். அவர் இயற்றிய செய்யுளில்,

> 'கல்பொரு சிறுநுரை போல
> மெல்ல மெல்ல இல்லா குதுமே.'

என்று வந்துள்ளது. இங்கே காணப்படும் உவமானத்தினின்றும் அவருக்குப் பெயர் எழுந்துள்ளமை வெளிப்படை. ஆசிரியர் காலத்தே அவர்க்கு வழங்கிய இப்புனைபெயர் பிற்காலத்தும் வழங்கி, அதுவே பெயராக முடிந்திருக்கலாம். அல்லது, அவர் பெயர் மறைந்துபோன பிற்பாடு, செய்யுளின் தொடரினின்றும் ஒரு பெயர் பிற்காலத்தாரால் கொடுக்கப்பட்டும் இருக்கலாம். சில பெயர் முற்கூறியபடியும், சில பெயர் பிற்கூறியபடியும் தோன்றியிருத்தலும் கூடும். உண்மை இதுவென்று இப்போது தெரியக்கூடவில்லை. இங்ஙனம் புனை பெயருள்ளவர்கள் சுமார் இருபத்தைந்து ஆசிரியர்கள். இவர்களை நீக்கிப்போலும் களவியல் உரைகாரர் கணக்கிட்டது.

பெயர் தெரிந்த புலவர்களுள் சுமார் இருபத்தேழு பெண்பாற் புலவர்கள் காணப்படுகின்றார்கள். அதாவது நூற்றுக்கு ஆறு விழுக்காடு கணக்காகின்றது. பொதுமக்களிடையே கல்வி பரவாத முற்காலத்து இவ்வளவாகப் பெண்பாற் புலவர் இருந்தமை பாராட்டுதற்கு உரியது. இவருள்ளே ஔவையார், வெள்ளி வீதியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், பாரிமகளிர் முதலியோர் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள்.

தமிழிலே தொகைநூல்கள் மிகப் புராதன காலத்துத்தானே தொகுக்கப்பட்டமை போல, கிரேக்க மொழியிலும் மிகப் பழைய காலத்தில் 'அந்தாலஜி' என்று கூறப்படும் தொகைநூல் தொகுக்கப்பட்டுள்ளதென அறிகின்றோம். கிரேக்கத் தொகைநூலின் வரலாற்றைக் குறித்து ரிச்சேர்ட் கார்நெட் என்ற ஆசிரியர் விளக்கமாக எழுதியிருக்கின்றனர். அந்தாலஜி என்ற சொல்லுக்குப்

பூந்துணர் என்று பொருள். சுமார் கி. பி. 90-ல் மிலீகர் என்பவரால் இத்தொகைநூல் தொகுக்கப் பெற்றதாம். இத் தொகைநூற் செய்யுட்கள், தெய்வங்களையும், புகழ்பெற்று விளங்கிய அரசர் முதலிய பெரியோர்களையும், பெரு நிகழ்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. சுருங்கச் சொல்லல், பொருளாழமுடைமை, நவின்றோர்க் கினிய நன்மொழி புணர்த்தல், பொருளின் ஒருமை என்ற குணங்கள் இவற்றிலே நன்கு விளங்கின என்று சொல்லப்படுகிறது. இவ்வியல்புகளோடு பொருந்திய கிரேக்கத் தொகை நூல் புறநானூறு என்னும் தமிழ்த் தொகை நூலோடு பெரிதும் ஒப்பிடற்பாலதா யுள்ளது. மிலீகரது தொகை நூலுக்குப் பின் நான்கு தொகை நூல்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. இவைகளெல்லாம் அந்தாலஜி என்ற பெயராலேயே வழங்கின. இறுதியில் தொகுக்கப்பட்டது ஜஸ்டினியன் என்னும் அரசன் (கி. பி. 483-565) காலத்திலாகும். இந்தத் தொகை நூலிலே காதற்செய்யுட்கள் பல துறைகளாகப் பகுக்கப்பட்டுச் சேர்க்கப்பெற்றுள்ளன என்று அறிகிறோம். இதனோடு தமிழ்த் தொகைநூல்களுள் அகப்பொருள் கூறுவனவாய் அமைந்துள்ள நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்தும் ஒப்பிடத்தக்கன.

பழமையிலும் பொருளமைதியிலும் செய்யுள் நயத்திலும் மாத்திரமே யன்றி வேறு சில அம்சங்களிலும் இவ்விரு மொழிகளிலுமுள்ள தொகைநூல்கள் ஒப்பிடற்குரியன. கிரேக்க நாகரிகம் நீடித்திருந்த காலத்தில் அதன் நிலைமை பலபடியாக மாறிவந்திருக்கின்றது. இம் மாறுபாடுகளுக்கு இடையேயும் கிரேக்கத் தொகை நூல் கிரேக்கர்களுக்குப் புத்துயிர் கொடுத்துதவிய அமிர்த சஞ்சீவினியாய் நீடித்து நிலைத்து வந்திருக்கின்றது. இதுவே போன்றுள்ளன தமிழ்த் தொகை நூல்களும். இரண்டிலும் பழைய நாகரிகங்களும் பழக்க வொழுக்கங்களும் பிரதிபலித்துக் காண்கின்றன. பிற்காலத் தெழுந்த இலக்கியங்களின் நெறியை வரம்பு கட்டுதற்கும் இத்தொகைநூல்கள் உதவின. இவ்வாறாகப் பலபடியாலும் இரு தேசத்துத் தொகைநூல்களும் ஒன்றோடொன்று உவமிக்கக் கூடியனவா யுள்ளன.

தொகைநூற் செய்யுட்களிலே சிறந்து விளங்குகிற சில பொதுவியல்புகளை இனிக் கவனிப்போம். பின்வருவது புறநானூற்றுச் செய்யுள் :

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும், தொடைபுணர்ந்(து),
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்(கு) என்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப ;
சாலார் சாலார் பாலரா குபவே.

இது பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் இருந்த நட்பினைக் கண்டு கண்ணகனர் என்ற புலவர் பாடியது. 'இனம் இனத்தோடு' என்ற பழமொழியின் கருத்து இச்செய்யுளோடு ஒப்பிடத்தக்கது. சான்றோர் வெவ்வேறு இடங்களில் தோன்றி வாழ்ந்தபோதிலும் ஒருவரோடொருவர் நெருங்கிய கேண்மை கொள்வார் என்பது செய்யுளின் கருத்து. இதற்கு ஓர் உபமானம் தரப்படுகிறது. பொன்னும் பவளமும் முத்தும் இரத்தினமும் ஒன்றனின் றொன்று வெகுதூரத்தில் தோன்றிய போதிலும், விலைமிக்க நல்ல அணிகலமொன்று அமைக்குங் காலத்து, அவை ஓரிடம் வந்து கோவை பொருந்திச் சேருகின்றன-என்பது உபமானம். இதன் அழகும் நயமும் அறிந்து இன்புறத் தக்கன. 'சாலார் சாலார் பாலராகுபவே' என்பது சொல்லியொழிக்க வேண்டியதாதலாலே, அவ்வடியை இலேசாக உச்சரித்து விட்டு விடுதல் வேண்டும். உபமானம் சொல்லும் வரையும் எதுகை மோனை நயங்களால் செய்யுளடிகள் சிறந்து விளங்குவதும், அது முற்றிய பின், கருத்தின் தனியாற்றலே துணையாக மோனை முதலிய நயமின்றியும் அழகுபடக் கடைசி யிரண்டடிகள் அமைந்திருப்பதும் புலவரின் கவித்வ சக்தியை அறிவுறுத்துகின்றன. கருத்துக்கேற்ற சொற்கள், சுவைத்துத் தேர்ந்தெடுத்த சொற்கள், கட்டுரைச் சுவைபட அமைந்த சொற் செறிவு, எளிமையும் ஆற்றலும் படைத்த செய்யுள் நடை, கம்பீரமான ஓசை நயம், பொருள் செல்லும் கதியும் செய்யுளின் கதியும் ஒன்றையொன்று தழுவி நிற்கும் அமைதி—இவை யனைத்தும் இச் செய்யுளில் விளங்குகின்றன. இவ் வியல்புகள் சங்கச் செய்யுட்களுட் பெரும்பாலனவற்றிற் காணப்படுகின்றன. இத்தகைய செய்யுட் செல்வம் நம்மவரால் என்றும் போற்றுதற் குரியது.

# 4. இளவரசர் துறவு*

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

சேர அரசர்களுள் ஒருவனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன் வெற்றி மிடுக்கொடு வஞ்சி மாநகரத்தில் தனது சிங்காசனத்தில் வீற்றிருந்தான். கடம்ப அரசர்களை வென்று ஜயங்கொண்டதும், தமிழ் நாடு முழுவதையும் அடிப்படுத்தி வடநாட்டுக்கும் சென்று இமயமலை வரையில் தன் வீரத்தை நிலைநாட்டி, அப்பெருமலை மிசையே தனது விற்கொடியை ஏற்றிக் குமரி முதல் இமயம் வரையில் தன் பெயர் வழங்கச் செய்ததும் ஆகிய பெருஞ் செயல்களை வந்தியர் வாழ்த்திக்கொண்டிருந்தனர். அச்சக்கரவர்த்தி எல்லாவகையிலும் மகிழ்ச்சி நிரம்பி நவமணி பதித்த திருமுடி இலங்கப் பெருமிதத்தோடு இருந்தான்.

தமிழ்ப் புலவர்களும் வடமொழி வித்துவான்களும் எப்பொழுதும் ஆராய்ச்சி மிக்க வாதசபைகளை நடத்துவதற்கு இடமாக இருந்தது வஞ்சிமா நகரம். அரிய கலாவிற்பன்னர்கள் கூடித் தம்முடைய ஆற்றலைக்காட்டி அரசனிடம் பரிசு பெற்றுச் சென்றனர். தன்னுடைய ஆட்சிக்காலத்தில் பெரும்போர்களைச் செய்து வெற்றி மகளை மணந்துகொண்ட அரசன் அப்பொழுது தன் வாழ்வை அமைதியாகக் கழிக்க எண்ணினான். தனக்குப் பின் பட்டத்துக்கு ஏற்றவனாகவும் இளமையிலேயே அருள்வலி ஆண்மை கல்வியென்னும் குணச்சிறப்புடையவனாகவும் விளங்கிய தன் மூத்த மகன் செங்குட்டுவனுக்கு இளவரசுப் பட்டம் ஈந்து, அரசியலிற் பெரும் பகுதியை அவனே கவனிக்கும்படி அமைத்தான். செங்குட்டுவனுக்கு இளையவனாகிய அரசகுமாரன் ஒருவன் இருந்தான். அவன் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவனாகவும் பட்சபாதமற்ற நடையுடையவனாகவும் திகழ்ந்தான். அவனையும் அரசியலில் பயன்படுத்திக் கொள்ள எண்ணிய அரசன் பெருநம்பியென்னும் பதவியை அவனுக்கு அளித்தான்.

செங்குட்டுவன் இளவரசனாக இருந்து சேரநாட்டு அரசியலை நெறிவழுவாமல் நடத்தும் திறமையைப் பெறலானான். அவனுக்கு இளைய அரசிளங்குமரனே பெருநம்பிப் பட்டம்பெற்று மந்திரிகளுக்

---

* 'கலைமகள்' 41-ல் பொங்கல் மலரில் வெளியானது.

கெல்லாம் தலைவனாகி அரசியலில் தலைமை பெற்ற காரியங்களை யெல்லாம் நிர்வகித்து வந்தான்.

இவ்வாறு தன் மக்கள் இருவரும் அரசியல் தேரை இனிது நடத்தி வந்ததைத் தன் கண்ணாற் கண்ட பேரரசனாகிய நெடுஞ் சேரலாதன், 'நம் காலத்திற்குப் பின்னும் இவ்விருவரும் நல்லுறவு பூண்டு இவ்வாறே விளங்குவர்; சேரநாட்டுக்கு இரண்டு கண்மணி களைப்போல இவர்கள் இருப்பார்கள்' என்று எண்ணி உள்ளம் பூரித்தான்.

ஒருநாள் பொன்னும் மணியும் இழைத்த திருவோலக்க மண்டபத்தில் சிங்கம் சுமந்த பொங்கணைமீமிசை, இருபக்கமும் மகளிர் கவரி வீச அரசன் வீற்றிருந்தபோது அவ்வரச சபைக்கு ஒரு சோதிடன் வந்தான். அவன் சேர அரசனது அவைக் களத்துச் சோதிடனல்லன்; அரசன் கலைவல்லுநர்களைப் பாராட்டிப் பரிசளிப்பவனென்பதைக் கேள்வியுற்று அவனைப் பார்த்துச்செல்ல வந்தவன். அவன் வந்து அரசனைப் பணிந்து அங்கே இருக்கையில் அரசன் அவனது வரலாற்றை விசாரித்தான். அவன் ஒரு சோதிட னென்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தான்.

'உமக்கு அந்தக் கலையில் எத்தகைய வன்மை உண்டு? என்று சேர அரசன் கேட்டான்.

'ஜாதகசக்கரம் இல்லாமலே ஒருவருடைய அங்க அமைப்பைக் கொண்டே அவருடைய எதிர்கால நிகழ்ச்சிகளைச் சொல்லுவேன்' என்றான் அவன்.

'அப்பாடியாயின் நாம் இவ்வரசாட்சியை இன்னும் எவ்வளவு காலம் தாங்க வேண்டியிருக்கும்?' என்று அரசன் கேட்டான்.

சோதிடன் பெரிய தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண் டான். அரசன் தன் ஆயுட்காலம் எப்போது முடிவடையுமென் பதையே வேறு வகையாகக் கேட்டான். அதை எப்படிச் சொல் வது? அரசன் ஆயுட்காலம் முடிவதற்குமுன் சோதிடனது ஆயுட் காலம் முடிந்தாலும் முடியலாம். சேர அரசன் அத்தகையவனல்ல னென்பதைச் சோதிடன் அறிவான்; ஆனாலும் எப்படித் துணிந்து சொல்வது?

அவனது மனக்கலக்கத்தை அரசன் உணர்ந்தான் 'தைரியமா கச் சொல்லும். சாஸ்திர விஷயங்களில் பக்ஷபாதமே கூடாது. பொய்யும் சொல்லக் கூடாது. நம்முடைய நாட்டிலே சாஸ்திரத்

துக்கு யாவரும் தலைவணங்குவர். நாம் சக்கரவர்த்தி என்ற நினைவை மறந்து உண்மையைச் சொல்லும்' என்று அரசன் வற்புறுத்தினன்.

சோதிடனுக்குத் துணிவு பிறந்தது. 'அறிவாளியாகிய இவ்வரசனிடத்தில் உண்மையைச் சொல்வதால் ஒரு கேடும் வராது; அப்படி ஏதாவது அபாயம் உண்டானல் இவனுக்கே அழியாப் பழி நேர்ந்து விடும்' என்று எண்ணியவனாகி எழுந்து அரசனை அடிமுதல் முடிவரையில் நோக்கினன். பிறகு சொல்லத் தொடங்கினன்.

'மன்னர் பிரானுடைய அங்க அடையாளங்கள் இறைவன் திருவருளைப் பெறுவதில் நெடுங்காலம் காத்திருக்கவேண்டாம் என்பதைத் தெரிவிக்கின்றன' என்ருன் அவன். அரசனுக்கு விஷயம் இன்னதென்று விளங்கிவிட்டது. சோதிடன்பால் அவனுக்கு எள்ளளவும் கோபம் உண்டாகவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு, 'சரி; இதோ இருக்கிருர்களே; இவர்களைப் பார்த்து ஏதேனும் சொல்ல முடிந்தால் சொல்லும்' என்று இரண்டு அரச குமாரர்களையும் சுட்டிக் காட்டியபடியே அரசன் கேட்டான்.

சோதிடனுக்கு உண்மையைக் கூறுவதனல் இந்த ராஜசபையில் தீங்கு ஒன்றும் நேராது என்ற தைரியம் பலமாக உண்டானதால் உடனே அவ்விருவரையும் உற்று நோக்கினன்; பெருநம்பியாக விளங்கிய இளைய குமாரனைக் கூர்ந்து பார்த்தான்.

'அரசர்க்கரசே, இவ்விளங்குமாரன் அந்தமில்லாத இன்பத்தையுடைய அரசை ஆளும் உரிமை பெறுவானென்று இவனது முகக்குறிகள் காட்டுகின்றன.'

இவ்வாறு சோதிடன் சொன்னபோது அங்கிருந்த யாவருடைய முகத்திலும் திடீரென்று மேகம் படர்ந்தாற்போன்ற வேறுபாடு ஒன்று உண்டாயிற்று. அரசன் நிலை கலங்கிப் போனன். இளவரசப் பட்டத்தில் இருந்த செங்குட்டுவனுக்குக் கண்கள் சிவந்தன. அவை அரசனைப் பார்த்தபடியே நின்றன; 'என்ன இது?' என்று கேட்பதுபோல் இருந்தது அவன் பார்த்த பார்வை.

'இந்த விஷயம் உண்மையாகுமா? அரசனுடைய மூத்த குமாரன் அல்லவா அரசாட்சிக்கு உரியவன்? இளைய குமாரனுக்கு எப்படி அவ்வரசுரிமை கிடைக்கும்? ஒருகால் செங்குட்டுவனுக்கு

ஆயுட்பலம் போதாதோ !' என்றெல்லாம் சபையிலிருந்த சான்றோர் எண்ணலாயினர்.

இந்தச் சோதிடத்தைச் சொன்ன நிமித்திகன் கருங்கற்சிலை போல அங்கே இருந்தான். சிறிது நேரம் அலையோய்ந்த கடலைப் போல அந்தச் சபை ஒலியடங்கி இருந்தது.

பெருநம்பியாக இருந்த அரசிளங்குமாரன் ஒரு முறை சுற்றி லும் பார்த்தான் ; எல்லோருடைய முகங்களும் ஒளியிழந்திருந்தன. தன் தமையன் கண்கள் தீப்பொறி கக்குவதைக் கண்டான். சிங்க வேறு போலத் திடீரென்று எழுந்தான். சோதிடன்மீது அவன் பார்வை சென்றது.

'சோதிடரே, நீர் உம்முடைய கலையில் வல்லவராக இருந்தா லும், கால தேச வர்த்தமானங்களைத் தெரிந்து உண்மையை ஆராய வேண்டும். மூத்தமகன் இருக்க இளையவன் பட்டம் பெறுவதென் பது இந்த நாட்டிலே நிகழாத காரியம். நீர் முறைமறந்து சொல்லி விட்டீர். உம்முடைய சோதிடம் பொய்யாகிவிடுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தர்மத்துக்கு மிஞ்சிய சாஸ்திரம் எது? முந்தையோர் நெறியினின்றும் வழுவுவதென்பது இந்த மண்ணில் இல்லை. உம்முடைய சோதிடம் பொய்த்துப் போவதை இனிப் பல வருஷங்கள் கழித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. என் தந்தையார் மனக் கலக்கத்தை நான் உணர்கிறேன். அவர் முதிய பருவத்தில் சோதிடத்தால் அஞ்சி இனி என்னுருமோ என்று ஏங்க வேண்டாம். என்னுடைய தமையனும் எம் தந்தையாருக் குப்பின் அரசராவதற்குத் தனியுரிமை உள்ளவருமாகிய செங்குட்டு வர் தம் சினத்தை ஒழிவாராக. இங்குள்ள சான்றோர் தருமம் வழுவி விடுமோ என்று இப்போது அஞ்சுகிறார்களென்று தெரிகிறது. அந்த அச்சமும் அவர்களுக்கு வேண்டாம். இதோ இந்த நிமிஷத் திலே எல்லோருடைய கவலையையும் போக்கிவிடுகிறேன். என் சபதத்தைக் கேளுங்கள்.'

அந்த வீரத் தொனி எல்லோரையும் கனவுலகத்திற்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. 'இவர் என்ன சொல்லப் போகி றார்? என்ன சபதம்! என்ற தீவிரமான ஆவல் எல்லோர் உள்ளத்தையும் பற்றிக்கொண்டது.

'ஆம். நான் சபதம் செய்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் இதற்கு சாக்ஷி. தர்ம தேவதை இதைக் கேட்கட்டும். இங்குள்ள

சான்றோர் கேட்டு ஆசிர்வாதம் செய்யட்டும். என் தந்தையார் பொறுமையோடு கேட்டுக் கலக்கமின்றி இருக்கட்டும். என் தமைய னும் கேட்டு ஆறுதல் பெறட்டும். தெய்வத்தின்மேல் ஆணையாக நான் இன்றே, இப்பொழுதே துறவு பூண்கின்றேன்.'

அங்குள்ளவர் யாவருடைய உள்ளங்களையும் உயிர்களையும் அவ் வார்த்தைகள் உருக்கிவிட்டன.

வார்த்தைகளோடு அவன் நிற்கவில்லை. தன்மேலுள்ள ஆப ரணங்களைக் கழற்றித் தந்தையார் முன் வைத்தான்.

அரசன் கண் கலங்கினன். சான்றோர் அழுதனர். செங் குட்டுவன் ஓடிச்சென்று இளவலைக் கட்டித்தழுவிக் கோ வென்று கதறினன்.

'என்னப்பா இது! இந்தச் சபதம் செய்யலாமா?' என்றான் சேரலர் கோமான்.

'எல்லோருக்கும் நலம் தரும் சபதம் இது. இதுவரையில் இவ்வரண்மனை எனக்குரிய வீடாக இருந்தது. இன்று முதல் குண வாயிலிலே இருக்கும் கோயிலே என் இருப்பிடமாகும். இந்தச் சோதிடரே எனக்கு இத்தகைய வைராக்கியம் உண்டாவதற்குக் காரணர் ஆனர். இவர் கூறிய சோதிடம் பொய்படவில்லை. மற்ற வர்கள் நினைத்தபடி ஆகாமல் அந்தச் சோதிடம் பொய்த்ததேயன்றி உண்மையாக அது பொய்க்கவில்லை. நான் இதுவரையில் யுவராஜ னக இருந்தேன். இனி நான் தவராஜனக இருப்பேன். செங்குட்டு வர் சேரநாட்டு அரசுரிமையைப் பெறுவார். நானே சோதிடர் கூறியபடி சிந்தைக்கும் எட்டாததும் அந்தமில்லா இன்பத்தை யுடையதுமாகிய மோக்ஷ சாம்ராஜ்யத்தின் அரசுரிமையைப் பெறு வேன். நான் விடை பெறுகிறேன்.'

இளங்கோவாகிய அவர் கம்பீரமாக நடந்துபோனபோது அங் கிருந்தோர் கண்களிலிருந்து பொங்கித் துளித்த நீர்த்துளிகள் அவர் திருவடி மலர்களுக்குப் பாத்திய நீராயின.

இளங்கோவாக இருந்த அப்பெருமான் இளங்கோ அடிக ளானர். அருள் நிரம்பிய நெஞ்சுடைய அவர் இயற்றியதே சிலப் பதிகாரம் என்னும் அரும் பெரும் காப்பியம்.

# 5. இளங்கோ துறவு

அடியார்க்கு நல்லார்

குமரியொடு வடஇமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத், திகழ் ஒளி ஞாயிற்று ஏழ்பரி நெடுந்தேர்ச் சோழன் தன் மகள் நற்சோணை ஈன்ற மக்கள் இருவருள்,

முன்னோன் தன்னைப் பின்னர் இயற்றிப், பின்னோன் தன்னை யும் பெருநம்பியாகென,

அன்னவர் தம்மொடு தென்னர் செம்பியர் தன்னடி போற்றத், தமனிய மண்டபத்துச் சிங்கஞ் சுமந்த பொங்கணை மீமிசை உவரித் திரையிற் கவரி இரட்ட வேந்தன் இருந்துழிச்,

சார்ந்த நிமித்திகன், அடிமுதல் முடிவரை நெடிது நோக்கி, இன்தோள் கழியப் பொன்திகழ் உலகந் சேர்தி நீ எனச் சேரலற்கு உரைத்து, அவன் மைந்தரை நோக்கி, நந்தாச் செங்கோல் அந்தமில் இன்பத் தரசாளுரிமை இளையோற்கு உண்டென,

உளைவனன் நனிவெகுண்டு அழுக்காற்று ஒழுக்கத்து இழுக்கு நெஞ்சினன் கண்ணெரி தவழ அண்ணலை நோக்குங் கொங்கவிழ் நறுந்தார்க் கொடித் தேர்த்தானைச் செங்குட்டுவன் தன் செல்லல் நீங்க,

பகல் செல் வாயிற் படியோர் தம்முன் அகலிடப் பாரம் அகல நீக்கிச், சிந்தை செல்லாச் சேணெடுந்தூரத்து அந்தமில் இன்பத்து அரைசாள் வேந்தாயினன்.

—சிலப்பதிகாரவுரை

# 6. தமிழிசை

இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், பி.எ., பி.எல்.

நமது முன்னோர்கள் தமிழை இயல் இசை நாடகம் என்ற முப்பகுதிகளாக வகுத்து வழங்கினர் ; தமிழ் மொழியை முத்தமிழ் என்றும் குறித்தனர். ஆகவே இம்மூன்று பகுதிகளுக்கும் ஒத்த சிறப்பு இருந்திருக்க வேண்டும். இயற்றமிழுக்கு எத்துணைச் சிறப்புத் தந்தனரோ அத்துணைப் பெருமை இசைக்கும் நாடகத்துக்கும் தந்திருக்கவேண்டும். பண்டைக் காலத்தில் இயற்றமிழுக்கு இலக்கியமும் இலக்கணமும் ஏற்பட்டாற்போல இசைத்தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் ஏற்பட்டிருந்தன. சிலப்பதிகார உரையுள் அடியார்க்கு நல்லார் இசை நுணுக்கம் முதலிய பல இசைநூல்களைக் குறிப்பிடுகிறார். அவைகளெல்லாம் மறைந்து போயின. இயல் இசை நாடகம் ஆகிய மூன்று பகுதிகளும் ஒருங்கு சேர்த்துச் செய்யப்பெற்ற நூல் ஒன்றே உள்ளது. அதுவே சிலப்பதிகாரம் என்பது.

பின்வந்த தமிழ் மக்கள் இசை நூல்களையும் நாடகங்களையும் போற்றாமல் புறக்கணித்துவிட்டதன் காரணம் எளிதிற் புலப்படவில்லை. அரசியற் புரட்சிபோன்ற ஏதேனும் ஒரு பெரிய விபத்தினால் இவை மறைந்திருத்தல்கூடும். எல்லாவற்றுக்கும் ஊழின் பெருவலியையே நொந்துகொள்ளவேண்டியிருக்கிறது. இயல் ஒன்றே உயிர் பெற்று நின்றது. இசையும் நாடகமும் பல நூற்றாண்டுகளாகப் பாராட்டப்படாமற் போயின.

சங்கத்தார் காலத்துக்குப் பிறகு தமிழ்நாட்டில் சைவ வைணவ எழுச்சி வரும் வரையில், புத்த சமண சமயங்களின் மேம்பாடே இருந்து வந்தது. அச்சமயத்தினர் அறவொழுக்கத்தையே மும்மரமாகக் கொண்டனர். தவமே அவர்களது சிறந்த குறிக்கோளாதலால் இசையையும் நாடகத்தையும் அவர்கள் இன்பப் போக்கெனக் கருதி வெறுத்திருந்தனர் போலும். ஆகவே, அவர்களிடம் இயல்மாத்திரம் முன்னேற்றமடைந்தது ; இசை உறங்கிற்று ; நாடகம் நடிப்பும் துடிப்புமற்றுக் கிடந்தது.

இங்கிலையில் சைவ சமயம் ஏழாவது நூற்றாண்டில் தழைக்கத் தொடங்கிற்று. சமயாசிரியர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர்

மூவரும் இன்னிசையின் துணைகொண்டு தேவாரங்களை ஓதி மக்களைத் தம்வழிப் படுத்தினர்; இசைக்குள்ள கவர்ச்சிப் பண்பை நன்கறிந்து அதனைச் சமயப் பிரசாரம் செய்வதற்குப் பயன் படுத்திக் கொண்டனர். வாய்ப்பாட்டுக்குத் துணையாக யாழ், தாளம் முதலிய இசைக் கருவிகளையும் பயன்படுத்திக் கொண்டனர். திருஞானசம்பந்தருடைய இனிய குரலோசையோடு திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய இனிய யாழோசையும் கலந்தது; திரள் திரளாக மக்களைக் கவர்ந்தது; பதினாறாயிரம் போன்ற பெருந்தொகையான திருநீற்றுத் தொண்டர் குழாம் எப்போதும் தொடர்ந்து வரும்படியாகச் செய்தது. இவ்விசையின் ஆற்றலை யுணர்ந்த சுந்தரர் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்' என்று வாயாரப் புகழ்ந்தார்.

ஏறக்குறைய 600 ஆண்டுகள் வரையில் இசைக்கு நல்ல ஆதிக்கம் இருந்தது. இக்காலத்திலேதான் தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்விய பிரபந்தம், திருவிசைப்பா முதலியன தோன்றின. இவை பண்ணோடு பாடப்பட்டன. பெண் சுமந்த பாகத்தன் இப்பண்சுமந்த பாடல்கட்கு விண்சுமந்த வியன் கீர்த்தியையே பரிசாகப் படைத்தருளினான். இப் பெருங் கீர்த்தி இன்றும் நின்று நிலவுகின்றது; என்றும் நின்று நிலவும் தன்மை யுடையது. இக்காலத்தில் தமிழ் நாடெங்கும் இசைமயமாகவே காணப்பட்டது. முதல் இராஜராஜ சோழன் தஞ்சைப் பெருவுடையார் திருத்தளியில் திருப்பதிகம் விண்ணப்பிக்க ஐம்பது ஓதுவார் மூர்த்திகட்கு மானியம் அளித்தனன். சிறப்பு வாய்ந்த பல கோயில்களில் பெரிய திருப்பாட்டு ஓதவும் திருப்பதியம் விண்ணப்பிக்கவும் திருநெடுந்தாண்டகம் திருவாய்மொழி முதலியன பாடுதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கல்வெட்டுக்கள் மூலம் சாசனங்களும் எழுந்தன. யாழ் வாசிப்பதற்கும், குழல், கொட்டி மத்தளம் முதலியவற்றை இசைப்பதற்கும் சாதனங்கள் பிறந்தன. ஏழிசையாய் இசைப்பயனாய்த் தமிழ்த் தெய்வம் விளங்கிற்று.

பிறகு சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காவியங்களிலுள்ள கவர்ச்சியாலும், இராமாநுஜர் போன்ற சமயப் பெரியார்கள் நிகழ்த்திய தத்துவ ஆராய்ச்சியின் வலியாலும், தமிழ் மக்கட்கு இசையிலிருந்த ஈடுபாடு குறையத் தொடங்கிற்று.

துறவிகட்கும், மடங்கட்கும் செல்வாக்கு அதிகரிக்கவே, இசைக்குள்ள ஆதரவு குறைந்துவந்தது.

பிறகு பதினான்காம் நூற்றாண்டில் தமிழ்நாடு விஜயநகர மன்னர் ஆட்சிக்குள்ளாயிற்று. அம்மன்னர் பிரதிநிதிகளாக வடவேங்கடத்திருந்து தென்குமரிவரையில் பல வடுகக் குறுநில மன்னர் ஆண்டனர். இவர்களே நாய்க்க அரசர்கள் எனப்படுவோர். இவர்கள் வடுகநாட்டிலிருந்து தங்களுடன் கருநாடக இசையையும் தெலுங்கு பாஷையையும் கொண்டுவந்தனர். தமிழ்நாடெங்கணும் கருநாடக இசையும், தமிழும் தெலுங்கும் ஆரியமும் கலந்த பாடல்களும் பரவின. இக்காலத்தில் விளங்கிய அருணகிரிநாதர் பாடல்களில் மிகுதியான வடசொற்களும் புதிய புதிய சந்தங்களும் மிளிர்கின்றன.

பின்வந்த மகாராஷ்டிர மன்னர்களும் கருநாடக இசையையும் வடமொழி விரவிய பாடல்களையுமே ஆதரித்தனர். பிற்காலத்திய தமிழ்ப் புலவர்களும் கீர்த்தனை, பதம், குறவஞ்சி, சிந்து முதலிய இசைப் பாடல்களைக் காலத்துக்கேற்றவாறு பாடினார்கள். ஆகவே, 'செங்கோலுக்கு விஞ்சிய சங்கீதமில்லை' என்ற பழமொழிக்கு ஒரு புதிய உரை கூறுவது போலவே, தமிழ்நாட்டின் இசை பரதேச உடைபோர்த்துப் பரதேச உணவருந்தி மறைந்தது. இக்காலத்தில் பற்பல இசைமன்றங்களும் இசைவாணர்களும் தோன்றியும் பண்டைய தமிழ்ப்பண் உயிர்பெற்றெழவில்லை. இனியேனும் இதையறிந்து இக்குறையைப் போக்குவோமாக.

இசைக்கு இன்றியமையாத பண்புகள் அளபெடையும் அடுக்குச் சொற்களுமேயாம். இப்பண்புகள் பண்டைக்கால முதல் வழங்கப்பெற்று வருகின்றன. இவை ஒவ்வொரு மொழியிலும் உள்ளன. அங்ஙனம் தமிழிலும் உள. அளபெடையைக் குறிப்பதற்கு ஒரு நெடுங்கணக்கு உண்டு. அதனை மேற்கு நாடுகளில் ஒரு தனி எழுத்துத் தொடராகவே கொண்டிருக்கிறார்கள். நமது நாட்டில் அதனை வடமொழிச் சார்பான மொழிகளில் ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு எழுத்துக்களால் குறிக்கின்றார்கள். தமிழில் முற்காலத்தில் அவ்வாறு இல்லை. அளபெடையை உயிர் எழுத்தானால் நெடிலுக்குப் பின் அதைச் சார்ந்த குறில் எழுத்தின் சேர்க்கையாலும், மெய் எழுத்தானால் அடுக்கிய

ஒற்றுக்களாலும் குறித்து வந்தார்கள். உதாரணமாக "பைந் தொடீஇ" "நமச்சிவாய வா அழ்க" "அவனருளாலே அவன்றாள் வணங்ங்கி" என்பவைகளில் காண்க. இசையில் அளபெடையின் மாத்திரை இன்னமும் நீளும். அளபெடையை வடமொழியில் ஆலாபனம் என்னலாம். அது ச ரி க ம ப த நி என்ற எழுத்துக்களால் இக்காலத்தில் குறிக்கப்படும். அவ்வாறு குறிப்பதனுல் அதனை அநுசரித்து மற்றவரும் எளிதில் பாடலாம். மேற்கு நாட்டு மொழிகளிலும் மேற்கூறிய தனி எழுத்து மூலமாகவும் பாட முடியும்.

தமிழில் அளபெடையைத் தவிர வேறு குறியெழுத்துக்கள் பயிலாத நிலைமையினுல் பண்டைய இசைமுறைகளை நாம் அறிவதற்கு இடமில்லை. (ஆங்கிலத்தில் இதனை Notation என்பார்கள். கர்நாடகத்தில் சுவரம் என்பார்கள்.) ஆனல் அடுக்குச் சொற்களோ எக்காலத்திலும் இருந்தன என்னலாம். பண்டைக் காலத்தில் அடுக்குச் சொற்கள் பாடல் நடுவிலே வரும். உதாரணமாக,

'திங்கள் மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி !
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணுய் !
மங்கைமாதர் பெருங்கற்பேன் றறிந்தேன் வாழி காவேரி !'

சிலப்-கானல்வரி

இறுதியில் வருவன :

'மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியோடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.''

சிலப்-ஆய்ச்சியர் குரவை

* * * *

இக்காலத்தில் வடமொழி கருநாடகப் பழக்கத்தை அநுசரித்து, முதலில் அடுக்குச் சொற்கள் வருகின்றன. அந்த முறைக்குப் பல்லவி, அநுபல்லவி என்று பெயர்.

* * * *

# 7. காப்பிய ஆசிரியர் வீரமாமுனிவர்

எஸ். தனிநாயக அடிகள், டி. டி. (ரோம்) ; எம். ஏ.*

தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும் காப்பியங்கள் பல் வேறு சமயங்களைச் சார்ந்தவை. மணிமேகலை புத்த ஆசிரியரால் வரையப் பெற்றது. சீவகசிந்தாமணி சமணரால் இயற்றப்பெற்றது. கம்ப இராமாயணத்தை வைணவர் போற்றுவர். சேக்கிழாரின் பெரிய புராணத்தைச் சைவர் தலைமேற்கொள்வர். உமறுப் புலவர் பாடிய சீறாப்புராணம் மருமது நபியின் வரலாற்றைக் கூறும். இவ்வாறே வீரமா முனிவர் யாத்த தேம்பாவணி யென்னும் பெருங் காப்பியம் கத்தோலிக்குக் கருத்துக்களையும், கிறிஸ்து பெருமா னுடைய பெற்றோரின் வரலாற்றையும், கிறிஸ்து பெருமானின் வரலாற்றையும், அவர் நிறுவிய சமயச்சபையின் வரலாற்றையும் கூறும்.

தேம்பாவணி யெனும் தொடர்நிலைச் செய்யுளை நன்கு படிப் பதற்கு, அதனை இயற்றிய புலவரின் வாழ்க்கை வரலாற்றை அறிவது இன்றியமையாதது. வீரமாமுனிவர் பிறநாட்டவர். பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் நாட்டில் நாற்பது ஆண்டுகளாகக் கத்தோலிக்குக் குருவாய்த் தொண்டு புரிந்து தமிழகத்தில் தமிழரினும் தமிழனாய் உயிர்துறந்தவர். தம் முப்பதாம் ஆண்டின் பின், பிற மொழியைக்கற்று இத்துணை புலமை பெற்று விளங்குவதற்கு உலகவரலாற்றில் வீரமா முனிவருக்கு வேறு ஒப்பற்ற சான்று இல்லை. 'ஜோசை கொன்ராடு'[1] போலந்து நாட்டவர். ஆங்கிலத்தில் சிறந்த நூலாசிரியர். ஆனால், அவரோ தம் பதினேழாம் ஆண்டில் ஆங்கிலம் கற்கத் தொடங்கினர். மேலும் இத்தாலியத்திற்கும் தமிழிற்கும் இருக்கும் தூரம் ஆங்கிலத் திற்கும் போலிஷ்க்கும் இல்லை.

வீரமாமுனிவர் தமிழ்த்தொண்டும், சமயத்தொண்டும் செய்து வந்தவர் ; அவர் சமயத் தொண்டு தமிழ்த் தொண்டிற்கு உதவியது போல், அவர் தமிழ்த்தொண்டு சமயத்தொண்டிற்கு உதவியாயிற்று.

---

* Rev. Fr. X. S. Thaninayagam, D. D. (Rome) M. A.

1 Joseph Conrad

## நூலின் சுருக்கம்

தேம்பாவணியில் அடங்கிய காண்டங்கள் மூன்று ; படலங்கள் முப்பத்தாறு ; செய்யுட்கள் மூவாயிரத்து அறுநூற்றுப்பதினைந்து. வீரமாமுனிவரின் இயற்பெயர் சூசை; எனவே, தான் தாங்கிய பெயரின் நாமகனை இக்காப்பியத்தில் போற்றினார் போலும். இஸ்பானிய தேயத்தில் ஆகிர் என்பது ஒரு நகர். அங்கு யேசு பற்றுமிக்குடைய கன்னி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் இறைவனின் திரு அருளால் யேசுநாதரின் காவல் தந்தையாகிய சூசை யெனும் திருத்தொண்டரின் வரலாற்றை எழுதலானாள். அந்நூலே நம் புலவருக்கு முதல் நூலாகும். இனி, விவிலிய நூலில் வரும் பல வரலாற்றுக்களையும் தன்னுடைய சொந்தக் கருத்துக்களையும் சேர்த்துக் காப்பியத்தை இயற்றினார்.

காப்பிய ஆசிரியர் அனைவரும் அவ்வாறே செய்வர். தமிழில் கம்பரும், ஆரியத்தில் காளிதாசரும், கிரேக்கில் ஹோமரும், இலத்தீனில் வெற்ஜிலும், இத்தாலியத்தில் தாந்தேயும், போத்துகீதத்தில் காமோவும், ஆங்கிலத்தில் மில்டனும் தம் காப்பியங்களில், நிகழ்ந்ததை மட்டும் கூறவில்லை. அடிப்படையான வரலாற்றை வைத்துக்கொண்டு, தங்கள் நோக்கத் தோடொப்ப, காப்பியத்தை விரிப்பர். பல சிற்றாறுகள் வந்து விழும் பேராற்றைப் போல், பல சிறுகதைகளும் வரலாறுகளும் செய்திகளும் திரண்டு, சிறப்புறப்போடு இயைந்து, தொடர் நிலைச் செய்யுள் உருவாகும்.

பாலஸ்தீன் [3] நாட்டில் யூதர்குலத்தில் பாட்டுடைத்தலைவராகிய சூசை பிறக்கின்றார். அவர் மக்களில் ஒப்பாரும் மிக்காருமின்றி வளர்ந்து இளைஞராகவே துறவறம் புக எண்ணி வனத்தை நோக்கிச் செல்கின்றார். வானுறையும் தேவதூதன் அவரைக்கண்டு அவர் இல்லறத்திலே துறவறம் காண்பது இறைவன் ஆணையெனக் கூறுகின்றார். அந்நாட்டின் தேவாலயத்தில் கன்னித்தவம் பூண்டு, மங்கையர்க்கரசியாயும், மாசறு மாதாவாயும் விளங்கும் மரியாய்க்கும் தேவதூதன் சென்று சூசையைத் திருமணம் செய்யும்படி கூறுகின்றார். இருவரும் தம் கன்னிமைக்குச் சிதைவில்லாமல் இல்லறத்தை இனிது நடத்தும்பொழுது, இறைவனின் திருவருளால் கன்னிமரியம்மையார் 'கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாயாகி', 'உருவில்லானை மனித உருவாக' உலகிற்கு

---

2 Joseph 3 Palestine

ஈந்தார். இடையரும் அரசரும் இயேசுவை வணங்குகின்றனர். ஆயினும் அவ்வூரின் அரசன் இயேசுவைக் கொல்ல எண்ணுவதால், திருக்குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் எகிப்து தேயம் செல்கின்றனர். அவர்கள் செல்லும் வழியில் அமைந்திருக்கும் ஊர்களும் இடங்களும் விவிலிய வரலாறுகளோடு தொடர்புடையன. எனவே அவ்வரலாறுகள் அனைத்தையும் காப்பியவாசிரியர் இணைத்துக் கூறுகின்றார். இயேசு நாதரும், அவர் பெற்றோரும் நாசரே என்னும் ஊருக்குத்திரும்பி, அங்குசில ஆண்டுகளாக ஒப்பற்ற இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுவருகின்றனர். பாட்டுடைத் தலைவனாகிய சூசையப்பரைப் பிணிசேர்வதும், அவர் அதனைப் பொறுமையுடன் தாங்குவதும், அவர் உயிர் துறப்பதும் மண்ணுலகும் விண்ணுலகும் அவருக்கு முடிசூட்டி அவரைப் போற்றுவதும், இறுதிப் படலங்களின் பொருளாவன.

## சிறப்பு இயல்பு

சூசையப்பரின் வரலாற்றுடன் வேறு செய்திகள் இணைக்கப் பெறும் முறை குறிக்கற்பாலது. எடுத்துக் காட்டாக, வளன் எனும் சூசை யூதேயவின் அரசகுலத்திற் பிறந்தவர். அவ்வரச குலம் தாவீது அரசனைக் குலத்தலைவனாகக் கொண்டது. எனவே சூசையின் குலத்தைப் பற்றிக் கூறும் புலவர் தாவீதின் அருஞ் செயல்களையும் வரைகின்றார். இவ்வாறு விவிலிய நூலிலிருந்து நூற்றைம்பது பகுதிகள் இக்காப்பியத்தில் இடம்பெறலாயின.

மேலும் கத்தோலிக்குத் திருச்சபையின் வரலாற்றுக் குறிப்புகளை எதிர்கால முன்வாக்குப்போல் நூலாசிரியர் கூறலானார். இயேசுநாதர் தம் தாய்தந்தையரோடு வாழும்பொழுது தம் இல்லத்தைப் பிற்காலத்தில் வானோர் இத்தாலி நாட்டுக்கு எடுத்துக் செல்வரென்றும், ஆங்கு லோறேத்தோ நகரில் எந்நாளும் அடியாரால் பெருஞ் செல்வமாய்க் காப்பாற்றப்படுமென்றும் கூறும் இடம் இத்தகையது. அப்படலத்தில் ஒரு செய்யுள்—அவ்வில்லத்தைப் பற்றி,

ஓங்கியதோர் உடல்முகமோ, முகக்கண்ணோ
கண்மணியே—ஒளிசெய்மார்பில்
தூங்கியதோர் பூண்கலனே சுடர்முடியோ
முடிமணியோ சொல்லுந் தன்மை

நீங்கியதோர் வனப்பிவ்வில் நிலத்தேல்லே
நிகரில்லா நேமிதன்னில்
வீங்கியதோர் பேரின்ப வீடதுவே
மேல்வீட்டு வாயலஃதே.

தேம்பாவணி கிறிஸ்துவ நீதிநூலாகவும் விளங்குகின்றது, இயற்கை வனப்பில் இறைவனின் தோற்றம், இல்லறம் துறவங்களின் முதன்மை, தொழிலின் மாண்பு, வறுமையின் சிறப்பு, கற்பின் தலைமை, கடவுளின் இலக்கணம், வானோரின் உயர்வு, நரகரின் தாழ்வு, பாவத்தின் கொடுமை, அறத்தின் அருமை, காமத்தின் தீமை, காதலின் பெருமை, இவையாவும் வெகு புலமையுடன் உரு வாக்கிக் காட்டப்பெற்றுள்ளன. மேலும் கத்தோலிக்கர் சிறப் பாகப் போற்றும் உண்மைகள் யாவையும் காப்பியத்தில் விளக்கு கின்றார். ஞானஸ்நானம் முதலிய அருள் அளிக்கும் வாயில்க ளாகிய தேவதிரவிய அனுமானங்களைப் பற்றியும், கத்தோலிக்கு மறைக்கு மனம் மாற்றுவதற்கு ஒருவன் கூறக்கூடியவற்றையும், கதைமயமாகவும் தத்துவமயமாகவும் கூறியுள்ளார். சுருங்கச் சொல்லின் இக்காப்பியம் அவர் போதித்துவந்த திருமறையின் கோட்பாடுகளும், வரலாறுகளும், தத்துவங்களும், நீதிகளும் வழி பாட்டு முறைகளும் அடங்கிய பெருங் களஞ்சியம்.

உவமை முதலிய அணிநயங்களிலும், சொல்வளம் பொருள் வளங்களிலும், வீரமாமுனிவர் ஏனைய காப்பிய ஆசிரியருக்குக் குறைந்தவர் அல்லர். பிறகாப்பிய ஆசிரியர் செய்யுள் இயற்றினர். வீரமாமுனிவரோ இலக்கணநூல்கள், மொழிநூல்கள், அகர வரிசைகள், உரை நடை நூல்கள் ஆகிய பல்வேறு நூல்களை இயற் றியும் அவர் காப்பிய ஆசிரியராக விளங்கும் தன்மையை எங்ஙனம் போற்றுவோம்?

## தமிழ் மணம்

இவை யாவற்றையும், வீரமாமுனிவர் தமிழ் மரபு வழுவாமல் கூறுவர். காப்பியத்தின் தோற்றுவாயில் நாட்டுப்படலம் நகரப் படலம் ஆகிய படலங்களைக் காணலாம். கம்பரின் அயோத்தி தமிழ்நாட்டைப் போன்றது; கங்கையென ஆற்றைப் பெயரிட்டா லும் அவர் வர்ணிக்கும் ஆறு காவேரி. வீரமாமுனிவர் காட்டும் பாலஸ்தீன் நாடு தமிழ்நாடு. ஆங்குள்ள எருசலேம் நகரும் ஒரு

வாறு தமிழ் நகர். காலத்தால் பின்னே வந்தவராதலால் வீரமா முனிவர் தம் முன்னோரின் மொழியைப் பொன்னேபோல் போற்றினார். திருவள்ளுவர், திருத்தக்கதேவர், கம்பர், மாணிக்கவாசகர் முதலியோரின் நடையும், முறையும், உவமையும் சொல்லும் இக் காப்பியத்தில் உள. தமிழ்க்காப்பியம், பரணி, உலா முதலிய இலக்கியங்கள் நன்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மரியாயின் முகத்திலிருந்து கபிரியேல் தேவதூதன் அவ்வம்மையாரின் எண்ணங்களை அறிந்தார் எனும் இடத்தில் "அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" எனும் குறட்பா அமைவதைக் காண்க. எருசலேம் நகரை வர்ணிக்கப் போந்த புலவர் இவ்வாறு கூறுகின்றார்: மக்களின் மனங்கள் நீதியிலிருந்து அசைவன அல்ல, அங்கு அசைவன நீரின் அலைகளே; மேகம்தான் கறுப்பாயிருக்கும். வேறெங்கும் தூய்மை. ஒருவகைப் போர்தான் அங்குண்டு. இரப்போர்க்கு ஈவதில் நிகழும் புகழ்ச்சிக்குரிய போட்டி.

> நீரல்லது மலையில்லது; நிறைவான் பொருளிடுவோர்
> போரல்லது பகையில்லது; புரிவான் மழைபொழியுங்
> காரல்லது கறையில்லது ; கடிகாவலு மறனற்
> சீரல்லது சிறையில்லது திருமாநக ரிடையே

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் சேக்கிழார் திருவாமூரைப் பற்றிக் கூறுவதுடன் ஒப்பிட்டு இன்புறத்தக்க செய்யுள் இது.

ஆங்கிலம் வணிகத்தின் மொழியென்பர். இனி, இலத்தீன், சட்டத்தின் மொழியென்றும், கிரேக்கு இசையின் மொழியென்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழியென்றும், பிரெஞ்சு தூதின் மொழியென்றும், இத்தாலியம் காதலின் மொழியென்றும் கூறுவது வழக்கம். இவ்வாறே தமிழும் இரக்கத்தின் மொழி, பக்தியின் மொழி.

* * * *

இனிக்கடவுளைப்பற்றிய செய்யுளொன்று :—

> அறக்கடல் நீயே ; அருட்கடல் நீயே
> அருங் கருணைகரன் நீயே
> திறக்கடல் நீயே ; திருக்கடல் நீயே
> திருந்துளம் ஒளிபட ஞான

நிறக்கடல் நீயே ; நிகர்கடந் துலகில்
நிலையும் நீ ; உயிரும் நீ ; நிலைநான்
பேறக்கடல் நீயே ; தாயும் நீ ; எனக்குப்
பிதாவும் நீ ; அனைத்தும் நீயன்றோ.

இச் செய்யுளினது பொருள் யாவர்க்கும் புலனாகும். இங்கு திருவாசக மணம் கமழ்கின்றது.

இசைப்பயிற்சி மிக்குடையவர் வீரமாமுனிவர். சில செய்யுட்கள் சிலப்பதிகார வரிப்பாட்டைப்போல் ஒலிக்கின்றன. பாற்கடலில் மலரும் தாமரை மிகவும் அழகாக மலரும். என் உள்ளமும் அவ்வாறு மலர்ந்தது. வேதநூற் கடலாகிய நீ, நாங்கள் பாவம் செய்ததால் துன்பக் கண்ணீர் சொரிகின்றாய். நானோ, இறைவனான நீ மனிதனாய் உதித்ததால் ஈடேற்றம் அடைந்தேன் என்று ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றேன்.

பாற்கடல் என் உள்ளப் பதுமமலர் அரும்ப
நூற்கடலே நீ உதித்தாய் நம்மலர்க்கண் முத்தரும்ப
நம்மலர்க்கண் முத்தரும்ப நோய்செய் வினைசெய்தோம்
எம்மலர்க்கண் முத்தரும்ப இன்று வினைதீர்த்தாய்

மேலும் வீரமாமுனிவர் தனி முறையில் தமிழை வளர்த்ததை ஆராய்ச்சியாளர் இதுகாறும் கூறினர் அல்லர். தமிழ்ப் புலவரைப் பயன்படுத்தியதுபோல் வீரமாமுனிவர் தாந்தே, தாடோ, வெற்ஜில் முதலிய மேல்நாட்டுப் புலவர் நூல்களையும் பயன்படுத்தியுள்ளார். இருபதாவது படலத்தில் தாடோவின் காப்பியம் “ எருசலேமின் விடுதலை ” 4 நம் புலவருக்குத் துணை நூலாவதைக் காண்க. தமிழ் அன்னைக்கு அவரை அறிமுகப்படுத்திய பெருமை புலவருடையது. மேல்நாட்டுக் கலைஞரும், தமிழ் நாட்டுக் கலைஞரும் கலக்கும் ஏரியாம் தேம்பாவணி.

இத்தகைய நூலினை நம் முன்னோர் போற்றியதூஉம், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் இதனை அரங்கேற்றியதூஉம், தமிழ் அன்னைக்கு இதனை வாடா மாலையாகக் கருதியதூஉம் வியப்பன்று. சுத்தானந்த பாரதியார் கூறுவதுபோல் தேம்பாவணியினைத் தொடினும் தமிழ் மணம் கமழும்.

---

4 Gerusalemme liberator

# 8. பாட்டை எப்படிப் படிக்க வேண்டும்?

பி. என். அப்புஸ்வாமி ஐயர், பி.எ., பி.எல்.

பிள்ளைகளே, நீங்கள் பாட்டுப் படிப்பதுண்டா? உங்களில் எத்தனைபேர் பாட்டை வாயால் உரக்கப் படிக்கிறார்கள்? அநேகமாக எல்லாரும் வாயை மூடிக்கொண்டு ஊமையாகக் கண்ணால் மட்டிலும் தான் படிப்பதாக இருக்குமே தவிர, வாய்விட்டுப் படிப்பது குறைவாகத்தான் இருக்கும்.

கவியென்பது ஒரு பெரிய களஞ்சியம்; அளவற்ற பொருள் வகைகள் நிறைந்த அருமையான நிதி. அதன் சிறப்பும் மதிப்பும் அளப்பரியன. ஆதலால் பெருங்கதவுகளால் அடைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அக்கதவுகளை எளிதில் திறக்கும் சாவியானது பொருளைத் தெரிந்து கருத்தை உணர்ந்து தெளிவான குரலில் பதம் பதமாய் உரக்கப்படிக்கும் திறமையுள்ள ஒவ்வொருவனிடத்திலும் இருக்கிறது. ஆணாகட்டும், பெண்ணாகட்டும், சிறுவனாகட்டும், சிறுமியாகட்டும், அறிவு முதிர்ந்தோனாகட்டும், அறிவிற் குறைந்தோனாகட்டும், இத்தகைய திறமை மட்டிலும் ஒருவனுக்கு இருக்கும்போது கவிக்களஞ்சியத்தைத் திறக்கும் சின்னஞ் சிறு சாவி அவன் மடியில் இருக்கிறதென்பது நிச்சயம். வசனமானாலும் சரி, கவியானாலும் சரி, அதை நன்றாக அனுபவிக்கவேண்டுமானால் அதை வாய்விட்டுப் படிக்கவேண்டும். அப்பொழுதுதான் அதன் சுவை நன்கு தெரியும். வசனத்தைக் காட்டிலும் கவிக்கு இது அதிகம் பொருத்தமானது. கவியை வாய்திறந்து படித்தாலன்றி அதன் சுவையை நாம் உணரவே முடியாது.

இதை ஓர் உதாரண வாயிலாக விளக்குவோம்: ஒரு பாட்டைச் சுரப்படுத்திப் புத்தகத்தில் எழுதி யிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம்; சங்கீதம் நன்றாகத் தெரிந்தவர்களுக்கு மட்டிலும் அதன் சுவை ஒருவாறு புலப்படுமேயன்றி மற்றவர்களுக்கெல்லாம் அது வெறும் ஸ, ரி என்னும் எழுத்துக்களாகவே தோன்றும். ஆனால் வாய்விட்டு ஒழுங்காக முறைப்படி ஒருவர் அதைப் பாடினால் அப்பொழுதுதான் அதன் சுவையை எத்தனை பேர்கள் உணருவார்கள்? சங்கீதத்தைப் போன்றதுதான் கவியும். நமது தேசத்தில் இரண்டையும் பாட்டு என்றே சொல்லுகிறோமல்லவா? காதால் கேட்டாலொழிய அதை முற்றிலும் அனுபவிக்க முடியாது.

ஒவ்வொருவனும் அனுபவிக்கவேண்டுமாயின் தானே பாட்டைப் படிப்பது நலம்.

பாட்டென்பது தாளத்தோடு கூடியது என்பதை மறக்க லாகாது. வசனத்தைப் படிப்பதுபோல் அதைப் படிக்கலாகாது. முதலில் பாட்டைப் படிக்கும்போது அதன் சந்தம் இன்ன வகையாய் அமைந்திருக்கிற தென்பதை அறிந்துகொள்ளவேண்டும். பாட்டின் அருத்தத்தைப்பற்றிக்கூட அவ்வளவு கவனிக்கவேண்டிய தில்லை; பாட்டினுடைய ஓசை இன்பத்தில் ஈடுபட்டு ஆழ்ந்து, அதன் மோனை எதுகைகளையும் மெல்லோசை வல்லோசைகளையும் நன்கு உணர்ந்து, அவற்றின் இசைச் சுவையைக் காதாரக் கேட்டு அனுப விக்கத் தொடங்கியபின்பே, சிறிது சிறிதாக அதன் பொருளழகு நமக்குப் புலப்படத் தொடங்கும். ஆகையால் கவியின் நடையழ கையும் ஓசையழகையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

சிறந்த கவிகள் எல்லாரும் கருத்துக்கு ஏற்றபடி பாட்டின் நடையையும் ஓசையையும் அமைத்துக்கொண்டே போவார்கள். இவர்கள் அப்படி எண்ணிச் செய்தார்களா? அல்லது இவர்கள் மனத்தில் ஆழ்ந்து பதிந்து, செழித்துக்கிடந்த எண்ணங்கள் யாவும் தத்தமக்கு ஏற்ற வடிவம் பூண்டு, அணிகள் அணிந்து, உடைகள் உடுத்து, உரிய செவ்விய நடையனவாகத் தாமாகவே தோன்றினவா? என்னும் விஷயங்களை நாம் இங்கே ஆராய வேண்டியதில்லை. விஷயத்துக்கு ஏற்றபடி நடையும் ஓசையும் மாறு கின்றன என்பது மட்டிலும் யாவர்க்கும் புலப்படக்கூடிய அளவில் இருந்து வருகிறது. வீரத்தைக் குறிப்பதற்கு ஒரு முறை, காதலுக்கு மற்றொன்று, சோகத்துக்கு வேறொன்று என்று நவரசங் களுக்கு ஏற்றபடி பாட்டின் அமைப்பு அமைந்திருக்கிறது. படிக் கும்போது அவசரப்பட்டு, பாட்டைப் படித்து ஒரே மூச்சில் முடித்துவிட வேண்டுமென்று படிக்கக்கூடாது. மெதுவாக ஆமை நகருவதுபோல் நகரவும் கூடாது. கேட்போர் காது செவிடுபடும் படியாக மிகவும் உரக்கக் கத்தவும் கூடாது. படிப்போர்க்கே காதில் விழுமோ விழாதோ வென்னும்படி அவ்வளவு மெதுவாகவும் படிக்கக் கூடாது. நாம் சாதாரணமாகப் பேசும் குரலிலேனும் அல்லது அதிலும் சற்று மெதுவாக நமது பக்கத்திலுள்ள நண்ப னோடு பேசும் தாழ்ந்த குரலிலேனும் படிக்கவேண்டும். கதறிக்

கண்ணீர் வடித்து அழுது நாக்குழறிப் படிக்கவும் கூடாது. கத்திக் களித்துச் சிரித்து உரத்துப் படிக்கவும் கூடாது. ஆனந்த பரவசமாய்க் கத்துவதும் துக்கத்தில் ஆழ்ந்தவராய்ச் சோர்ந்து விக்கிக் கொள்வதும் கேட்போருக்குச் சிறிதும் இன்பம் தரமாட்டா. அதனல், நாம் எதிர்பாராதபடி நகைச்சுவையே விளைவதாகும். கவியானது சந்தோஷச் செய்தியை ஒட்டியதா யிருக்கலாம்: அல்லது துக்கச் செய்தியை ஒட்டியதா யிருக்கலாம். அதற்காக நாம் சிரித்து உருளவோ, கண்ணீர் வடித்து அழவோ வேண்டியதில்லை.

நாம் படிக்கும் பாட்டானது உண்மைப் புலவனல் எழுதப் பட்ட கவியாயிருக்குமானல், அது தன் உட்கருத்தை எடுத்துக் காட்டக்கூடிய வன்மையைப் பெற்றிருக்கும். அதில் பொருந்தியுள்ள ஒவ்வொரு மொழியும் தேர்ந்தெடுத்த அழகிய மணியாயிருக்கும். அம்மணிகளை நாம் மெல்லப் படித்துச் சிதருமல், ஒட்டமாய்ப் படித்துக் குவியாமல், ஒவ்வொன்ருய் எடுத்துக் கொடுப்போமானல், அவற்றுள் ஒவ்வொன்றும் தன் தன் காந்தியோடு சிறந்து விளங்கும்: கவியில் ஆழ்ந்து கிடக்கும் உள்ளக் கருத்தும் பளிங்கினுட் கிடக்கும் பொருளைப்போல் யாவர்க்கும் நன்கு புலனகும். ஆகையால் படிப்போனது உடலில் தோன்றும் மெய்ப்பாடுகளால் அன்றி, அவன் குரலில் ஏற்படும் சிற்சில பேதங்களைக் கொண்டே கவியின் கருத்தை விளக்குவதுதான் முறை.

நீங்கள் அடுத்த முறை ஏதாவது ஒரு பாட்டை எடுத்துப் படிக்கும்போது அதில் உள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் நன்ருகக் கவனியுங்கள்; ஒவ்வொரு வாக்கியத்தையும் எழுவாய் எது, பயனிலை எது, செயப்படுபொருள் எது என்பதைக் கூர்ந்து கவனியுங்கள். இது மிகவும் கர்நாடகமான காரியம் என்று நீங்கள் ஒருகால் எண்ணலாம். ஆனல் அவற்றைத்தெரிந்து கொள்வது அவசியம். பாட்டு எழுதப் புகுந்த கவி, பாஷையிலுள்ள இலக்கண முறைகளை அனுசரித்தே பாடுவான்; அவன் தன் மனம்போன வாறெல்லாம் இலக்கணத்தை அவமதித்து நடக்கமாட்டான்; அதைப் பொருட்படுத்தாது கவி எழுதமாட்டான். நீங்கள் அந்தப்படி கவனித்துப் பார்த்தால், எந்த வகையான மனப்பான்மையைக் கொண்டு அந்தப் பாட்டு இயற்றப்பட்டது, எத்தகைய கருத்தை வெளியிட முயன்றிருக்கிருன் கவி என்பன தெளிவாகாமற் போனலும் கூட,

பாட்டானது இன்னவகையாக அமைக்கப்பட்டிருக்கிறது, அதன் போக்கு இது என்பனவேனும் வெளியாகமல் இரா. ஒரு பாட்டை ஐந்தாறு தடவை திரும்பத் திரும்பப் படித்த பிறகுதான் அதைச் சரியாகத் திருத்தமாக உச்சரிக்க முடியும். அப்படித் திரும்பத் திரும்பப் படிக்கும்போது ஒவ்வொரு தடவையும் பாட்டுச் சிறிது சிறிதாக மேன்மேலும் விளங்கிக்கொண்டே வரும்; கவியின் கருத்து இன்னதென்பதைப்பற்றி மேன்மேலும் தெளிவு உண்டாகிக்கொண்டிருக்கும்.

வரிக்கு வரி குரலைமாற்றிப் படிப்பதற்குக் கூசாதேயுங்கள். ஒரே ஸ்வரத்தில் ஒன்றையும் படிக்கலாகாது. இயற்கையிலாகட்டும், நற்கலைகளிலாகட்டும், எந்தப் பொருளும் எக்காலத்தும் ஒரே தன்மையை உடையதாய் ஒரே மாதிரியாய் இராது. இந்தப்படி படிப்பவர்களை 'திவச மந்திரம் படிக்கிறதைப்போல் படிக்கிறார்கள்' என்று கேலிசெய்வது வழக்கம். சுவைகள் அனைத்தும் ஒடுங்கிய மரண வேலையில் மட்டிலும் அத்தகைய சுவையற்ற ஒலிகளைக் கேட்கச் சகிக்கலாமேயன்றி, மற்றைய வேளைகளில் நமது காது அவ்வகை ஒலிகளைக் கேட்கச் சகிக்கவே மாட்டாது.

நீங்கள் படிக்கும் பாட்டுக்களையும் தேர்ந்தெடுத்துப் படியுங்கள். ஒரே வகையான சுவையைத் தரும் பாட்டுக்களையே ஓயாது படியாதீர்கள். வகை வகையான சுவைகள் நிறைந்த பாட்டுக்களைப் பொறுக்கி யெடுத்துப் படியுங்கள். அகத்துறைப் பாட்டுக்களையும், புறத்துறைப் பாட்டுக்களையும் ஒழுங்காய் அமைந்த வெண்பாக்களையும் கலித்துறைகளையும் படிக்கும்போது, அவற்றில் ஊறிக் கிடக்கும் ரசத்தையும் அவற்றின் கதியின் அழகையும் உணர்ந்து அனுபவித்துப் படியுங்கள். அப்பொழுதுதான் கவியின் முழுச் சுவையையும் நீங்கள் பெறுவீர்கள்; கேட்போர்க்கும் கவியின் இனிமை நன்கு புலனாகும்.

# 9. அழகிய சொக்கநாத பிள்ளை

இராவ் சாகிப் வே. ப. சுப்பிரமணிய முதலியார்

### பிறப்பும் கல்வியும் :

அழகிய சொக்கநாத பிள்ளை, திருநெல்வேலி அடுத்து வடக்கே யுள்ள தச்சனல்லூரிலே, சுத்த சைவ வேளாள மரபிலே, வன்னியப்ப பிள்ளை குமாரராக, ஏறக்குறையத் தொண்ணூறு வருடங்களுக்கு முன்னே பிறந்தவர். இவர் தந்தையார் விநாயக உபாசகரென் பதும் இவர் அவரிடம் கல்வி பயின்றவரென்பதும் இவர் இயற்றிய காந்திமதியம்மைபிள்ளைத் தமிழில், குருவணக்கத்தில்,

கனிதரு பெருங்கருணை மருவுபதி னொருகரக்
கணபதியை அநவரதமுங்
கருதலிற் பெறுபயன் அநந்தத்துள் ஒன்றெனக்
கடையனேன் தனையும் மகவேன்(று)
இனிதுபெற் றருமையின் வளர்த்துப் படிப்பித்(து)
இகத்தோடு பரத்தும் இன்பம்
எய்த்தவரு ளுபதேசம் உதவுசற் குருவான
எந்தை தாள் சிந்தை செய்வோம்.

என வருவதனால் அறியலாம்.

### கணபதி வாத்தியார் :

அக்காலத்துத் தமிழ்ப் பள்ளிக்கூடத்து வாத்தியார்களுள்ளே சிறந்த கல்வி யறிவும் போதிக்குந் திறமையும் உடையவரும், தமது பள்ளிச் சிறுர்களுக்குக் கல்விப் பயிற்சியும் கடவுட் பத்தியும் நல்லொழுக்கமும் உண்டாகச் செய்தலில் அத்தியந்த சிரத்தை யுடையவரும், தமது வாத்திமைத் தொழிற்றிறமையினால் பெருஞ் செல்வந் திரட்டியவருமாக இருந்த கணபதி வாத்தியார், இவருடைய சிறிய தந்தையார். ஏடெழுத்தாணி யிறந்தொழிந்த இக்காலத்தில் வழங்குகின்ற, பெரும்பாலும் பிழையற்ற அச்சுப்பாடப் புத்த

---

* கரந்தைக் கட்டுரை உரிமையாளரின் இசைவு பெற்றது.

கங்கள் ஏற்படாத அக்காலத்தில், ரகர, றகர, ழகர, ளகர பேதங்களறியாதாரெழுதிய ஓலைச் சுவடிகளைக் கொண்டு பிள்ளைகள் கல்வி கற்பது வழக்கமாயிருந்தது. அக்காலத்து வாத்தியார்களுள்ளே, யானறிந்தவரை கணபதி வாத்தியா ரொருவரே, இலக்கண இலக்கியப் பிழைகளெதுவு மில்லாமல், தாமேனும் தம்மிடம் கற்றுத் தேர்ந்த சட்டாம்பிள்ளைகளேனும் எழுதிய ஓலைச் சுவடிகளைக் கொண்டு, பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பவரா யிருந்தார். இவ்வாத்தியார் எனக்குப் பாலப் பருவக் கல்வி பயிற்றியவராவர்.

## முதற் பழக்கம் :

நவாபு அரசாங்கக் காலத்தில் சேனுதிபத்தியத்துடன் தென் சீமை யதிகாரத்தை இடையீடின்றிப் பல தலைமுறை வகித்துவந்த தளவாய் குடும்பத்தினராகவும், நல்ல கல்வியும் ஞான சாஸ்திரப் பயிற்சியும் உடையவராகவும், திருநெல்வேலியில் வாழ்ந்த தளவாய் இராமசுவாமி முதலியார் அரண்மனையில் முதல் முதலாக இவரை* யான் பார்க்கும்படி வாய்த்தது. செங்கிற மேனியும் சிறிது நீண்ட வட்ட முகமும் சற்றுக் குறைய ஐந்தரையடி உயரமும் நடுத்தரமான உடற்பருமையு முடையவராகக் காணப்பட்டார். சி. வை. தாமோதரம் பிள்ளையின் தொல்காப்பியப் பதிப்புக்கு உதவியாக, மேற்கூறிய இராமசுவாமி தளவாயின் ஆணைப்படி, திருநெல்வேலிக் கவிராயர் வீட்டுத் தொல்காப்பிய ஓலைச் சுவடியைப் பார்த்துக் காகிதத்தில் பிரதி யெழுதிக் கொண்டிருந்தார். இவரெதிரே, சிலர் இவர் முகத்தைப் பார்த்த வண்ணமா யிருந்தனர். இவர் பிரதி செய்துகொண்டும் இடையிடையே எதிரிருந்தார் கேள்விகளுக்கு விடை பகர்ந்துகொண்டு மிருந்தார். இவர் பேச்சு அவ்வவ்வமயத்துக் கேற்றதாகவும் சுவையாகவு மிருந்ததனுல், முதலில் நின்று கேட்டுக் கொண்டிருந்த யான், இருந்து கேட்கலானேன். அதுமுதல், இவர், காலை ஏழுமணிக்கு வந்து பிரதி செய்யும் வேலையிலமர்ந்து பத்துமணிக்கு வீட்டுக்குப் புறப்படும்வரை இவர் பேச்சைக் கேட்டு இன்புறுதற்கு வரும் பலரோடு யானும் கூட இருந்து வரலானேன். அன்றி, மாலையில் இவரில்லஞ்சென்று இவரோடு சல்லாபித்து இன்புற்று வந்தேன்.

* அழகிய சொக்கநாதபிள்ளை

**சைவக் கவிராயர்:**

ஒரு நாள், செம்பொற்சிலை போன்ற சிவந்த மேனியராய், நீர்க் காவியேறிக் கஷாயம் போலச் சிவந்த தூய ஆடையும், பட்டை பட்டையாகத் தீட்டிய தூய வெண்ணீற்றுப் பூச்சும், குங்குமம் அப்பிய பெரிய சந்தனப் பொட்டும், அணிந்தவராய், இரத்தின மிழைத்துச் செவ்விய செதுக்கு வேலை தீர்ந்த பொற் கவசம் புனைந்த கவுரி சங்கர மென்ற இரட்டை யுருத்திராக்க நடு நாயகமும் தங்க வில்லைகளும் பொலியும் உருத்திராக்கக் கண்டிகை பூண்டவராய், பழுத்த சைவமே வடிவெடுத்தாற் போன்று பேட்டைக் கவிராய ரெனப் பேர்பெற்ற ஒருவர், மேற்கூறிய தளவாய் அரண்மனைக்கு வந்தார். அவர், அங்கே யிருந்தோரால் வரவேற்கப்பட்டு, இருக் கையில் அமர்ந்தனர். வரவேற்றருள் ஒருவர் அவரை ஒரு பாட்டுக்குப் பொருள் வினவ, அவர், தாம் அப்பாட்டின் பொரு ளறியாமையை வெளியிடாமல், பொருள் கூறும் பாவனை புரிந்தார். அவர் புறப்பட்டுப் போனபின், அங்கிருந்தவர்கள், பாட்டுக் கருத்தை அவர் அறியாமையைப்பற்றிப் பலபல பகர்ந்து பரிகசிப்பாராயினர். அப்போது அவர் உள்ளபடி பொருள் கூறுமல், பொருள் கூறியதுபோலக் காட்டிய பாவனை, திருவிளையாடற் புராணத்தில் 'கல்லாலின் கீழிருந்து' என்ற கவியில் 'இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி'ய பாவனையை ஞாபக மூட்ட, யான், 'அவர், இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டினார்' என்றேன். எனவே, அன்றுவரை என்றும் என் முகம் நோக்கி யாதுங்கூறாதவர் (அழகிய சொக்கநாத பிள்ளை,) என்னை ஏறிட்டுப் பார்த்துப் புன்னகை புரிந்து 'பொருத்தமா யிருக்கிறது' என்றார். இதன் பின், அவர் கூறுபவைகளை அவரிடம் வருவாரெல்லாரினும் இளைஞ னுயிருந்த என்னை நோக்கியும் கூறுவார்.

**வறுமை:**

இவர் தாம் மேற்கொண்ட பிரதி எழுதும் வேலையைப் பகல் பத்துமணிக்குப் பின் செய்யாமைக்குக் காரணம், திருநெல்வேலி முன்சீபுக் கோர்ட்டில் இவர் பத்து ரூபாய் சம்பளமுள்ள எழுத் தாளர் வேலையிலமர்ந்திருந்ததாம். 'தங்கள் வருமானம் எவ்வளவு?' என்று வினவுவார்க்கு 'எனக்கு மாசம்பத்து வந்துகொண்டிருக் கிறது' என்று, மாசம் பத்து ரூபாயென்றும், மகா சம்பத்து

என்றும், ஒன்றுக்கொன்றெதிரிடையான இருபொருள்பட, வறுமையுடைமை செல்வமுடைமை போலத் தொனிக்க, விநோதமாக விடை கூறுவார்.

### குடும்பம் :

இவருக்கு மனைவியார் இருவர். முதல் மனைவி இறந்த பின், இரண்டாமுறை மணஞ் செய்தார். முதல் மனைவிக்கு ஒரு மகனும் ஒரு மகளும் பிறந்தார்கள். மகன் பெயர் நெல்லை நாயகம் பிள்ளை. அவர், பருவமடைந்த பின் இவரை விட்டுப் பிரிந்து போய்விட்டார். இவர் முதல் மனைவி, இறுதிக் காலத்தில் தீராத நோயுற்று நடக்க மாட்டாது நெடுங்காலம் படுக்கையிற் கிடந்து பிறர் உதவியின்றி எதுவும் செய்ய இயலாதவளாயிருந்தாள். இவரே அவளுக்குச் செய்ய வேண்டுவன யாவற்றையும் குழந்தைக்குத் தாய் செய்வது போலச் செய்துவந்ததைப் பலமுறை யான் பார்த்து இவருடைய ஆழ்ந்த அன்புடைமையையும் கடமையுணர்ச்சியையும் தெரிந்து வியந்திருக்கின்றேன். தம் உத்தியோக வேலையுடன் நோயும் பாயுமாய்க் கிடந்த மனைவிக்கு வேண்டுவன யாவும் குறைவுபடாமல் செய்து 'வறுமையிற் செம்மை'க்கு மேற்கோளாக விளங்கிய இவர் பெருந்தகைமை பெரிதும் பாராட்டத் தக்கதாயிருந்தது.

### தாம் துன்புறுகையிலும் பிறர் இன்புறச் செய்தல் :

மேற்கூறிய கவலைகளோடு, இவர் தமது கவியொன்றிற் கூறுமாறு, 'பாழ்த்த வறுமையுங் கடனும் படுத்துகின்ற......துக்கம்' உடையவராயிருந்ததனைத் தெரிந்திருந்த யான் ஆச்சரியமடையும் படி, இவர் தம்மிடம் வந்தவர்க்குப் புன்னகை பூத்த இன்முகங் காட்டி, இனிமையும் விநோதமுமாகப் பேசி, இன்பமூட்டும் இயல்பினராயிருந்தார். தாம் நோயுற்றுத் துன்புழந்து கொண்டிருந்த காலத்தும், சாகுஞ் சமயத்தும் கூடத், தம்மைக் காண வந்தோரைச் சந்தோஷ முகத்துடன் வரவேற்று, இன்சொற் கூறி இன்புறுத்தும் இயல்பினை இழந்தாரில்லை.

### சுருக்கெழுத்துச் சோதனை :

இவர் எழுத்தாளராயிருந்த முன்சிபு கோர்ட்டில், ஒரு குமாஸ்தா வேலையை வேண்டி, ஒருவன், முன்சிபிடம் விண்ணப்பமெழுதிக் கொடுத்தான். அவர், அவன் வேலைத் திறமையைச்

சோதிக்கக் கருதி, தம்மிடம் வந்திருந்த வேறொரு விண்ணப்பத்தை யெடுத்து, 'இதைச் சுருக்கி யெழுதிக்கொண்டு வா' என்று கொடுத்தார். அவன் அவரிடம் விண்ணப்பம் கொடுத்த விவரமும் அவர் தனக்குக் கொடுத்த உத்தரவு விவரமும் விரிவாக முன்னுரையாக எழுதித், தன்னிடம் சுருக்கி யெழுதக் கொடுத்த விண்ணப்பத்தைத் தனக்குத் தோன்றியவாறு பெயர்த்தெழுதியதைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தான். அவர் அதனை வாங்கிப் பார்த்து 'இது சுருக்கக் கொடுத்த விண்ணப்பத்தினும் பெருக்கமாய் இருக்கிறதே. ஏன் இப்படி யெழுதினாய்?' என்று கேட்டபோது, பக்கத்தில் நின்ற அழகிய சொக்கநாத பிள்ளை, 'கோர்ட்டார் உத்தரவுப்படித் தானே செய்திருக்கிறார்' என, முன்சீபு 'எப்படி' என, 'இவர் எழுதியிருப்பதனோடு ஒப்பிட்டால், சுருக்கக் கொடுத்த விண்ணப்பம் சுருக்கமாயிருப்பதனால் உத்தரவுப்படி அதைச் சுருக்கி விட்டார்' என்றார். முன்சீபு அவன் மதியீனத்துக்காக அவனை இகழ்ந்து, இவர் சமத்காரத்துக்காக இவரைப் புகழ்ந்து, அவனிடம் அருவருப்பும் இவரிடம் பெருவிருப்பும் உற்றார்.

## பொடி வைத்து நகை செய்தல் :

இவர், ஒரு சமயத்தில், தம்முடனிருந்த இரண்டு நண்பருள் ஒருவர் மற்றொருவருடைய பொடிப்பட்டையை ஒளித்துவைத்துப் பட்டைக் குடையவர் தேடியபோது சிரிக்க, இவர் சிரித்தவரை நோக்கிப் 'பொடி வைத்துத்தான் நகை செய்ய வேண்டும்' என்று இரட்டுற மொழிந்து உண்மையை வெளிப்படுத்திக் களவு கொண்டவர் கொடுத்தவர் இருவரையும் உவப்பித்தார்.

## புலவர் கூடுமிடம் :

திருநெல்வேலியில் பல தலைமுறையாகக் கல்வியும் செல்வமும் ஒருங்கு நிரம்பி எந்தச் சபையிலும் அக்கிராசனமும் பிரதம தாம்பூலமும் பெற்றுவந்த கவிராச குடும்பத்தில் சேட்டராய், சிறந்த இலக்கண இலக்கியப் பயிற்சியும் இனிய கவி பயிற்றுந் திறமையும் சங்கீத ஞானமும் உடையராய், கற்றோர்க்கு உணவும் உறைவிடமும் உதவிவந்த, கவிராச நெல்லையப்ப பிள்ளை, தெற்குப் புதுத் தெருவில் தனித்தனியான பல கட்டிடங்களும் நடுவே கால்வாய் நீரோட்டமும் பின்னே பூந்தோட்டமும் உடைய வாசஸ்தலத்தில் வாழ்ந்து வந்தார். அப்பூந் தோட்டத்தில் கால்வா

யருகே பூசை மடமும் மடைப்பள்ளியும் இவைகளுக்குச் சிறிது தூரமான இடத்திலே ஒரு சவுக்கையு மிருந்தன. இந்தச் சவுக்கை தமிழறியும் பெருமாளாய் வித்துவான்களுக்கு வேண்டும் பொரு ளுதவி புரிந்து ஆதரித்துவந்த வள்ளல் இராசவல்லிபுரம் முத்து சாமியா பிள்ளை நெடுங்காலம் வசித்த இடமாகவும், அவரைக் காணத் திருநெல்வேலி இராமநாதபுரம் மதுரையாகிய மூன்று ஜில்லாக்களிலுமிருந்து வந்த வித்துவான்கள், புலவர்கள், கவி ராயர்கள் ஆகியவர்கள் கூடுமிடமாகவும் இருந்தது.

அக்காலத்தில் புலவர்கள் ஒவ்வொரு வருடமும் தம்மூர்விட்டுப் புறப்பட்டு, அங்கங்கேயுள்ள ஜமீன்தார்களையும், பிரபுக்களையும் கண்டு, அவரவர்மீது சிலசில கவிகள் புனைந்து வருஷாசன மென் னும் ஆண்டு நன்கொடையாகப் பெற்ற வருவாயைக்கொண்டு காலங்கழித்து வந்தனர். அவர்கள், சிலரோ பலரோ ஏறக்குறைய எக்காலத்தும் கூடித் தாம்தாம் முத்துசாமியா பிள்ளை மீது பாடிய பாட்டுக்களையும் நூல்களையும் படித்துப் பொருள் கூறுவதையும் ஒருவர் மற்றொருவருடைய கவிகளின் குணங்களை இன்புற எடுத்துக் கூறுவதையும் முத்துசாமியா பிள்ளையுடன் கவிராச நெல்லையப்ப பிள்ளையும் அழகிய சொக்கநாத பிள்ளையும் யானும் கேட்டு மகிழ்வதற்கும், அப்போதப்போது கூடிய வித்துவான்கள் பழைய புதிய பெருநூல் சிறுநூல்களைப் படித்து அவற்றின் நயங் களை எடுத்துக்கூறி இன்புறுதற்கும், அந்தச் சவுக்கை இடமா யிருந்தது.

**புலவர்கள் :**

வேம்பத்தூர் பிச்சுவைய்யர், கல்போது புன்னைவனக் கவி ராயர், முகவூர்க் கந்தசாமிக் கவிராயர், அவர் புதல்வர் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை * முகவூர் இராமசாமிக் கவிராயர், அவர் குமாரர்கள் அருணசலக் கவிராயர், சுப்ரமணியக் கவிராயர், சின்னி குளம் அண்ணுமலை ரெட்டியார், முத்துவீருப் புலவர் † கந்தசாமிப் புலவர், † கந்தசாமிக் கவிராயர் † திருநெல்வேலி முத்துப்புலவர் ஆகியோரும் வேறு சிலரும் முத்துசாமியா பிள்ளையைக் காண வந்து கொண்டிருந்த வித்துவான்களாவர்.

* * * *

---

* எட்டயாபுரம் ஸமஸ்தான வித்துவான்.

† ஊற்றுமலைஸமஸ்தான வித்துவான்கள்.

# 10. கவித்துவ சக்தி

பி. ஸ்ரீ.

பழைய இலக்கண நூலாரைப் போலவே, தற்கால ஆராய்ச்சி அறிஞர்களும் கவிதை இன்னதென்று வரையறுப்பதில் பெரிதும் இடர்ப்படுகிறார்கள். ' கவிதை யென்றால் என்ன ? ' என்ற கேள்விக்கு இவர்கள் ' கவியால் செய்யப்பட்டது கவிதை ' என்று பதில் சொல்லுகிறார்கள். ' கவி யென்றால் யார் ? ' என்று மீண்டும் நாம் இவர்களைக் கேட்கிறோம். இவர்களே பளிச்சென்று ' கவிதை செய்தோன் கவிஞன் ' என்று சொல்லுகிறார்கள். உண்மைக் கவிதை இயல்பாகப் பொங்கிவரும் என்பது பாரதி பாட்டின் பின் வரும் அடிகளினால் ஒருவாறு புலனாகும்.

' ஆற்றங் கரைதனிலே—தனி
ஆனதோர் மண்டப மீதினிலே—தென்றற்
காற்றை நுகர்ந்திருந்தேன்—அங்குக்
கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள்—அதை
ஏற்று மனமகிழ்ந்தே—அடி
என்னோ டிணங்கி மணம்புரிவா யென்று
போற்றிய போதினிலே—இளம்
புன்னகை பூத்து மறைந்து விட்டாள் அம்மா ! '

கலைமகள் கன்னிக் கவிதையாகிய முதலாவது பாட்டைத் தனக்குக் கொணர்ந்து தந்தாள் என்று பாரதி கூறுகிறார். ஒரு புத்தகம் அல்லது ஒரு மலரைத் தாம் பிறரிடமிருந்து பெற்றுக் கொள்வதுபோல், அக் கவிதையையும் அவர் பெற்றுக் கொண்டனராம். அவ்வாறு கிடைத்த பாட்டை ஏற்றுக்கொண்டு நமது கவிஞர் பெரு மகிழ்ச்சி அடைகின்றார். தமக்குக் கலைத் தெய்வத்தின் அருள் கிடைத்து விட்டது என்ற களிப்பு, அவருக்கும் அத் தெய்வத்திற்கு முள்ள நெடுந்தூரத்தை அதிசமீபமாக்கி விடுகிறது ! இந் நிலையில் அவர் 'அடி' என்று அத்தெய்வத்தோடு தோழமை பேசத்துணிந்து, 'என்னோடு இணங்கி மணம்புரிவாய் !' என்று போற்றுகிறார். ஆனால் அத் தெய்வம் இளநகை யரும்பி மறைந்து விடுகிறது.

பாரதியாருக்குக் கிடைப்பது கவிதா தேவியின் இளம் புன்னகையேயாகும். அத்தேவி அவரை மணந்துகொள்ள ஒருப்படவில்லை. அவள் மணமாலையும் கையுமாக எங்கேயோ ஒரு கம்பர் அல்லது ஒரு ஷேக்ஸ்பியரைத் தேடிச் செல்லுகிறாள்.

கவிதையும் காதலும் இயல்பாகவே உதித்தெழுகின்றன. இவற்றை அடக்கி யாளும் இயந்திரமாவது கருவியாவது விஞ்ஞான சாஸ்திரிகளால் நாளிதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை; இனி, அவர்கள் அத்தகைய கருவியைக் கண்டு பிடிக்கப் போவதுமில்லை. உள் மனத்தின் உள்ளொளியே பாட்டாகப் பொங்குகிறது. இதனைப் புறமனத்தின் காரியமான பகுத்தறிவால் கட்டுப்படுத்துவது ஒருவருக்கும் இயலாததே.

‘ துடிக்குதேன் உதடும் நாவும்
சொல்லுசொல் லெனவே வாயில்
இடிக்குது குறளி அம்மே !
இனிக்குறி சொல்லக் கேளே !’

என்று குற்றாலக் குறவஞ்சியில் குறி சொல்லும் குறப்பெண் முன்னுரையாகப் பேசுகிறாள்; இக்குறப் பெண்ணின் நிலை, கவிஞனது நிலையுமாகும்.

‘ஓவியப் புலவனுக்குக் கை உணரும்; காவியப் புலவனுக்கு நா உணரும்’ என்பது உண்மையினும் உண்மை. கவிஞனுக்கு உதடும் நாவும் விரைந்து துடிதுடிக்கின்றன. ‘நான் முன்னே! நான் முன்னே! என்று சொற்கள் வந்து விழுகின்றன. கவிஞனுக்குள்ளிருந்து வேலை செய்யும் குறளி அவனது உள் மனத்தின் உள்ளொளியே ஆகும்.

கவிஞன் கருவிலே திருவுடையவன். வடமொழியில் ‘கர்ப்ப ஸ்ரீமான்’ என்று அவனைக் கூறலாம். அவன் காரிகையும் நிகண்டும் கற்றுக் கவி பாடும் பண்டித ஜாதியைச் சேர்ந்தவனல்லன். எனினும் உத்தமக் கவிஞனுக்குப் பிறப்புரிமையோடு தக்க அறிவுப் பயிற்சியும் இன்றியமையாததாகும்; இயற்கை நுண்ணறிவோடு செயற்கையான கல்விப் பயிற்சியும் அமையப் பெறாதவன் மகா கவியாக விளங்கப் போவதில்லை. அவன் ஒருவேளை ‘ஊமைக் கவி’ யாகவே இருந்து விடுவான். கவிதா தெய்வத்தின் மெய்யருளோடு கவித் தெய்வத்தின்

இடைவிடாத ஆராதனையும் முதல்தரமான கவிஞனிடம் தக்க முறையில் கலந்து அமைந்திருக்குமென்பது திண்ணம்.

இயற்கையாக ஒருவனிடம் அமைந்துள்ள கவித்துவ சக்தியில் மூன்று அம்சங்கள் முக்கியமாகக் காணப்படுகின்றன. அவையாவன :—சௌந்தரிய உணர்ச்சி அல்லது அழகுக் காதல்; மனோதர்மம் அல்லது கற்பனைக்கண் ; ஓசையின்பத்தை உணரும் செவி.

அழகுக் காதல் தக்க பயிற்சியால் கவிச்சுவையாகிறது. கற்பனைக்கண் தக்க பயிற்சியால் எத்தகைய காட்சிகளையும் கண் முன் காட்டும் சக்தி பெறுகின்றது. இப் பயிற்சியால் கவிஞனது செவியும் உண்மைக் கவிதையின் ஓசையின்பத்தை உணரும் பேராற்றல் பெறுகின்றது.

இரும்பைக் காந்தம் இழுப்பது போல், கவிஞனது அழகுக் காதல் கவிதைக்கு இன்றியமையாத அழகுப் பொருளை ஆகர்ஷித்து அவற்றைச் சுவையோடு பக்குவமாக்கித் தருகிறது. கற்பனைக்கண், புற உலகைப் பார்ப்பது போல் மக்களது அக உலகையும் ஊடுருவிப் பார்க்கிறது ; நிஜ உலகை உற்று நோக்குவது போல் கனவு லோகத்தையும் உற்று நோக்குகிறது. கவிஞனது பண்பட்ட செவியோ கள்ள நாணயத்தை நொடிப்பொழுதில் கண்டுபிடித்துவிடும் ஷராபின் செவியைப் போலாகிறது.

கவிதை யுலகிலும் ஓசைக் குறைவான நாணயங்கள் உண்டு ; ஈய ரூபாய்கள் உண்டு ; ஓட்டிலே சுண்ணும்பைத் தடவி ‘இதுதான் ரூபாய்’ என்று ஏமாற்றுவோரும் உண்டு. இவற்றையெல்லாம் கவிஞன் செவி எளிதில் கண்டுபிடித்து விடுகிறது.

சுருங்கக் கூறுமிடத்து, அழகுக் காதலும் விசேஷ மனோதர்மமும் வாய்ந்த கலைஞனது உள் மனத்தினின்றும், கவிதை நாதத்தோடும் பொங்கும் ஒரு ஞான கங்கையாகப் பெருகி வருகிறது என்று சொல்லலாம். இதனையே ‘சொல்லின் செல்வம்’ என்றும், ‘செஞ்சொற் கவியின்பம்’ என்றும் கம்பர் கூறுகிறார்.

கவி உலகில் கள்ள நாணயக்காரரும் மோசக்காரரும் இருப்பது போல் கழைக் கூத்தாடிகளும் உண்டு ; சொற்களைக் கொண்டு செப்பிடுவித்தை காட்டுவோரும் ஜாலம் செய்வோரும் உண்டு. இவர்களெல்லாம் இலக்கணக் கவிஞராக இருக்கலாம் ; உண்மைக் கவிஞர் அல்லர்.

'பாமாலை கட்டஇன்சொற் பாவாணர் தேடேல்போல்,
பூமாலை கட்டமலர் போயெடுக்கும் பாங்கியர்கள்'

என்று கூறும் புலவன் கவித்துவ சக்தியின் மர்மத்தை அறிந்து கொள்ளவில்லை. பூமாலை கட்டுவதற்கு நன்மலர்களைப் பொறுக்கி யெடுப்பதுபோல் இன்சொற்களைத் தேடிப் பொறுக்கி யெடுத்துப் பாமாலை கட்டும் பாவாணர், உண்மைக் கவிஞர் அல்லர். சொற்களில் இல்லாத இன்பத்தைச் சொற்களிடையே பெருக்கெடுத் தோடும்படி செய்ய வல்ல கவிஞன், சிரமப்பட்டு நிகண்டுகளிலிருந்தும் அகராதி களிலிருந்தும் சொற்களைத் தேடிப்பிடித்துக் கோத்து வைப்பதில்லை. அவன் ஓர் அற்புத மந்திரவாதிதான். மாத்திரைக்கோலை உயர்த் துகிறான்; உடனே வார்த்தைகள் ஓசை யின்பத்தோடு எப்படியோ வந்து விழுகின்றன. அத்தகைய கவிஞன் பாட்டின் உண்மையான இயல்பை எப்படியாவது கண்டு கொள்கிறான். பாடிப் பாடிப் பழகி வருகையில், மேலும் மேலும், 'தெய்வமாக்கவி' இன்னதென்பதைத் தெரிந்து கொள்ளுகிறான்.

'பாவினியல் கண்டு பல பாடித் தேரிந்துபெருங்
காவியத்தைப் பாடிக் கவிஞர் அரங் கேற்றுதல் போல்'

என்று பாடும் கவிஞன் கவித்துவ சக்தியின் இரகசியத்தை ஒருவாறு தெரிந்துகொண்டானென்றே கருதல் வேண்டும்.

உண்மைக் கவிதையில் பொருளும் அமைப்பும் ஒருங்கே அழகு பெற்று விளங்குகின்றன. கட்டழகியான பெண் ஒருத்திக்கு ரூப சௌந்தரியமும் குண சௌந்தரியமும் ஒருங்கே இன்றியமையாதன அன்றோ? அப்படியே கவிதைக்கு அமைப்பு அல்லது ரூபமும் வேண்டும்; பொருள் அல்லது குணமும் வேண்டும். இவற்றோடு ஓசையின்பமும் இன்றி யமையாதது; சிருஷ்டி உற்சாகத்தோடு கூடிய விசேஷ மனோதர்மமும் இன்றி யமையாதது.

'இறைவன் கழல் ஏத்தும் இன்பம் இன்பமே,' 'செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே' என்று பக்த மணிகள் கூறுவர். இரசிக மணிகளோ, 'செவிச்செல்வமே எமது தனிப்பெருஞ் செல்வம்; கவியின்பமே எமது பேரின்பம்! என்று இறுமாந்து கூறுகிறார்கள்.

# 11. பாரதியார் தமிழ்ப் புலமை

எஸ். சோமசுந்தர பாரதி, எம். ஏ., பி. எல்.

சமீபத்தில் காலஞ்சென்ற சி. சுப்பிரமணிய பாரதியார் தன்னிகரில்லாத் தமிழ்ப் புலவர். நமக்கு நெருங்கிய காலத்தவராகவே, அவர் கவிநலத்தின் உயர்வை உள்ளபடி அளந்தறிவது அருமையாகும். வெறுப்பவரும் நயப்பவரும் நடுநிலையின்றி இவர் இயல்புகளைக் கடைஇறந்து காண்பாராவர். நம் கால நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு நவீன ஆதர்சத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு, நம்மிடையே பாடும் நம் காலப் புலவர் ஒருவரின் கவிகளை மிதமிஞ்சிப் புகழ்வாரும் வெறுத்து மிகப் பழிப்பவரும் பலராவர்; ஆனால் இத்தகைய புலவரின் கவிகளை, கவிநலம் அறிவதன்றி வேறு நோக்கங் கொள்ளாது, தம் உணர்வைக் கவரவிடாது படிப்பதும், படித்து அவற்றின் இயல்பை அளந்தறிவதும் மிகச்சிலர்க்கே ஆவதாகும். நடுமை நல்லறிவாளர், பாரதியாரது கவித்திறம் அறிந்து கூறும் நய உரைகள் காணும்வரை, மற்றவர் இப்புலவர் கவிதை நலம் காண முயல்வது தவறென்பது தகாதன்றோ? ஆனவரை இத்தமிழ்ப் புலவர் கவிநலத்தை ஆராய்வோம்.

முதலில் தற்காலத் தமிழ்ப்புலவர் சங்கேதங்களுக்குப் பாரதியார் பெரும்பாலும் இணங்காதவர். நாக பந்தங்களும், ஏகத்தாள் இதழ்அகல் யமக அந்தாதிகளும், புலமைத் தலைக்கோலாக் கருதும் பாவலரிடையில், சித்திரகவி சத்துருவான பாரதியார் பாக்கள் மதிக்கப்படுவது அருமையேஆகும். மனோபாவ அருமையோடு பொருளும் வறண்ட தற்காலத்திலே, புலமை வனம், அழகொடு மணம் செயுமலர்களேனும், கொழுவிய தன்சுவைக் கனிகளேனும், தரமாட்டாது; அடர்ந்திருண்டு காழ்த்து மலிந்த இலைச்செடிகளாலும் புதர்களாலுமே நிறைந்து தோன்றுவது இயல்பாகும். தற்காலம் தழைகளே தழைவதாகவே, மணமற்ற தழை மாலைகளே பெரும்பாலும் தொடுக்கப்படுகின்றன. அழகு மணம் முதலிய இயற்கை நலம் இல்லாததாகவே, தழைகளை வினைத்திறம் மலியப் பலவாறு தொடுத்து, அடுக்காலும் தொடையாலும் பல் வேறுபட்ட இலைமாலைகளையே பலரும் முடைகின்றனர். இவ்வனத்திடையே தளரா ஊக்கம் உடையான் ஒரு புலவன், வெறுஞ் செடிகளைந்து, நிலம் திருத்தி, உணர்வு நீர் வார்த்து, உரன் கதிர்

ஊட்டி வளர்த்த நல்ல தமிழ்ப் பூந்தோட்டத்தில், நறுமலரும் சுவைக்கனியும் காணப்பெற்றால், அஃது அந்த வனத்தின் இயல்புக்குப் பொருத்தமற்ற அபூத விளைவாகவே தோன்றும். பாரதியார் பாக்கள் இப்படிப்பட்ட இலை வனத்திடை எழுந்த கனி மலர்த் தோப்பாம்.

இவர் பாக்கள், கருத்துக்களை வருத்தமின்றி விளக்கும் பண்டைப் பாவலர் பளிங்கு நடை பயின்று, இளகி ஒளிரும் வெண்பொன் ஒழுக்கும், இனிய ஓசையும், திட்பமும், சுவையும் உடையன. இப்புலவரது நூல்களைப் படிப்பவருக்கு நிகண்டு அகராதிகள் வேண்டா; கள்ளமற்ற உள்ளமும், ஊன்றிய கவனமும், தமிழில் ஆர்வமும் உடையாருக்கு இப்புலவர் இதயம் வெள்ளிடை மலையாம். எளிய இனிய இவர் கவிநடை நீரொழுக்கு உடைய தேனும், வயிரத்தின் திண்மையும் ஒளியும் பெற்று நிற்கும்.

‘ நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு ’

‘ மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கி இருந்தேன்
மூலைக் கடலினை அவ்வான வளையம்
முத்தமிட்டே தழுவி முகிழ்த்தல் கண்டேன் ’

இனைய உருகுபொன் ஒழுக்குடைய ஒப்பற்ற இனிய அடிகளைப் படிக்குந் தோறும் நாவும், கேட்குந்தோறும் செவியும் இனிக்கும்.

அலங்காரங்களுக் கெல்லாம் தாயான உவமையைக் கையாளுவதில் இப்புலவர் பண்டைப் பாவலர் பலருக்கும் இளையாதவர்; இக்காலத்தில் இணையற்றவர். வருந்தித்தேடிப் பொருந்தச் செய்யும் புலவர் பெருமுயற்சியை, நன்றி மறவாது சுமந்துகாட்டும் பல புலவர் அணிகளைப் போலன்றி, பாரதியாரின் உவமைகள், இயற்கையினின்று இவர் வாக்கைத் தேடி வந்தடையும். கருத்துக்குப் பொருத்தம் உடைமையோடு, கேட்போர் மனத்தில் பதிந்து மறையாது உறையும் செவ்வி உடையவாம் இவர் உவமை அனைத்தும். இயற்கையி

னின்று எளிதிலெடுத்து, தன் கவிதை அமுதருத்தி இவராளும் உவமைகள், இப்புலவர் கற்பனைத்திறனையும், ஒப்புணர் தேர்ச்சியையும், கவ்வனை கைவினை முதிர்ச்சியையும், அநாயாச ஆட்சியையும் இனிது காட்டும். பழம் பாட்டுக்களைத் துருவி, பண்டை உவமைகளை உருவி, தம் புலமை நிறுவக் கருவியாக்கும் இழிசெயலை அறவே வெறுத்தவர் இப்புலவர்.

‘ தேனை மறந்திருக்கும் வண்டும்—ஒளிச்
சிறப்பை மறந்து விட்ட பூவும்,
வானை மறந்திருக்கும் பயிரும்—இந்த
வையம் முழுது மில்லை தோழீ ’
‘ கண்ணன் முகமறந்து போனல்—இந்தக்
கண்கள் இருந்து பயன் உண்டோ?’

என வருவன பல உவமைகளையுங் காண்க. உவமான உவமேய இயைபுகளும், அவைகளின் அழகும், கவிகளில் இவற்றின் அமைப்பும் விசதமாக எடுத்து விரிப்பதானல், இவற்றிற்கே பல வியாசங்கள் வேண்டும். கேவலம் பண்புகளையும் மனோபாவ எண்ணங்களையுமே உருவகப்படுத்தி, அவற்றின் உதவி கொண்டு, தம் கோள் நிறுவுதலில் இவர் கைவந்த சமர்த்தர்.

இவரைக் குற்றமற்ற மதுரகவி என்னலாம். இவர் சித்திர கவிக்கு மித்திரரில்லை. பண்டை முறைப்படி விஸ்தாரப் படுத்தியாதொரு நூலுஞ் செய்ய இவர் விரும்பினதாய்த் தெரியவில்லை. வெளிவந்த ‘ பாஞ்சாலி சபதம் ’ ஒத்த சில சிறு காவியங்களையும், அச்சேறுத ‘ சேற்றூர் உலா ’ அன்ன சில ஒரு துறைக்காதற் பனுவல்களையும் இவர் செய்ததுண்டு. இவர் இயற்றிய ஒரு பொருள் நுதலிய பலதுறைக்கோவைகளில், ‘ கண்ணன் பாட்டும்,’ ‘ சுதேசகீதங்களுமே ’ தலைநின்ற சிறப்புடையனவாம். கவிதொறுங் கனியும் தேனும், அடிதொறுங் கமழுங் கண்டும் தெவிட்டாத சுவை தருவதாம்.

பண்டு தொட்டுப் பாவலர் நால்வகைப் பாவிலும் இயற்றியுள்ள பனுவல்கள் ஆயிரக் கணக்கானவை. திருத்தக்க தேவரும், கம்பரும் விருத்தப்பாவை வீறு பெறச் செய்ததுமுதல், பிந்திய புலவரெல்லாம் பாக்களின் பண்பையும் பயனையும் அறவே மறந்து,

விருத்தப்பா இனத்திற்கே அரசுரிமை தந்துவைத்தார். விருத்தமல்லாப் பல திறைப் பாவினங் கொண்டெழுந்து, விழுமிய தனிப் பனுவலாகப் புலவர் போற்றுவது, தற்கால உலகில் கலிங்கத்துப் பரணி ஒன்றே. இந்நிலையில் தமிழகத்தெழுந்த நம் புலவர், தனிப் பாசுரங்களால் தலைநின்ற தம் கவித்திறத்தை எவ்வகைப் பாவினுங் காட்ட வல்லராயினும், தாம் தொகுத்த பனுவல்கள் பலவும் இசையோடு பாடத்தகும் பாவினப் பாட்டுக்களைக் கொண்டே செய்து அமைத்து வைத்தார். நமது கவியின் புதுக் கருத்துக்களுக்கும், நாடு மொழி மதங்களோடு குறுகாமல் மக்கள் நலத்தோடு விரிந்த விசால நோக்கத்துக்கும், உலக முழுதும் பரந்து வந்து நமது நாட்டையும் இயக்கும் புதுக்கிளர்ச்சிக்கும் மிக்க பொருத்தம் உடையதாக, தம் கவி உள்ளம் கனிந்துருகி அலைந்தெழும் உணர்வு வெள்ளத்தை வழிப்படுத்தித் தமிழ்ப் பெருமக்களை ஊக்கி, அவர்க்கு ஆக்கம் தருவதற்கு இசை இனிக்கப் பாடுவதே கடன் என்றறிந்த புலவர், அக்கருத்து மேற்கொண்டும், இவர் இப்புதுவழிப் புகுந்து, தமிழருக்குப் புதிய உணர்ச்சியும் தமிழுக்குப் புதுப் புத்தணிகளும் தேடித் தந்துளார்.

எதுகை மோனைகளைத் தேடிப் பொருளிழந்து திண்டாடும் பாக்களால் புண்பட்ட தமிழ் மகள், தொட்டதெல்லாம் பொன்னாக்கும் இவர் பாவன்மை வேதுபெற்று, ஆறுதலும் மகிழ்வும் அடைவாள். பாப்பா பாட்டு, முரசுக் கவிகளால் மிழன்று, பள்ளும் கிளிப் பாட்டும் பயின்று, விடுதலை, தாய்நாடு பாடி, பாஞ்சாலி சபதம் கூறி, கண்ணன் பாட்டு ஜீவன் முக்திகளில் வீறிய இவர் கவிதை நலம், பண்ணேறி விண்ணுயர்ந்து உலவுவதாகும். சமயம், ஆசாரம், சமுதாய ஒழுக்கம் ஆகியவற்றுள் சம திருஷ்டியும், சர்வாபி அனுதாப நிறைவும் இவர் பாத்தொறும் பரவி விரவும். எனைத்தானும் தற்காலத் தமிழுலகில் இவரொத்தாரைக் காண்பரிது ; மிக்கார் இலராவர்.

# 12. சரம கவிராயர்

புரபசர், ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
சென்னைப் பல்கலைக் கழகம்

காவேரி யாற்றின் கரையிலுள்ள தோணிபுரியிலே பிறந்தான் பொன்னப்பன். அவன் தந்தை தமிழறிந்தவர்; தாய் பழங்கதை சொல்வதில் பேர்பெற்றவள். பொன்னப்பனை ஒரு பெரிய கவி ராயனாக்கிவிட வேண்டும் என்பது தந்தையின் ஆவல். காலையில் நாலரை மணிக்கே பையனை எழுப்பி விடுவார்; சாலை வழியாக ஆற்றங்கரைக்கு அழைத்துச் செல்வார்; வழியெல்லாம் நிகண்டும், நன்னூலும், வாய்பாடமாகச் சொல்லிக் கொடுப்பார். தலைகால் புரியாமல் பொன்னப்பன் கிளிப்பிள்ளை போல் தூக்க மயக்கத்திலே பாடஞ் சொல்லிக் கொண்டு போவான். தினந்தோறும் பாடம் ஏறிக்கொண்டே போயிற்று. பையனுக்கு வெறுப்பும் வளர்ந்து கொண்டே சென்றது.

நாள் தோறும் மாலைப்பொழுதில் பொன்னப்பனுக்கு அவன் தாயார் கதை சொல்லுவாள். அக்கதை பேய்க் கதையாகவே இருக்கும். ஒரு நாள் முண்டாசு கட்டி வரும் சண்டிக் கறுப்பன் கதையைச் சொன்னாள். அந்தக் கறுப்பன் நாற்பது முழக் கறுப்புத் துணியை வால்விட்டுத் தலையிலே கட்டிக் கொண்டு, கிறுதா மீசையை முறுக்கிக்கொண்டு பையனுக்குக் கனவிலே காட்சி கொடுத்தான். மற்றொரு நாள் மாலையில் அவள் சங்கிலிப் பூதத்தான் சரித்திரத்தைச் சொன்னாள். அன்றிரவு சல சல என்ற ஓசையும், கலகல என்ற சிரிப்பும் பையன் செவியில் விழுந்து கொண்டே இருந்தன. பேய்க்கதைகளைக் கேட்டதன் பயனாகப் பொன்னப்பன் இருட்டிவிட்டால் வீட்டைவிட்டு வெளியே போகமாட்டான். அந்தி சந்தியில் ஆற்றுக்குத் தனியே போக நேர்ந்தால், ஒரு வேப்பங் கொம்பைக் கையில் எடுத்துக் கொண்டு போவான். வேப்பந்தடி யிருந்தால் பேய் அணுகாது என்று அவன் தாய் சொல்லி வைத்திருந்தாள். பள்ளிக்கூடப் படிப்பில் பொன்னப்பன் தந்தைக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. 'பள்ளிக் கல்வி புள்ளிக்குதவாது' என்று அடிக்கடி அவர் சொல்வார். அந்த வசனம் தினந்தோறும் செவியில் விழுந்தும் பையனுக்கு அதன் பொருள் தெரியவில்லை.

ஒரு நாள் அமாவாசைச் சாப்பாடு முடித்துத் தந்தை திண்ணையில் சாய்ந்திருக்கையில் அவரைப் பார்த்து,

பையன் :—அப்பா! 'பள்ளிக்கல்வி புள்ளிக்குதவாது' என்று தினந்தோறும் சொல்லுகிறாயே! புள்ளி என்றால் என்ன?

தந்தை :—அப்படிக் கேளப்பா! பிழைக்கிற பிள்ளை அப்படித்தான் கேட்பான். இந்த வசனத்தை எல்லோரும் சொல்லுவார்கள். ஆனால், ஒருவர்க்கும் உண்மைப் பொருள் தெரியாது.

பையன் :—அப்படியானால் உனக்கு மட்டும் எப்படித் தெரிந்தது அப்பா? யார் சொல்லிக் கொடுத்தார்?

தந்தை :—பிள்ளாய்! கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த பொருளும் கவைக்குதவுமா? நானே முயன்று கண்டு பிடித்தேன். 'வருந்தினால் வாராத தொன்றில்லை' என்பது உண்மையல்லவா?

பையன் :—நீ வருந்திக் கண்டுபிடித்த அர்த்தத்தை எனக்குச் சொல்லித்தர மாட்டாயா?

தந்தை :—உனக்கில்லாமலா! இதோ சொல்கிறேன். ஆனால், நான் சொல்லும் அர்த்தத்தை எவனிடமும் சொல்லாதே! இப்பிரபஞ்சம் படுமோசம்! பாடுபடுபவன் ஒருவன்: பலனடைபவன் மற்றொருவன். இந்தப் பழமொழியின் பொருளைச் சொல்லி விட்டாயோ, மறுநாள் 'வெடிகுண்டு விகட'னில் அதைக் கேட்டவன் வெளியிட்டுப் பணமும் புகழும் பெற்றுக் கொள்வான்.

பையன் :—நான் சொல்வேனா அப்பா! நீ உன் மூளையைக் கசக்கிப் பிழிந்து கண்டுபிடித்த கருத்தை நானா வெளியே சொல்வேன்?

தந்தை :—நீ சமர்த்தன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இவ் வஞ்சக உலகத்தை நினைக்கும் பொழுது என் நெஞ்சம் நடுங்குகிறது. நன்றாகக்கேள்! நன்னூல்தான் உனக்குத் தளபாடமாய்த் தெரியுமே! புள்ளி என்பது ஆயுத எழுத்து. அது மூன்று புள்ளியாய் அடுப்புக்கட்டி போலிருக்கும். பள்ளிக்கூடப் படிப்பு அடுப்புக் கட்டிக்குக்கூட உதவாது என்பது அப்பழமொழியின் கருத்து. அடுப்புக்கட்டிக்கு உதவாது என்றால் அடுப்புக்கு உதவாது; ஒரு பிடி அன்னத்துக்கு உதவாது என்பதைப் படிப்படியாக உய்த்துணர வேண்டும்.

பையன் திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தான் ; ஒன்றும் புரியவில்லை. மூளை கிறுகிறுத்தது.

பையன் :—போதும் அப்பா ! எல்லாம் விளங்கிப் போச்சு. நான் இனிப் பள்ளிக்கூடம் போகவே மாட்டேன். வீட்டிலிருந்து தமிழ் பாட்டுக் கட்டுவேன். ஒழிந்த நேரத்தில் அம்மாவுடன் இருந்து அடுப்பு மூட்டுவேன்.

தந்தை :—அதுதான் சரி, 'சோறு பொங்கித் தின்னு ; சொந்தக் கவி பண்ணு' என்று அந்தக் கவிராயர் கொச்சையாய்ச் சொல்லுவார். ஆயினும் அது நல்ல வசனம்.

பையன் எழுந்து போனான். பாட்டுப்பாட வேண்டும் என்னும் ஆசை அவனைப் பற்றிக் கொண்டது. ஓசையே பாட்டுக்கு உயிர் என்பது அவன் கருத்து. 'சீரும் தளையும் சிறியோர் பார்ப்பர் ; மோனையும் எதுகையும் மூடர் விரும்புவர்' என்று யாப்பிலக்கணம் படித்துப் பாட்டெழுதும் பள்ளிப்பிள்ளைகளை அவன் பரிகாசம் செய்வான்.

முதலில் எல்லார்க்கும் படியளக்கும் கடவுள்மீது பாட்டுக் கட்டுவதே முறையென்று பொன்னப்பனுக்குத் தோன்றிற்று. வளமாகச் சோறும் கறியும் தரும்படி சிவபெருமானைப் பாடினான்.

'கற்பனை கடந்தவன், கறிசோறு தருபவன் ;
வெற்பினில் உறைபவன், வெஞ்சனம் அளிப்பவன் ;
சற்பத்தை அணிபவன், சாம்பாரும் தருபவன் ;
நற்பதம் பணிவேன், நான்பசி தணிவேன்'

என்று தொடங்கி அறுசுவை உண்டிக்குப் பத்துப் பாட்டுப் பாடி முடித்தான். அப்பாட்டுக்கு 'அகட்டுத் திருப்பதிகம்' என்று தலைப்பிட்டுத் தந்தையிடம் கொண்டு போனான். பொன்னப்பன் பாடிய முதற்பாட்டு அன்னப் பாட்டாயிருக்கக் கண்டு தந்தை ஆனந்த மடைந்தார். 'அவரை போட்டால் துவரை முளைக்குமா ? துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்திருக்கின்றது' என்று மெச்சினார். 'பள்ளிக்கூடத்தில் படிக்கும் பயல்கள் அசட்டுப்பிசட்டென்று பாடுகிறார்களே ! என் மகன் பாடிய அகட்டுப்பாட்டின் அடித்தூசி விலைபெறுமா அவை ? அகட்டுப்பாட்டு என்ற தலைப்பின் அர்த்தந்தான் அப்பயல்களுக்குத் தெரியுமா ? என் பிள்ளை

பொன்னப்பனுக்கு நிகண்டு தலைகீழாய்ப் பாடம். 'அகடும் மோடும் உதரமும் வயிறே' என்ற பண்டை நிகண்டு மனப்பாடமா யிருப்பதால் அன்றோ வயிற்றுப் பாட்டை அகட்டுப்பாட்டு என்று அழைத்தான் என் அப்பன்? இவன் காலத்தில் பெரிய கவிச்சக்ர வர்த்தி யாவான்.' என்று எண்ணி மனங்களித்தார். அகட்டுத்திருப் பதிகத்தை ஆறுதரம் படித்தார்; பல ராகங்களில் பாடினார். அத் திருப்பதிகத்துக்கு ஒரு சிறப்புப் பாயிரமும் கொடுத்தார்.

' அன்னக் கவிபாடி அகங்குளிரச் செய்திட்ட
பொன்னப்பா! உன் தன் புலமைத் திறத்தாலே
மன்னவரும் போற்ற மணியா சனத்திருப்பாய்!
என்னப்பா! என்குலத்திற் கேற்ற எழிலொளியே! '

என்று தந்தை பாடித்தந்த பாயிரத்தைப் பையன் பதிகத்தோடு சேர்த்துக் கட்டிவைத்துக் கொண்டான்.

அன்னப் பாட்டுப் பாடிப் புகழ்பெற்ற பொன்னப்பக் கவிராயர் அன்றுமுதல் ஆயிரம் ஆயிரமாகப் பாடித்தள்ளினர். அவரது கவியின் பெருக்கத்தைக் கண்டவர்கள் கம்பருக்கும் காளிதாச ருக்கும் அருள் செய்த காளியே அவருடைய நாவிலும் சூலத்தால் எழுதிவிட்டாள் என்று வெளிப்படையாகப் பேசினர்கள். அவர் வாக்குப் பலிக்கும் என்று நம்பித் தோணிபுரி வாசிகள் அவருக்கு வேண்டிய பொருள் கொடுத்தார்கள். பணக்காரர் வீட்டில் கல்யாணம் நடந்தால், பொன்னப்பக் கவிராயர், பட்டைத் தார்ப் போட்டு, நெற்றியிலே திருநீற்றைப் பட்டையாக இட்டு, வெள்ளிப் பூண் பிடித்த தடிக்கொம்பைக் கையிலே பிடித்து, கம்பீரமாக நடந்து செல்வார். கல்யாணப் பந்தலிலுள்ள மிராசுதார்கள் மரியாதையாக விலகிச் சபையின் நடுவே கவிராயருக்கு இடங் கொடுப்பார்கள். மணச்சடங்கு முடிந்தவுடனே கவிராயர் நளின மாக வெள்ளி டப்பியிலிருந்து பொடி யெடுத்து நாசியால் இழுத்துக் கொண்டு, உச்சத் தொனியில் தம் வாழ்த்துப்பாட்டை எடுத்து விடுவார்.

ஒரு நாள் நந்திபுரிச் சுந்தர முதலியார் வீட்டில் விமரிசையாக நடந்த கல்யாணத்திற்குக் கவிராயர் போய் இருந்தார். மணமக்கள்

மணவறையைச் சுற்றி வந்து உட்கார்ந்ததும் கவிராயர் 'மந்திகள் லாகை போடும்' என்று ஒரு எடுப்பு எடுத்தார்.

'மந்திகள் லாகை போடும்
நந்தியம் புரியில் வாழும்'

என்று ஆரம்பித்தவுடன் பந்தலில் பேச்சு அடங்கிற்று. எல்லோரும் ஒரு முகமாய்ப் பாட்டைக் கேட்டார்கள். அவ்வூரில் உள்ள மாஞ் சோலையில் மந்திகள் கிளைக்குக் கிளை தாவித் தலைகீழாக ஆடும் அழகைக் கண்டு கவிராயர் ஒரு பாட்டுக் கட்டிவிட்டாரே என்று பாட்டிகள் பாராட்டினார்கள். பந்தலுக்கு வெளியே கிள்ளித்தட்டு விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் பாட்டைக் கேட்டவுடனே ஒரு லாகை போட்டுக் கவிராயர் வாக்கை மெய்ப்பித்தார்கள்.

மற்றொரு நாள் சமரபுரி முதலியார் வீட்டில் ஒரு அமரகிரியை நடந்தது. அதைக் கேள்விப்பட்ட கவிராயர் கருமாந்தரக் கூட்டத்திற்புகுந்து,

'அமரர்கள் கண்ணீர் சிந்த
அந்தரர் பொருமி யேங்கத்
தம ரெலாம் தவித்து வாடத்
தங்கையர் தளர்ந்து சோர'

என்று உருக்கமாய் எடுத்த பாட்டு முடியுமுன்னே, அங்கிருந்த மங்கையர் ஓவென்று அலறி அழத் தொடங்கினார்கள். அழுகையால் பாட்டு அரைகுறையாய் முடிந்தது. பாட்டைக் கேட்டு உருகிய சமரபுரி முதலியார் கவிராயருக்கு வெள்ளிப் பாக்குவெட்டியொன்று பரிசளித்தார்.

இவ்வாறு நன்மை தீமைகள் நேராத காலங்களில் கவிராயர் சீமான்கள் மீது சித்திரக் கவி செய்வார்; சில பேர்வழிகளை நாக பந்தத்தில் அடைப்பார்; மற்றும் சிலபேரைக் கமல பந்தத்தில் கட்டுவார்; பந்தங்கள் தயாரானதும் வெள்ளித் தடி பிடித்து அவர்கள் வீட்டை நோக்கிச் செல்வார். ஒரு நாள் கவிராயர் நாக பந்தத்தை எடுத்துக்கொண்டு அரசூர் ஆனையப்ப பிள்ளையைக் காணச் சென்றார். அவர் தம் பங்காளிகளின் மீது தொடுத்திருந்த வழக்கு அவருக்குப் பாதகமாகத் தீர்ப்பான செய்தி அப்பொழுது

தான் தந்தியின் மூலமாக வந்திருந்தது. சாய்வு நாற்காலியில் சோர்ந்து சாய்ந்திருந்த பிள்ளையவர்களின் முன்னே நின்றுகொண்டு,

‘ தந்தி யொன்று வந்ததென்று
நோந்திருக்கும் வேளையில்
பந்த மோன்று தந்து நான்
வந்தனை புரிகுவேன் ’

என்று கவிராயர் போட்டபோடு அவரைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. தந்திக்காரனைத் தலைவாசலில் கண்டு செய்தி யறிந்து கொண்டு கவிராயர் உள்ளே வந்தார் என்பதை அறியாத பிள்ளை யவர்கள் ஆச்சரியப்பட்டு வணங்கி அவரை வரவேற்றார்; உபசரித் தார். காரியம் பலித்த தென்றெண்ணி, கவிராயர் பந்தத்தைக் கம்பீரமாகப் படித்துக் கொடுத்தார். பந்தப் பாட்டின் பொரு ளறியாத பிள்ளையவர்கள் காளியின் அருள்பெற்ற கவிராயரொடு பேசவும் அஞ்சி, ஐம்பது ரூபா சன்மானம் கொடுத்து, கோர்ட்டுச் செலவோடு செலவாய், பந்தச் செலவு, ரூபா ஐம்பது என்று எழுதி விட்டார்.

காலஞ் செல்லச் செல்லக் கவிராயர் புகழ் ஏறிக்கொண்டே போயிற்று. அவரது வயதும் நாற்பது நிறைந்தது. அவரது இருபத் தெட்டாவது வயதில் தாயார், பிள்ளையிடம் சரமகவி பெற்றுக் கொண்டு, பரமபதம் அடைந்தாள். பின்னும் ஐந்து ஆண்டுகளில் தந்தையும் கவிராயரிடம் விடை பெற்றுக்கொண்டார். பெற்றோர் இருவரும் போய்ச் சேர்ந்தபின்பு, கவிராயர் கல்யாணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தவேண்டுமென்று, அவர் உற்றார் உறவினர் சொல்லத் தொடங்கினார்கள். அவர்கள் கல்யாணப் பேச்சை எடுக்கும்பொழுது ‘அந்த இழவு யாருக்கு வேணும்?’ என்று கவிராயர் நறுக்கென்று பேசிவிடுவார். ஆகவே கல்யாண ‘இழைவை’ப் பற்றி யாரும் அவருடன் பேசுவதில்லை.

நாளடைவில் கவிராயருக்கு, ‘நாகபந்த நாயகம்’ ‘சரம கவிச் சிங்கம்’ முதலிய பட்டங்கள் வலிய வந்து சேர்ந்தன. ஆயினும் ஒரு பெரிய ஆசை அவர் மனத்திலே குடிகொண்டிருந்தது. பதினா யிரம் பாட்டுப்பாடிய கம்பர் கவிச் சக்கரவர்த்திப் பட்டம் பெற்றால் அறுபதினாயிரம் கவி பாடிய பொன்னப்பர் ஏன் அப்பட்டம் பெறக்கூடாது என்பது அவர் கேள்வி. மேலும் அவர் கவிச் சக்கர

வர்த்திதான் என்று மனசாட்சி உள்ளிருந்து சொல்லிக்கொண்டே யிருந்தது.

கவியரசுப் பட்டம் பெறுவதற்கு மதுரையும் காஞ்சியுமே சரியான இடங்கள் என்று கவிராயர் எண்ணினர்; முதலில் மதுரைக்குத் தன் பரிவாரங்களோடு புறப்பட்டார். அங்கே கோனேரியப்பக் கவிராயர் என்பவர் முத்தமிழ்ப் புலவராக மதிக்கப் பட்டிருந்தார். அவருடைய முழக்கத்தைக் கேட்டு அஞ்சிய மதுரைச் சங்கத்தார் 'கோடையிடிக் கோனேரியப்பர்' என்று அவரை அழைத்தார்கள். அக் கோடை யிடியைப் பொன்னப்பக் கவிராயர் காணச் சென்ருர். தாம் இயற்றி அச்சிட்டிருந்த நாக பந்தம், கமல பந்தம் முதலிய பந்தங்களையும் சரமகவி சீட்டுக்கவி முதலிய பாட்டுக்களையும் கோடையிடியிடம் காட்டினர். சரம கவிச் சிங்கத்தின் கர்ச்சனை கோடையிடியின் முழக்கத்தினும் அதிக மாகவே இருந்தது.

கோடையிடி :—'தோணி புரித்தோன்றலே நாக பந்த நாயகமே!' அடியேன் குடிசை தங்கள் வருகையால் புனித மடைந்தது. எளியோன் தங்களுக்கு என்ன செய்யக்கூடும்? தங்கள் சித்தம் என் பாக்கியம்.

கவிராயர் :—

'கோடையிடி முழக்கும் கோனேரியப்பா! கேள்
மாடமதி தவழும் மதுரை மாப்புலவரிடம்
நாடறியப்பட்டம் நயந்துபெற வேணுமென்றே
காடும் கரையும் கடந்திங்கு வந்தேன்காண்'

கோடையிடி :—கல்விக் களஞ்சியமே! கவிச்சிங்கமே! மூச்சுவிடு முன்னே முப்பது கவிபாடும் உங்களுக்கு நாங்கள் பட்டமளிக் கும் தரமுடையோமா? நீங்கள் இருப்பது மலையின் முடி; நாங்கள் கிடப்பது மடுவின் அடி. மதுரையின் பெருமை யெல்லாம் பழங்கதையாய்ப் போயிற்று. கவிப்பெருஞ் சிங்கமாய், திருப்பதி முதல் கன்னியாகுமரி வரை திக்குவிஜயம் செய்துள்ள தங்கள் பெருமையை அறிய வல்லார் இங்கு எவரும் இல்லை. கவிச்சக்கரவர்த்திப் பட்டம் பெற்ற ஒட்டக் கூத்தர் குலத்தில் பிறந்தவர் ஒருவர் காஞ்சிமா நகரில் இருக் கிருர். 'அடுக்குமொழி ஆனந்தக் கூத்தர்' என்று அவரை அறிந்தோர் அழைக்கிருர்கள். அவர் கொடுக்கும் பட்டம் இப்

பொழுது எல்லோராலும் மதிக்கப்படுகிறது. தாங்களும் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே !

கவிராயர் :—' இது நல்ல கருத்து. காஞ்சிமா நகரம் கல்விக்குப் பேர்போன இடம். ஆனந்தக்கூத்தன் ஒட்டக் கூத்தருடைய மகன் வழியிலே வந்தவன். ஆயினும், ஒட்டக்கூத்தர் உடம்பில் ஓடிய இரத்தத்திலே ஒரு துளியேனும் அவருடம்பில் ஓடா திருக்குமா ? இன்றே போய் அவரைப் பார்க்கிறேன் ' என்று எழுந்து, கோடையிடியிடம் விடைபெற்றுக் காஞ்சி நகர்க்குச் சென்றார். அப்பொழுது அடுக்குமொழிக் கூத்தர் காலிற் புண்பட்டுப் படுக்கையில் இருந்தார். சரமகவிராயர் அந்நிலையிற் காணவந்தது ஒரு தர்ச்சகுணம்போல் அவருக்குத் தோன்றியது. ஆயினும் கவிராயரை உள்ளே வரவழைத்து ' பங்கமில்லாப் பாட்டிசைக்கும் சிங்கமே ! வருக ; சங்கமா முடியில் வைகும் தங்கமே ! வருக ' என்று அடுக்கு மொழி கூறி வரவேற்றார்.

கவிராயர் :

' அடுத்த மொழிவிடுக்கும் ஆனந்தக் கூத்தா! கேள்
படுத்தபடி யறிந்தும் பாடுரைக்க வந்தோம் யாம்;
எடுத்த பெருங்கவிபாடி எற்றமுற்ற கூத்தருடன்
தொடுத் திலங்கும் பேறெமக்குத் தோன்றல் ! அருளாயே '

என்று தம் கருத்தைத் தெரிவித்தார்.

உடனே அடுக்கு மொழி, ' சகலபந்த சரபமே ! இந்நிலவுலகில் நின்னைப்பார் பிறர் இன்றி நீயே யானாய்! கவிச்சக்கரவர்த்தி யென்று புவிச்சக்கரவர்த்திகள் பாராட்டிய ஒட்டக்கூத்தருக்குப்பின் அப்பட்டம் எவரையும் சென்றடைந்ததில்லை. இன்று கவியுலகத்தில் சக்கரவர்த்திப் பட்டம் பெறுவதற்குத் தங்களைத் தவிர, தகுதியுடையவர் வேறு யார் உள்ளார் ? தில்லைவாழ் அந்தணர் சந்நிதியில், தமிழ்ப் பெரும் புலவர்கள் முன்னிலையில் தங்களுக்கு அப்பட்டம் அளிக்கப் படல் வேண்டும். அதற்குரிய ஏற்பாடுகளைச் சிதம்பரத்தில் செய்வீர்களானால், அடியேன் கால் நோய் தீர்ந்து வந்து அக்காட்சியைக் கண்குளிரக் காண்பேன் ' என்றார்.

அடுக்குமொழிக் கூத்தர் சொல்லியது கவிராயருக்கு மிகப் பொருத்தமாகவே தோன்றிற்று. ' எல்லையற்ற பெருமையுடையது

தில்லையம்பதி; சபைகளில் சிறந்தது அங்குள்ள கனக சபை; அச்சபாநாதர் நிகரற்ற தலைவர். அப்படிப்பட்ட பொன்னம்பலத்திலே தில்லைவாழ் அந்தணர் சபையிலே நான் பெறும் பட்டம் உலகம் உள்ள வரையும் அழியாததாகும்' என்று எண்ணினர்: உடனே சிதம்பரத்தை நோக்கி எழுந்தருளினர்.

அங்கு வேதாந்த வியாகரண தர்க்க நியாய சிரோமணியாய் விளங்கிய சபாரஞ்சித தீட்சிதரிடம் கவிராயர் சென்று தம் ஆசையை வினயமாய்த் தெரிவித்தார். அவரும் கவிச்சக்கரவர்த்திப் பட்டம் கொடுக்கும் பெருமை தமக்குக் கிடைத்ததைக் குறித்து அடங்கா மகிழ்ச்சி கொண்டார். சிதம்பரத்தில் 'ஆனித் திருமஞ்சன விழாவிற்கு அடுத்த நாள், ஆயிரக்கால் மண்டபத்தில் தோணிபுரித் தோன்றல் ஸ்ரீ பொன்னப்பக் கவிராயருக்குக் கவிச்சக்கரவர்த்திப் பட்டம் கொடுக்கப்படும்' என்று, சபாரஞ்சித தீட்சிதர் ஆயிரம் பேருக்கு அறிக்கையும் அழைப்பும் அனுப்பினர். குறிப்பிட்ட நன்னாளில் மதுரையிலிருந்து கோடையிடிக் கவிராயரும், காஞ்சியிலிருந்து அடுக்குமொழி ஆனந்தக்கூத்தரும், சென்னை வரகவி [வறட்டுக்கவி யென்று சிலர் சொல்வார்கள்] வரதராஜ முதலியாரும் வந்திருந்தார்கள். பட்டம் பெற வந்திருந்த கவிராயரைத் தவிர, பன்னிரண்டு பேர்கள் ஆயிரக்கால் மண்டபத்தில் சமுகம் அளித்தார்கள். சுபமுகூர்த்தத்தில் மாட்சிமை தங்கிய தீட்சதப் பெருந்தகை நீண்ட கரகோஷத்தின் இடையே எழுந்து, பட்டுச் சால்வையைக் கவிராயர் தோளிலே போர்த்து, கட்டிச் சாமந்தி மாலையை அவர் கழுத்தில் அணிந்து, 'வித்வசிரோமணிகளே! சகலபந்த சரபம், சரம கவிச்சிங்கம், தோணிபுரி தழைக்கவந்த தோன்றல், ஸ்ரீ பொன்னப்பக் கவிராஜமூர்த்திகளுக்கு நடராஜர் சந்நிதியிலே கவிச்சக்கரவர்த்தி என்று பட்டத்தை நாம் சூட்டுகின்றோம். இன்று முதல் என்றென்றும் இவரைக் கவிச்சக்கரவர்த்தி'யென்று காசினி வழங்கக் கடவது' என்று ரஞ்சிதமாகப் பேசிமுடித்தார். அடுக்குமொழிக்கூத்தர் அதை ஆமோதித்தார். ஏகமனதாக அகத்தியர் மாணாக்கர் போல் சபையில் வீற்றிருந்த பன்னிருவரும் சிரக்கம்பம் செய்தார்கள். கோடையிடிப் புலவர் வந்தனம் முழக்கினர். சந்தனப்பூச்சுடனும் கொட்டு முழக்குடனும் வித்வசபை கலைந்தது. கவிச்சக்கரவர்த்திப் பட்டம் பெற்ற சரம கவிராயர், பட்டுச் சால்வையோடு நடராஜரைத் தரிசித்து விட்டுத் தம் இருப்பிடம் சென்றார்.

# 13. மெய்யுணர்வு

குறள் - பரிமேலழகர் உரை

எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் - யாதொரு பொருள் யாதோரியல் பிற்றாய்த் தோன்றினும்,— || அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு - அத் தோன்றிய வாற்றைக் கண்டொழியாது அப்பொருளின் கணின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது.

பொருள் தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்ற உண்மையைக் காண்பதென்றவாறாயிற்று. அஃதாவது கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரலிரும் போறை என்ற வழி அரசன் என்பதோர் சாதியும், சேரமான் என்பதொரு குடியும், வேழ நோக்கினை உடையான் என்பதோர் வடிவும், சேயென்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ் சேரலிரும் பொறை என்பதோர் சிறப்புப் பெயரும், ஒரு பொருளின் கண் கற்பனை ஆகலின், அவ்வாறு உணராது, நில முதல் உயிர் ஈறாகிய தத்துவங்களின் தொகுதி என உணர்ந்து, அவற்றை நில முதலாகத் தத்தங் காரணங்களுள் ஒடுக்கிக் கொண்டு சென்றால் காரண காரியங்கள் இரண்டுமின்றி முடிவாய் நிற்பதனை உணர்தலாம். எப்பொருள் என்ற பொதுமையான் இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே உணரப்படும். இதனால் மெய் யுணர்வினது இலக்கணங் கூறப்பட்டது.

# 14. எல்லைப்புறத்திலே!

என் கதை: நாமக்கல் கவிஞர்

பா. வே. மாணிக்க நாயக்கர் பிரசித்தி பெற்ற எஞ்சினியர்; பி. ஈ; பார்-அட்-லா பட்டங்கள் பெற்றவர். நாமக்கல் கவிஞருடைய நண்பர்; உறவினருங்கூட. இவருடன், கவிஞர் 1912-ல் தில்லி தர்ப்பாருக்குச் சென்றார். தர்பாரிலே கவிஞருக்கு, அவர் சிறந்த கலைவாணர் என்பதற்காகப் பரிசளிக்கப்பட்டது. கவிஞரும் எஞ்சினியரும் வடமேல் இந்தியாவைச் சுற்றி, அக்காலம் வேலை நடந்துவந்த சுக்கூர் அணைக்கட்டு, கைபர் கணவாய் முதலிய இடங்களைப் பார்வையிட்டார்கள். அணைக்கட்டு காரணமாக எல்லைப்புற மலைவாசிகள் இந்திய சர்க்காரைப் பகைத்தார்கள். அதனால், அவர்கள் இந்திய எல்லையிலே அடிக்கடி பாய்ந்து, இந்திய சர்க்காரைச் சங்கடப்படுத்தி வந்தார்கள். சுற்றுப் பயணத்திலே தமிழகப் பெரியார்கள் மலைவாசிகளிடம் சிறைபட்டு மீண்ட விநோதத்தைக் கவிஞர் என் கதையில் இப்படி எழுதுகிறார்.—படியுங்கள்—

நாங்கள் புறப்படும்போது மணி மூன்றரை. அடிவாரத்துக்கும் அந்த இடத்துக்கும் பதினைந்து மைல்தான். சமநிலத்து ரஸ்தாவில் அரைமணியில் போய்விடலாம். ஆனால் வளைந்து வளைந்து போகும் மலைப்பாதையில், அதுவும் இறங்கும்போது வேகமாக விடக்கூடாது. 'பிரேக்' போட்டுக் கொண்டுதான் போகவேணும். சுமார் மூன்றுமைல் வந்தோம். மோட்டார் பைசைக்கிள் தகரார் செய்ய ஆரம்பித்துவிட்டது. வண்டியை நிறுத்தி நாயக்கர் சோதித்தார். எண்ணைக் குழாயில் ஏதோ அடைத்துக்கொண்டு, மோட்டார் பெட்ரோல் எடுக்கவில்லை என்று தெரிந்தது. அதற்கு, சாதாரண சிகிச்சைகளான வாயை வைத்து ஊதுவதையும், உறிஞ்சுவதையும், 'பம்பை' க் கொண்டு காற்றடிப்பதையும் செய்து பார்த்தோம். பலிக்கவில்லை; மோட்டார் ரிப்பேரில் நாயக்கர் வெகு கெட்டிக்காரர். அவரையுங்கூட அந்த மோட்டார் வெகுநேரம் திணறச் செய்துவிட்டது. இருந்தாலும் நாயக்கர் அதைச் சரிப்படுத்தி விட்டார். புறப்பட்டோம்; இன்னும் இரண்டுமைல் வந்தோம், இருட்டுகிற சமயம். ஒரு முடுக்கான மூலையில் வந்து கொண்டிருக்கும்போது, பக்கத்து மலைச் சாரலிலிருந்து 'படார்' என்ற வெடிச்சத்தம் கேட்டது. இருட்டிப் போனால் அந்தப் பாதையில் அபாயமுண்டு என்று, துரை எச்சரிக்கை செய்தது என் நினைவுக்கு வந்தது. எனக்குக் கிலி பிடித்துவிட்டது. உடனே நாயக்கர் மோட்டாரை நிறுத்தினார்.

வெடிகேட்ட திசையைத் திரும்பிப் பார்த்தார். ஒரு 'சல்யூட்' செய்தார். அவர் சலாம் செய்ததைப் பார்த்து எனக்கு ஆச்சரியம் உண்டாகி, அச்சம் குறைந்தது. குன்றின்மேல் ஒரு உயரமான உருவம் கையில் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தது. அந்த உருவம் எங்களுக்குப் பழக்கமானது அல்ல. பின் ஏன் அவனுக்கு நாயக்கர் சலாம் செய்தார்?...நாயக்கர் என்னையும் சலாம் செய்யும்படி தமிழில் சொன்னூர். நானும் சலாம் போட்டேன்....

நாயக்கருடைய சட்டைப் பையில் இரண்டு கைத்துப்பாக்கிகள் எப்போதும் இருக்கும். என்னுடைய முதுகில் ஒரு இரட்டைக் குழாய் வேட்டைத் துப்பாக்கியை ஊர் சுற்றும் போதெல்லாம் நாய்க்கர் கட்டிவிடுவார். நான் அதற்குமுன் துப்பாக்கியைத் தொட்டதுகூடக் கிடையாது. சுடத் தெரியாவிட்டாலும் தோளில் ஒரு துப்பாக்கி இருப்பதைப் பெருமையாக எண்ணிக்கொண்டே தான் தினமும் அதைச் சுமந்துகொண்டு போனேன். மலைச் சாரலில் துப்பாக்கி வெடிகேட்டதும் நாய்க்கரும் துப்பாக்கியை எடுப்பாரோ என்று எண்ணினேன். ஏனோ நாய்க்கர் எங்களிடத் திலும் துப்பாக்கிகள் இருக்கின்றன என்று காட்டிக்கொள்ளாமல் சலாம் போட்டார். சலாம் செய்தவுடன் மலைமீதிருந்தவன் தான் இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டிருந்த துப்பாக்கியை இடது கையில் பிடித்துக்கொண்டு வலதுகையை நீட்டி, எங்களை அப்படியே நிற்கச்சொல்லி உத்தரவு காட்டினன். உடனே அவன் மறைந்து விட்டான். நான் பயந்து நடுங்கிக் கொண்டுதான் நின்றேன். பக்கத்தில் இரண்டு பாறைகளுக்கிடையில் ஒரு அடர்ந்த புதர் காணப்பட்டது. அந்தப் புதரிலிருந்து ஏழெட்டு உயரமான தடித்த மனிதர்கள் திபுதிபு வென்று வெளியில் வந்தார்கள். எங்கள் மோட்டார் பைசைக்கிளைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு எங்களையும் இழுத்துக்கொண்டு அதே புதரின் வழியாக நுழைந் தார்கள்.

நாங்கள் எல்லைப்புற ஜாதியாரிடம் சிக்கிக்கொண்டோம். நாய்க்கர் அவர்களுடன் பழகியவர்போல் போனூர். நான் நடுங்கிக் கொண்டே நாயக்கர் பின்னல் நடந்தேன். புதரைத் தாண்டிய வுடன் பெரிய பள்ளத்தாக்கு; ஒற்றையடிப் பாதையில் அந்தப் பள்ளத்தாக்கில் இறங்கினேம். கொஞ்சதூரம் போனபின் இன் னெரு புதர். அதற்குப் பின்னல் குகைபோன்ற கணவாய்; இரு

புறமும் அடர்ந்து செழித்த மரங்கள். அதனால் இருட்டு அதிகம். அங்கே விளக்கோடு ஒருவன் காத்துக் கொண்டிருந்தான். சுமார் மூன்றுமைல் அந்தக் கணவாயில் நடந்தோம். கணவாய் கடந்ததும், நல்ல சமநிலம். வயல்களும் வரப்புகளும் இருந்தன. அங்கே நாலுபக்கமும் மலைகளால் சூழப்பட்ட ஒரு கிராமம் தென்பட்டது.

எங்கள் மோட்டார் பைசைக்கிளை ஐந்தாறு பேர் தூக்கிக்கொண்டே வந்துவிட்டார்கள். கிராமத்தின் முகப்பிலிருந்த மண் குடிசையைப்போன்ற ஒரு வீட்டுக்குள் எங்களைக் கூட்டிக்கொண்டு போனார்கள். வெளியில் குடிசைபோலக் காணப்பட்ட அந்த வீடு, உள்ளே மிகவும் நவீன நாகரிகங்கள் நிறைந்த ஒரு நேர்த்தியான இடமாக இருந்தது. வெகு பிரகாசமான விளக்குகள். மிக உயர்ந்த மேஜைகள். நல்ல நல்ல நாற்காலிகள். சுகமான சோபாக்கள். நீண்ட நிலைக்கண்ணாடிகள். பெரிய கூடம். கூடம் முழுவதும் விரிக்கப்பட்டிருந்த ஒரே ரத்தினக் கம்பளம் விலை மதிக்கமுடியாதது.

நாங்கள் உள்ளே போனதும் அந்தக் கூட்டத்தாருக்குத் தலைவன்போல் காணப்பட்ட மனிதன் எங்களிருவரையும் வெளிச்சத்துக்குச் சமீபத்தில் நிறுத்தி, கைதிகளைப் பார்க்கிற பார்வையுடன் ஏற இறங்கப் பார்த்தான். நாய்க்கர் உயரமான கனத்த ஆள். கம்பீரமான உருவம். தனக்கென்று ஒரு தனி மாதிரியாக அவர் தலைப்பாகை கட்டுவார். நான் தமிழ் நாட்டில் வக்கீல்களும், வாத்தியார்களும் கட்டுவதைப்போன்ற மைசூர்த் தலைப்பாகை கட்டியிருந்தேன். அந்தத் தலைவன் எங்கள் தலைப்பாக்களையே வெகுநேரம் உற்றுப்பார்த்து விட்டுக், கடைசியாக அதிகாரத் தொனியோடு என்னமோ கேட்டான். அது புரியவில்லை யென்று கையால் சாடை காட்டி நாய்க்கர் சிரித்தார். இதுவரையிலும் கடுகடுத்த முகத்தோடு பார்த்துக்கொண்டிருந்த அந்தத் தலைவனும், நாயக்கர் சிரித்தவுடன் தானும் சிரித்து விட்டுக், திருப்பித் திருப்பிக் கேள்விகளைக் கேட்டான். எனக்குக் கொஞ்சம் ஹிந்துஸ்தானி புரியும். இரண்டு மாதமாகப் பஞ்சாபியையும், உருதுவையும் கேட்ட பழக்கமும் உண்டு. ஆனால் அவன் பேசினது என்ன பாஷையோ தெரியவில்லை. எங்கள் தலைப்பாக்களை எடுக்கச் சொல்லிச் சைகை காட்டினான். நாங்களிருவரும் தலைப்பாக்களை எடுத்தோம். எங்கள்

தலையைப் பார்த்தான். நாங்கள் இரண்டு பேரும் அப்போது குடுமி வைத்துக்கொண்டிருந்தோம். எங்கள் குடுமியைத் தொட்டுப் பார்த்துச் சிரித்தான். என் முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டு, எங்கள் தலைப்பாக்களின் துணியையும், ஜரிகையையும் வெளிச்சத்தில் பார்வையிட்டான். கடைசியாக நாய்க்கரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டான். அந்தக் கேள்வியில், 'இங்கிலீஷ்காரனா?' என்ற பொருள் தரக்கூடிய பஞ்சாபி வார்த்தைபோல இருந்தது. உடனே நாய்க்கர் கொச்சையான இந்துஸ்தானியும் தமிழும் கலந்த பாஷையில், 'இல்லை, இல்லை. நாங்கள் இங்கிலீஷ்காரரைச் சேர்ந்தவர்கள் அல்ல' என்ற மாதிரி சொன்னார். நான் சும்மா இருக்காமல் இங்கிலீஷில் இரண்டொரு வார்த்தைகளை ஆரம்பித்தேன். உடனே நாய்க்கர், 'ஆங்கிலத்தில் ஒரு சொல்கூடப் பேசவேண்டாம்' என்று தமிழில் சொன்னார். நான் புரிந்துகொண்டேன். பின்னும் நாய்க்கர், 'ஹம் அங்ரீஸ்நை. பகுத்தூர். தமிழ் தேஸ் ஹை. ஹம் உதர். ஹங்கிரீஸ் ஹாரம். ஹம் நை' என்ற மாதிரி அடுக்கினார். அதைக் கேட்டதும் ஏதோ புரிந்துகொண்டவன் போல் புன்சிரிப்புச் செய்துவிட்டு, அங்கிருந்தவர்களுள் ஒருவனைக் கூப்பிட்டு ஏதோ உத்தரவு செய்தான். உத்தரவிடப்பட்ட ஆள் வீட்டைவிட்டு வெளியில் போனான். நாங்கள் நின்றுகொண்டே இருந்தோம். தலைவன் எங்கள் தலைப்பாக்களைத் திருப்பித் தந்துவிட்டு அங்கிருந்த மற்றவர்களோடு பேசிக் கொண்டிருந்தான்.

வெளியே போனவன் வேறொரு மனிதனைக் கூட்டிக்கொண்டு வந்தான். அந்தப் புது மனிதனிடம் தலைவன் ஏதோ சொன்னான். அந்தப் புது மனிதன் எங்களோடு இங்கிலீஷில் பேச ஆரம்பித்தான், அவன் நன்றாக இங்கிலீஷ் பேசினான். நாயக்கர் என்னை ஒன்றும் பேசக்கூடாதென்று கண்டிப்பான உத்தரவு தமிழில் சொல்லிவிட்டு, எங்களுக்கு இங்கிலீஷ் தெரியாது; அந்தப் பாஷையும் பிடிக்காது, என்று மிகவும் கொச்சையான இங்கிலீஷால் தத்தித் தத்திச் சொன்னார். நாய்க்கருடைய பேச்சின் கருத்து என்னவென்றால், 'எங்களுக்கு இங்கிலீஷ் பாஷை யென்றால் கொஞ்சம் கூடப் பிடிக்காது. இங்கிலீஷ்காரர்கள் மிகவும் பொல்லாதவர்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் விரோதம்' என்பது. இதை அப்படியே மொழி பெயர்த்து அந்த இங்கிலீஷ் தெரிந்த ஆள் தலைவனுக்குச் சொன்னான். தலைவனுடைய முகம் மலர்ந்தது.

என்னுடைய நடுக்கம் குறைந்தது. 'பின் எதற்காக இங்கிலீஷ் காரருடன் இங்கே வந்தீர்கள்?' என்று தலைவனுடைய உத்தரவின் மேல் அந்த இங்கிலீஷ் தெரிந்தவன் கேட்டான். மறுபடியும் நாய்க்கர் தட்டுக் கெட்டுத் தடுமாறிய தமிழும் கலந்த இங்கிலீஷில், 'இங்கே யாரோ எல்லைப்புற ஜாதியார் இருக்கிறார்களாம். அவர்களுக்குச் சொந்தமான இடத்தில் இங்கிலீஷ்காரன் அணைபோட்டு விட்டானும். அவர்கள் அதற்காகச் சண்டைபோட்டு அடிக்கிறார்களாம். முடியுமானால் அவர்களைப் பார்த்து அவர்களைச் சிநேகம் செய்துகொண்டால், நாங்களும் எங்கள் நாட்டில் இங்கிலீஷ்காரனோடு சண்டை ஆரம்பித்து, இரண்டு பக்கத்திலும் ஏககாலத்தில் சண்டை செய்து, அவனைத் தொலைத்து விடலாம். அந்த எல்லைப்புற ஜாதியாரை ரகசியமாகச் சந்திக்க முடியுமா என்று நாலைந்து நாளாக இந்தப் பக்கங்களில் சுற்றிக்கொண்டு இருக்கிறேன். அந்த எல்லைப் புறத்தார் யார் என்று தெரியவில்லை'. என்ற கருத்தை அந்த இங்கிலீஷ் படித்தவனுக்குப் புரியும்படி சொல்லிவிட்டார். அவன் தலைவனுக்கு மொழி பெயர்த்தான். தலைவனுக்குப் பூரிப்புப் பொங்கி விட்டது. விழுந்து விழுந்து சிரித்தான். சிரித்துவிட்டுத் தலைவன் சொல்ல மற்றவன் மொழி பெயர்த்து, 'உங்கள் தலைப்பாக்களைக் கண்டு, சந்தேகித்துத்தான் உங்களைச் சுடாமல் ஆகாசத்தில் சுட்டேன். நீங்கள் நின்று சலாம் செய்தவுடன் நீங்கள் பகையாளிகளைச் சேர்ந்தவர்களல்ல என்று அனுமானித்தேன். பிறகு இங்கே வந்து உங்கள் தலைமயிரைப் பார்த்ததும் நீங்கள் இங்கிலீஷ் ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களல்ல வென்று தெரிந்து கொண்டேன். சந்தோஷம். நீங்கள் பார்க்க விரும்புகின்ற எல்லைப்புறத்தார் நாங்கள் தான். உங்களுக்கு வேண்டிய ஒத்தாசை நான் செய்கிறேன். நாம் இருவரும் சேர்ந்து இங்கிலீஷ்காரனைத் தொலைப்போம்', என்ற கருத்தைச் சொல்லி, சிரித்து, நாய்க்கருடைய கையைப் பிடித்துக் குலுக்கி, உட்காரச் சொன்னான்.

மற்ற விஷயங்களைச் சாப்பாட்டுக்குப்பின் பேசிக்கொள்ளலாம் என்று, அங்கே நின்றவர்களிடம் பற்பல உத்தரவுகளை வீசினான். மறுபடியும் வருவதாக வெளியே போய்விட்டான். அவனோடு பல பேர் போய் விட்டார்கள். இரண்டு மூன்று பேர் மட்டும் எங்களுக்குப் பாரா செய்யவோ, பணிவிடை செய்யவோ இருந்தார்கள். நான் சோபாவில் சாய்ந்தபடியே கண்ணை மூடிக்

கொண்டு, நாய்க்கருடைய அதி அற்புதமான கற்பனு சக்தியை எண்ணியெண்ணி ஆனந்தப்பட்டுக் களிப்பில் மயங்கிக் கிடந்தேன். அடிக்கடி சிரிப்பு வரப்பார்த்தது. ஆனுல் அடக்கிக் கொண்டேன்.

மணிபத்தரை யிருக்கும். எங்களுக்கு ஆகாரம் கொண்டு வரப்பட்டது. ஆகாரத்தோடு தலைவனும் இன்னும் ஐந்தாறு புது மனிதர்களும் வந்தார்கள். அவர்களுடைய விலை உயர்ந்த உடையி லிருந்து, அவர்கள் அந்த ஜாதியாருக்குள் பெரிய மனிதர்களாக இருக்கவேண்டுமென்று தெரிந்தது. அவர்களுடன் கைகுலுக்கி னேம். அந்த இங்கிலீஷ் படித்தவனும் வந்தான். மகம்மதிய வழக்கப்படி நடுவில் உணவுப் பொருள்கள் வைக்கப்பட்டு, நாங்கள் சுற்றிலும் உட்கார்ந்து அவரவர்களுக்கு இஷ்டமானதை அவரவர் களே பரிமாறிக்கொண்டு சாப்பிட்டோம். ரொட்டியும், வெண் ணெயும், பாலும் பழங்களும், மச்சமும், மாமிசமும் மிகவும் உயர்ந்தரகங்களா யிருந்தன. பிராந்தி முதலான போதை வஸ் துக்கள் மட்டும் இல்லை. அந்த மாதிரியான உணவுகளை அதற்கு முன்னுலும் பார்த்ததில்லை; பின்னுலும் பார்த்ததில்லை; மாமிசம் மாட்டுக்கறியாக இருக்குமோ என்று அருவருத்து நான் அதை மட்டும் விட்டுவிட்டு மற்றவைகளை உண்டேன்.

சாப்பாடு முடிந்தது. உணவுகளை அகற்றிவிட்டு அதே இடத் தில் ஒரு ஹுக்காச் செம்பு வேறெங்கும் பார்த்திராத அவ்வளவு பெரியதாகவும் பன்னிரண்டு புகை உறிஞ்சும் குழாய்கள் உள்ள தாகவும் இருந்தது. ஆளுக்கு ஒரு குழாயைப் பிடித்துக்கொண்டு புகைவிட்டுக் கொண்டே பேசிக்கொண்டு இருந்தோம்.

மணி பன்னிரண்டுக்குப் பக்கமாயிற்று. விடிந்ததும் பேசிக் கொள்ளலாமென்று கூட்டம் கலைந்தது. எங்களுக்கு உயர்ந்த வில் கட்டில்களில் வெல்வெட் மெத்தை போட்டுக் கொசு வலை கட்டிய படுக்கைகள் தயாரிக்கப்பட்டன.

விடிந்தது. மாணிக்க நாய்க்கர் எனக்கு முன்னுல் எழுந்து பல்துலக்கிக் கொண்டிருந்தார். நான் பக்கத்தில் போய் நின்றேன். நாய்க்கர் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, 'நீங்கள் மிகவும் ஜாக்ரதையாக இருக்கவேணும். நான் அவர்களுடன் எதைச் சொன்னுலும், எப்படிப் பேசினுலும், சிரித்துக் கிரித்துக் கெடுத்துவிடக் கூடாது. நீங்கள் வாயே திறக்கப்படாது. அவர் களுக்குச் சந்தேகம் வந்துவிட்டால் நாம் தப்ப முடியாது'

என்றார். நான் முன்னமேயே அப்படி முடிவு கட்டி யிருப்பதைத் தெரிவித்தேன். எங்கள் இரண்டு பேருக்கு மட்டும் காலை ஆகாரம் வந்தது. நாங்கள் சாப்பிட்டு முடிந்தவுடன் தலைவனும், அந்த இங்கிலீஷ் தெரிந்தவனும் இன்னும் இருபது பேரும் வந்தார்கள். வெகு சந்தோஷமாகப் பேச்சு வார்த்தைகள் மொழி பெயர்ப் போடு நடந்தன.

எல்லைப்புறத்தில் சுமார் நாலு லட்சம் பேர் ஆயுதபாணிகளாக இருப்பதாகவும், இன்னும் ஒரு மாதத்தில் இங்கிலீஷ்காரனோடு போர் தொடுக்கப் போவதாகவும் சொல்லி, எங்களது சேனை எவ்வளவு பேர்கொண்டது என்று தலைவன் கேட்டான். நாய்க்கர் தன்னுடைய சேனை பத்து லட்சம் கொண்டது என்றார். என்னை யறியாமல் எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. உடனே அந்தச் சிரிப்பை இருமலாக மாற்றிக் கொண்டேன். நாயக்கர் என்னைத் திரும்பிப்பார்த்தார். நான் திகிலடைந்தேன்.

பிறகு போர் நடத்தப் போகும் 'பிளான்' களுடைய பேச்சு வந்தது. நாய்க்கர் கோணல் மாணலாக ஒரு இந்தியாப் படம் வரைந்து, வடமேற்கில்எல்லைப் புறத்தைக் காட்டி, தெற்கே விந்திய பர்வதம் வரைக்கும் தனக்குச் செல்வாக்குள்ள நாடென்று கோடி ழுத்துக்காட்டி, என்னென்னமோ பொய்யும் புளுகுமாக யுத்தத் திற்கு அணிவகுத்துக் காட்டினார். அங்கிருந்தவர்களில் ஒருவ னாவது பூகோளம் படித்தவனல்ல என்று கண்டு கொண்டேன். அந்த இங்கிலீஷ் தெரிந்தவனும்கூட, நம்மைப்போல் பள்ளிக் கூடத்தில் பூகோளம் படித்து, பிரிட்டிஷ் ராஜ்யத்தின் எல்லைகளை மனப்பாடம் பண்ணியிருக்க முடியாது. நாய்க்கர் எதைச் சொன் னாலும் ஏனென்று கேட்பாரில்லை.

திட்டங்களை யெல்லாம் வகுத்தபின், எங்களுக்குள் கடிதப் போக்கு வரவுக்கு நாய்க்கர் சென்னையில் ஒரு பொய்யான விலாசம் கொடுத்தார். இங்கிலீஷ் தெரிந்தவன் எழுதிக் கொண்டான். அவனே 'நௌஷேரா' என்ற ஊரில் ஒரு விலாசத்தை எழுதி நாயக்கருக்குக் கொடுத்தான். இந்த ரகசியங்களை வெளியில் சொல்லி விடக்கூடாதென்று சத்தியம் வாங்கிக் கொண்டார்கள். மத்தியானம் எங்களுக்கொரு விருந்து ஏற்பாடு செய்திருப்பதாயும், மாலையில் நேற்று சந்தித்த நேரத்தில் எங்களை ரோட்டுக்குக் கொண்டு போய் விடுவதாகவும் சொன்னார்கள்.

சுமார் ஐம்பது பேருடன் விருந்துண்டோம். நாலுமணிக்குப் புஷ்பங்களும், பழக்கூடைகளும் வந்தன. பழங்களை சைக்கிளின் 'சைட்காரில்' கொண்டமட்டும் கொட்டினார்கள். ராஜோபசாரந் தான். புறப்படுமுன் நாய்க்கர் மோட்டார் பைசைக்கிளை ஓட்டிப் பார்த்தார். அது சரியாக இருந்தது. நாலரை மணிக்குப் புறப் பட்டோம். ஐந்தரை மணிக்குள் ரஸ்தாவுக்குப் பின்னாலிருந்த புதருக்கு வந்துவிட்டோம். ஆறு மணி வரையிலும் காத்திருந் தோம். அந்த இடங்களில் எந்நேரமும் காவல் செய்து வருகிற எல்லைப்புற ஜாதியைச் சேர்ந்த துப்பாக்கி வீரர்கள் குன்றின் மேலிருந்து கொண்டு 'ரோட்டை' எட்டி யெட்டிப் பதுங்கிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கே அரைமணி நேரத்துக் கொருதரம் இங்கிலீஷ் சோல் ஜர்கள் பாரா வருகிற வழக்கமாம். அந்த அரைமணி நேரத்துக் குள்தான் இவர்கள் ரஸ்தாவுக்குள் இறங்குகிற வழக்கமாம். அதனால் ஒரு பாராக் கூட்டம் வந்துபோன உடன் எங்களை ரஸ்தா வுக்கு அனுப்பத்தான் மேலே யிருந்த வீரர்கள் பார்த்துக் கொண்டி ருந்தது. ஆறுமணி பத்து நிமிஷம்; மேலே இருந்தவர்கள் கொடி காட்டி சைகை செய்தார்கள். உடனே தலைவன் எங்களைக் கை குலுக்கி அந்தப் புதரைக் காட்டினான். புதரில் நுழைந்தோம். ரஸ்தாவுக்கு வந்தோம். சற்று நேரத்தில் எங்களுக்குப் பின்னால் மோட்டார் பைசைக்கிளையும் புதருக்குள் இருந்தபடியே வெளியில் தள்ளிவிட்டு, ஆட்கள் மறைந்துவிட்டார்கள். ரோட்டில் யாரு மில்லை. ஒரு மைல் வந்தபிறகுதான் நாய்க்கர், 'தப்பிப்பிழைத் தோம்' என்று வாய்திறந்தார்.

வழியில் பல இடங்களில் ராணுவ டாணாக்கள். அங்கங்கே எங்களை நிறுத்தி எங்கள் அனுமதிச் சீட்டைப் பரிசோதித்தார்கள். கடைசி தாணாக்கரன் எங்களை வெகுநேரம் சோதித்து, 'நேற்றோடு அனுமதி முடிந்து விட்டது. இன்றைக்கு அனுமதியில்லையே,' என்றான். நாய்க்கர் ராணுவத் தலைவரின் அனுமதியின் பேரில் ஒரு நாள் அதிகமாகத் தங்கினதாகவும், அவர் விருந்து நடத்திப் பழங் களையும், புஷ்பங்களையும் கொடுத்தனுப்பியதாகவும் சொல்லி, ஐந்தாறு ஆரஞ்சுகளையும் சில ஆப்பிள்களையும் ஒரு குலை கறுப்புத் திராட்சையையும் எடுத்து அந்த சோல்ஜருக்குக் கொடுத்துச் சிரித் தார். அவன் அதை வாங்கிக்கொண்டு வந்தனம் சொல்லி விட்டு விட்டான்.

# 15. சோழர்

புரபசர், க. அ. நீலகண்ட சாஸ்திரி

சோழநாட்டின் எல்லைகள் ஆவன, மேற்கில் குழித்தலைக்கடுத்த கோட்டைக்கரையும், கிழக்கில் சமுத்திரமும், மற்ற இரண்டு திசைகளிலும் வெள்ளாறு என்ற ஒரே பெயர் கொண்ட இரண்டு ஆறுகளுமாம். வடபால் எல்லையாகக் கூறப்பட்டுள்ள வெள்ளாறு பரங்கிப்பேட்டையில் சமுத்திரத்தில் கலப்பது. மற்றையது புதுக்கோட்டை வழியாய்ச் செல்வது; பாண்டி நாட்டின் வட எல்லையும் இதுவே. ஆகவே, சோழநாடு என்னும் பெயர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கள் முழுமையையும், புதுக்கோட்டையிலும் தென் ஆர்க்காட்டிலும் சில பகுதிகளையும் சேர்த்துக் குறிக்கும்.

இந்நாட்டில் ஆதிகாலந் தொட்டு அரசுபுரிந்து வந்த மன்னர்கள் சோழ வமிசத்தைச் சார்ந்தவர்கள். நாட்டின் பெயர் முன்னதா, அல்லது நாட்டை ஆண்ட மன்னரின் குடிப் பெயர் முன்னதா என்ற ஐயத்தைத் தீர்க்க யாதொரு வழியுமில்லை.

சோழ மன்னர்கள் சூரிய வமிசத்தில் உதித்தவர்கள். அவர்களுடைய கொடி புலிக்கொடி. அவர்களுடைய ஆணைகளில் பொறிக்கப்பட்ட முத்திரையும் புலியே. முதன் முதலாக அவர்களுடைய தலைநகரமாக இருந்தது திருச்சிராப்பள்ளியின் அருகேயுள்ள உறையூர். இவ்வூரை உறந்தை யென்றும், கோழி யென்றும், சொல்வதுண்டு. கோழி ஒன்று யானையுடன் போர் புரிந்து வெற்றி பெற்ற இடம் இது என்றும், ஆதலால் இவ்வூருக்குக் கோழி என்ற பெயர் இடப்பட்டதென்றும், இக்காரணம் பற்றியே சோழர்கள் இதைத் தலைநகராகக் கொண்டனரென்றும் ஒரு வரலாறு கூறுகிறது! வேறு சில தலைநகரங்களைக் குறித்தும் இதே மாதிரியான வேறு கதைகள் வழங்கி வருகின்றன. இக்கதைகளை யெல்லாம் ஐதீகங்களாக நினைக்கவேண்டுமே தவிர உண்மைச் சரித்திர நிகழ்ச்சிகளாகக் கொள்ளுதல் பொருந்தாது.

உறையூரிலிருந்து ஆண்டுவந்த மன்னர்களின் பெயர்களும் செயல்களும் சங்க நூல்கள் எனப்படும் மிகப் பழைய தமிழிலக்கிய நூல்களில் காணப்படுகின்றன. ஆனால் அம்மன்னரின் வரிசைக்

கிரமமாவது, அவர்களுள் ஒருவரோ டொருவருக்கு ஏற்பட்டிருந்த உறவுமுறையாவது சரிவர அவற்றில் கொடுக்கப்படவில்லை யாதலால், அக்காலத்துச் சரிதத்தைக் கோவையாக எழுதக்கூடவில்லை.

சங்க காலத்துச் சோழ மன்னருக்குள் மிகப் பிரசித்திபெற்றவன் கரிகால் வளவன். சிறு பிராயத்தில் இவனுடைய கால் நெருப்புற்றுக் கருகியதால், இவன் இப்பெயர் பெற்றான் என்பர். குழந்தைப் பருவத்தில் இவன் பகைவரால் சிறைப்படுத்தப்பட்டிருந்தான். வயது வந்ததும் தன் தோள் வலியாலும் வாள்வலியாலும் சிறையினின்றும் வெளிப்பட்டு, அரசுரிமை பூண்டான். வெண்ணி என்னும் ஊரில் நடந்த போரிலும் இவனுடைய வீரம் வெளியாயிற்று. அந்தப் போரில் இவன் 'இரு பெருவேந்த'ராகிய பாண்டியனும் சேரனும் 'ஒரு களத்தவிய'ப் பொருதான். மற்றுமுள்ள சிறு பகைவர்களையும் வென்று சோழ நாட்டை மேம்படுத்தினான். இவன் வீரத்திற்கேற்ற உதாரகுணம் வாய்ந்தவன்; தெய்வங்களை வழிபட்டும், யாகங்கள் பல செய்தும், 'நான்மறையோர் புகழ் பரப்பியும்' தர்மராஜ்யத்தை ஸ்தாபித்தவன்; கற்றோரிடத்தும் புலவரிடத்தும் மிக்க அன்பு பூண்டவன். இவன் அவர்களை விருந்தினராக வரவேற்று, அவர்களுக்கு வேண்டிய பரிசுகளை உவந்து கொடுத்து, அவர்களோடு கூடவே சிறிது தூரம் சென்று வழியனுப்பும் சிறப்புப் பொருநராற்றுப்படை யென்னும் பாட்டில் அழகாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. பத்துப் பாட்டுள் மற்றொன்றாகிய பட்டினப் பாலையில் இவனுடைய காலத்திலே காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்துவந்த வியாபாரத்தின் மிகுதியைக் கீழ்வரும் அடிகள் விளக்குகின்றன.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு.

பட்டினப்பாலையைப் பாடியதற்காகக் கடியலூர் உருத்திரங் கண்ண

ஞர் என்னும் புலவர் கரிகாலன்பால் பெற்ற பரிசு ‘பத்தொடாறு நூறுயிரம் பொன்’ என்பர் கலிங்கத்துப்பரணியின் ஆசிரியரான ஜயங்கொண்டார். கரிகாலனைப் பற்றி இம்மாதிரியான கதைகள் பல பின்னுட்களில் உண்டாயின.

இனி, கியாதி பெற்ற உறையூர்ச் சோழ வரசர்களுள் சோழன் செங்கணுன் ஒருவன். இவன் கழுமலப் போரில் கணைக்காலிரும் பொறை என்ற சேரனைச் சிறைப்படுத்தினுன். சேரனுடைய நண்பராகிய பொய்கையார் என்னும் புலவர் களவழிநாற்பது என்னும் நூலில் செங்கணுனது வீரத்தைப் புகழ்ந்து பாடி, சேரனைச் சிறைமீட்டதாகச் சொல்லப்படுகிறது. முற்பிறப்பில் சிலந்தியா யிருந்து சிவபெருமானை வழிபட்டானென்று சைவப் புராணங்களாலும், சோழ அரசனுகப் பிறந்து எண்தோளீசற்கு எழில்மாடங்கள் பல சமைத்தானென்று திருமங்கை ஆழ்வாராலும் செங்கணுன் போற்றப் படுகின்றுன்.

உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழர்கள் ஆண்டகாலம் சுமார் கி. பி. முதல் மூன்று அல்லது நான்கு நூற்றுண்டுகள் என்று கொள்ளலாம். பின்னர் வெகுகாலம் வரை அவர்கள் வலி குன்றி மறைந்து கிடந்தார்கள்.

மீண்டும் இவர்கள் தங்களுடைய அதிகாரத்தைத் தமிழ்நாடு முழுவதும் பரப்பத் தொடங்கிய காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றுண் டின் நடுப்பாகம். அப்போது விஜயாலய சோழன் தஞ்சாவூரைக் கைப்பற்றி அதைத் தன் தலைநகராகக் கொண்டான். இவனது மகன் ஆதித்தனும், ஆதித்தனது மகன் பராந்தகனும் பல்லவரோடும் பாண்டியரோடும், சேரரோடும் போர்புரிந்து வெற்றியடைந்து, சோழ சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். இலங்கைத் தீவையும் படையெடுத்துத் தங்களுக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டார்கள். இவர்கள் காலத்தில் கப்பற்படையும் கடல் வியாபாரமும் அதிகரிக் கத் தொடங்கின. ஆனுல், பராந்தகனுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் சோழ ஆதிக்கத்தின் முற்போக்குக்குப் பெருந்தடை யொன்று ஏற்பட்டது. பராந்தகன்பால் நட்புப்பூண்டு, அவனேடு கூட நின்று பாணர் வைதும்பர் முதலிய பகையரசரை முறியடித்து, அவர்களைத் தம் தம் நாடு கைவிட்டு ஓடும்படி வெருட்டி, பிறகு அந் நாடுகளை—வட ஆர்க்காடு, சித்தூர் முதலிய பிரதேசங்களை—பராந்தகன் சார்பாக ஆண்டுவந்த கங்க அரசனுகிய அத்திமல்லன்

காலஞ்சென்றான். தோற்று ஓடிப்போன அரசர் துங்கபத்திரை நதிக்கு அக்கரையில் பிரபலமாக ஆண்டுவந்த ராஷ்டிரகூட அரசனாகிய கன்னரதேவன்பால் அடைக்கலம் புகுந்தனர். தங்கள் நாடுகளை மீட்டுக் கொடுக்கவேண்டுமென்று அவனை வேண்டினர். அவ் வேண்டுகோளுக்கு இணங்கி அவனும், அவனுடைய சிற்றரசனாகிய பூதுகன் என்னும் கங்கனும் சோழநாட்டின்மீது படையெடுத்தனர். அரக்கோணத்திற்குத் தென்கிழக்கில் ஆறுமைல் தூரத்திலுள்ள தக்கோலம் என்னும் ஊரில் பெரும் போர் நிகழ்ந்தது. அதில் சோழ சைனியம் தோல்வியுற்றது. பராந்தகனுடைய மூத்த மகனான ராஜாதித்தன் யானையின்மீது கட்டிய அம்பாரியில் வீற்றிருந்து போர் நிகழ்த்தினான். அந்த அம்பாரியிலேயே பூதகன் அவனைக் குத்தி வீழ்த்தினான். இந்தப் போர் நிகழ்ந்த காலம் கி. பி. 949.

இந்த வெற்றிக்குப் பிறகு சில வருஷ காலம் கன்னரதேவன் தென்னாட்டிலேயே தங்கியிருந்து, பராந்தகனுக்கு விரோதமாகப் போர்களையும் முற்றுகைகளையும் நடத்தி, அவனுடைய ராஜ்யத்தைச் சீர்குலைத்தான். இவ்வாறு செய்ததற்கு அறிகுறியாகத் தன்னுடைய சாசனங்களில் ‘கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்’ என்று தன்னைப் புகழ்ந்து கொள்ளுகிறான். சோழ அரசனுக்குத் துன்பங்கள் அதிகரிக்கவே, அதற்குச் சிறிதுகாலம் முன் தங்கள் சுதந்திரத்தை இழந்து, சோழ ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட பாண்டியர் முதலிய சிற்றரசர்கள் அவனை எதிர்த்துத் தங்களுடைய சுதந்திரத்தை மீட்டுக்கொண்டனர்.

இத்தகைய ஈனதசையினின்று சோழர்களின் ஆதிக்கத்தை மறுபடியும் உயரச்செய்து, தமிழ்நாடு முழுவதும் அதைப் பரவச் செய்தவன் முதலாம் இராஜராஜன். இவன் மேற்கூறிய முதல் பராந்தகனுடைய பேரனான இரண்டாம் பராந்தகனுடைய இரண்டாவது மகன். இவனுடைய ஆட்சிக் காலம் கி. பி. 985-1014. விஜயாலயனுடைய வம்சத்தில் பிறந்து ஆண்ட அரசர்கள் எல்லோருள்ளும் வீரத்திலும், நற்குணங்களிலும், ஆட்சித்திறனிலும், குடிகளுடைய நன்மதிப்பிலும் சிறந்து மேலாக விளங்கினவன் இவனே. சோழ அரசர்கள் யாவரினும் இவனே மேம்பட்டவன் என்று சொன்னாலும் மிகையாகாது.

இவன் புரிந்த போர்களின் பயனுகச் சோழருடைய ஆட்சி, மறுபடியும் பாண்டிநாடு, மலைநாடு உட்பட்ட கேரளநாடு கங்கநாடு முதலிய தேசங்களில் நிலைநாட்டப்பட்டது. இலங்கைத் தீவும், மாலதீவங்கள் என்று வழங்கும் 'பல் பழந்தீவு பதினுயிரமும்' கூட இவனுடைய கடற்படையின் வெற்றிகளால் சோழ சாம்ராஜ்யத்தில் சேர்க்கப் பெற்றன. மஹாராஷ்டிர தேசத்தில் ராஷ்டிரகூட அரசரை வென்று, தங்களுடைய அதிகாரத்தை மீட்டுக்கொண்ட கல்யாணிச் சளுக்கியருடனும் இவன் போர்புரிந்தான். தெலுங்கு தேசமான வேங்கி நாட்டில் ஏற்பட்டிருந்த அராசகத்தை நீக்கித் தன்பால் சரண்புகுந்த சக்திவர்மனுக்கு அவனுடைய அரசுரிமையை மீட்டுக்கொடுத்தான். இதுமுதல் வேங்கி நாட்டுச் சளுக்கியருக்கும் தமிழ்நாட்டுச் சோழர்களுக்கும் நெருங்கிய நட்பு நிலை நின்றோங்கி வளர்ந்தது. இவ்வரச குலங்கள் இரண்டிற்கும் விவாக மூலமான சம்பந்தங்கள் ஏற்பட்டன. கடைசியாக கி. பி. 1070-ல் சோழ அரசர்களுக்கு ஆண் சந்ததிகள் இல்லாமற் போகவே, பெண்வழியில் வேங்கி சளுக்கிய குலத்தில் உதித்த முதற் குலோத்துங்கன் சோழ நாட்டுக்கும் அதிபதியானன்.

இராஜராஜன் சிறியவையும் பெரியவையுமாகப் பல கற்கோயில்களைக் கட்டினன். இவை யாவற்றுள்ளும் அளவிலும் அழகிலும் இணையில்லாதது தஞ்சையிலுள்ள இராஜராஜேச்சுரம் என்னும் கோயில். இந்நாளிலே இது பிருகதீசுவரர் கோயில் என்று வழங்கப் படுகிறது. நாலு பக்கங்களிலும் பல மைல் சுற்றளவுக்குச் சிறு கல் துண்டுகூடக் கிடைப்பது அரிதாகிய தஞ்சாவூரில் மிகப் பெரிய பாறைகளால் 'குன்றமன்னதோர் பெருங்கோயிலை' இராஜராஜன் திருமாணஞ் செய்தான். வெகு தூரத்திலிருந்து இப்பாறைகள் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பெருஞ்செயலானது, சோழ மன்னர்கள் நினைத்தால் கைகூடாத காரியம் யாதொன்றும் இல்லை என்பதை நிரூபிக்கும் பொருட்டு இயற்றப்பட்டதோ என்று எண்ணச் செய்கிறது. இக்கோயிலின் கர்ப்பகிருகம் சுமார் நூறடிச் சதுரமுள்ளது. இதன் சுவர்கள் பத்து அடிக்குமேல் கனமுள்ளவை. விமானத்தின் உயரம் சுமார் இருநூறு அடி. பிற்காலத்திலே கட்டப்பட்ட கோயில்களிலே, சுற்றியுள்ள பிராகாரமதில் சுவர்களின்மீது உயர்ந்த கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறின்றி, இப்பழைய கோயிலில் கர்ப்பக்கிருகத்தின்மேல் உயர்ந்த

விமானத்தைக் கட்டியிருப்பது இதன் தனிச் சிறப்பாகும். சுவர்களிலும், சுற்று மாளிகைத் தூண்களிலும், முன் மண்டபத்தின் அடிப்படையிலும் அழுத்தமாகவும் அழகாகவும் பல சாஸனங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இராஜராஜன் தன்னுடைய ஆட்சியின் இருபத்தொன்பதாவது ஆண்டில், 'நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீ இராஜ ராஜேசுவரமுடையார்க்கு நாம் கொடுத்தனவும் கோயிற் சுவர்களின்மீது எழுதப்படவேண்டும்' என்று இட்ட கட்டளையை நிறைவேற்றும்பொருட்டே இச்சாஸனங்களில் பெரும்பாலான பொறிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இவ்வெழுத்துக்கள் செதுக்கப்பட்டு ஓர் ஆயிரம் ஆண்டுகளான போதிலும், நேற்றுத்தான் செதுக்கியவைபோல இவை காணப்படுகின்றன. இது கல்லின் உறுதியினுலோ, அல்லது சிற்பியின் கைத்திறத்தாலோ !

இராஜராஜன் பெரிய சிவபக்தன்; ஆனுல் பிற மதங்களை வெறுத்தவன் அல்லன். தஞ்சாவூர்க் கோயிலிலுள்ள சிற்பங்களில் சில புத்த சரிதச் சிற்பங்களாக உள்ளன. தவிரவும், நாகப்பட்டினத்தில் பெரிய புத்தப்பள்ளி ஒன்றைக் கட்ட அவன் அனுமதிகொடுத்தது மல்லாமல், அப்பள்ளிக்கு ஆனைமங்கலம் என்ற ஊரைப் பள்ளிச்சந்தமாகவும் கொடுத்தான். இப்பள்ளிக்கு 'இராஜராஜப் பெரும்பள்ளி' என்றும் 'சூடாமணிவர்ம விஹாரம்' என்றும் பெயரிட்டார்கள். சூடாமணிவர்மன் என்பவன் ஸ்ரீ விஜயம் என்ற நாட்டின் அரசன். ஸ்ரீ விஜயம் என்பது இக்காலத்தில் பாலம்பாங் என்று வழங்கப்படுகிற ஊர்; இது சுமத்திராத் தீவிலுள்ளது. ஸ்ரீவிஜயத்தின் அரசர்கள் கடாரம் என்ற ஊரையும் சேர்த்து ஆண்டுவந்தார்கள். இது இக்காலத்தில் கெடா எனப்பட்டதும், மலேயாவின் மேல்கரையில் உள்ளதுமான ஒரு பெரிய பட்டணம். நாகப்பட்டினத்து விஹாரத்தைக் கட்டினவன் சூடாமணிவர்மனுடைய மகன் மாரவிஜயோத்துங்கவர்மன். இவன் தான் கட்டின விஹாரத்துக்குத் தன்னுடைய தகப்பன் பெயரையும், தன்பால் நட்புமிக்க சோழ அரசனுடைய பெயரையும் இட்டான். ஸ்ரீவிஜயமானது அக்காலத்தில் சோழ ஆதிக்கத்துக்குச் சமமான பெரிய கடலாதிக்கத்தைப் பெற்றிருந்த சாம்ராஜ்யம். அதற்கு ஒருபுறம் நம் நாட்டுச் சோழ மன்னரோடும், மற்றொரு புறம் சீனுதேசத்துச் சக்கரவர்த்திகளோடும் நெருங்கின தொடர்பு உண்டு.

அதன் மூலமாகச் சோழ அரசருக்குச் சீனவுடன் பழக்கங்கள் ஏற்பட்டன. மலேயாவிலும், சுமாத்திர, ஜாவாத் தீவுகளிலும் உள்ள துறைமுகங்களில் சீனரும் இந்தியரும் வியாபார முறையில் அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. இந்திய வியாபாரிகளும், சோழ மன்னரின் தூதர்களும் பலமுறை சீனவுக்குப் போய்வந்தன ரென்று சீனதேசத்துச் சரித்திர நூல்கள் கூறுகின்றன.

இராஜராஜனுக்குப் பின் அவன் மகன் இராஜேந்திரன் பட்டம் எய்தினன். இவன் தகப்பனுக் கேற்ற பிள்ளை. சிறுபிராயத்திலேயே இவன் தன் தகப்பனுடைய போர்களிலும் அரசியல் முறைகளிலும் ஊன்றிப் பழகிவந்தான். இவன் வடநாடுகளில் தண்டெடுத்துப் பல மன்னரை வென்று, தோற்றுப்போன மன்னர் தலையின்மீது கங்கை நீரை ஏற்றித், தன் தலைநகருக்குச் சுமந்துவரச் செய்தபடியால் இவனுக்குக் கங்கைகொண்ட சோழன் என்ற பெயர் கிடைத்தது. கங்கைகொண்ட சோழபுரம் என்னும் புதிய தலைநகர் ஒன்றை இவன் நிருமித்து அதன் அருகே சோழகங்கம் என்ற பெயர்பெற்ற ஏரியை வெட்டுவித்தான். வடநாட்டுத் தண்டயாத்திரையின் பயனைக் கொண்டுவரப்பட்ட கங்கைநீரை இந்த ஏரியில் விடுத்தான். ஆகையால் இந்த ஏரியை இவனுடைய நீர் வடிவமான ஜய ஸ்தம்பம் என்கிறார்கள். கங்கைகொண்ட சோழ புரத்துக் கோயிலை மட்டும் இன்றும் காணமுடிகிறது. ஊரும் ஏரியும்மாயமாய் மறைந்துபோயின. கோயிலின் அமைப்பு அநேகமாய்த் தஞ்சைக் கோயிலைப்போலவே இருக்கின்றது; ஆனல் சிற்ப வேலைகளில் அதை விஞ்சியுள்ளது.

இராஜேந்திரன் 'அலைகடல் நடுவுட் பல கலஞ் செலுத்தி' ஸ்ரீவிஜயத்தின் மீது படையெடுத்துச் சென்றான். மாரவிஜயோத்துங்கவர்மன் மகன் சங்கிராம விஜயோத்துங்கனையும் அவனுடைய பிரதான நகரங்களான ஸ்ரீவிஜயம், கடாரம் இவற்றையும் பிடித்துக்கொண்டான். ஆனல், ஸ்ரீவிஜயம் நீண்டகாலம் சோழரால் ஆளப்பட்டதாக எண்ணுவதற்குரிய சின்னம் ஒன்றும் அகப்படவில்லை. சோழ அரசருக்கும் ஸ்ரீவிஜய மன்னருக்கும் ஏற்பட்டிருந்த நட்பு எப்போது, யாது காரணத்தால், பகையாக மாறிற்றென்பதும் புலப்படவில்லை.

இவ்வாறு இராஜராஜனும் அவன் மகனும் ஆண்ட காலம் சோழநாட்டின் மகோன்னத தசையின் காலமாகும். அப்பொழுது

சோழ நாடானது தமிழ்நாடு முழுவதுக்கும் தலைமை பூண்டு விளங்கிற்று. தமிழ்நாடு முழுவதையும் முதன்முதல் ஒரு தனிக் குடைக்கீழிருத்திச் செவ்வனே ஆண்ட மன்னர்கள் இவ்விருவருமே.

இவர்களின் அரசாட்சி முறைகள் மிகவும் பாராட்டத்தக்கன. அரசாங்க அமைப்பு நாட்டின் வளத்தையும், கைத்தொழில்களின் வளர்ச்சியையும், ஜனங்களின் சுகத்தையும் பெருக்கும்படி அமைக்கப்பட்டிருந்தது. நில அளவின் கணக்கும், வரிகளின் விவரமும், அரசனும் அவனுடைய அதிகாரிகளுமாக ஆணை நடத்திவந்த வகையும், சாஸனங்களில் தெளிவாகக் காணப்படுகின்றன. ஊர் ஊராய்க் கிராம காரியங்களைப் பார்த்துவரச் சபைகள் ஏற்பட்டிருந்தன. இச் சபைகள் அரசனுக்குக் கிராமத்திலிருந்து சேர வேண்டிய வருஷ வருவாயைத் தாமே வசூல் செய்து செலுத்தி வந்தன. ஊரின் மற்றக் காரியங்களை நேராகவோ அல்லது வாரியங்கள் என்று சொல்லப்பட்ட உட்கழகங்கள் மூலமாகவோ கவனித்துவந்தன. படிப்பு, வைத்தியம், வயல்களுக்கு நீரைப் பகுத்துக் கொடுத்தல், நடை பாதைகளையும் சாலைகளையும் சரிவரப் பாதுகாத்தல், ஏரிகள் தூர்ந்துபோகாமல் குழியெடுத்தல், இன்னும், இவைபோன்ற காரியங்களெல்லாம் கிராமச் சபைகளையே சார்ந்தன. அரசனால் ஏற்படுத்தப்பெற்ற அதிகாரிகள் அங்கங்கே எல்லாக் காரியங்களும் சரிவர நடக்கின்றனவா என்று மேற்பார்ப்பதிலும், குற்றங் குறைகள் ஏற்பட்டால் அவைகளை விசாரிப்பதிலும், உயர்தர நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட விவகாரங்களைத் தீர்ப்பதிலும், இவைபோன்று ராஜ்யம் முழுவதுக்கும் பொதுவாயுள்ள காரியங்களைக் கவனித்து நடத்துவதிலும் அமர்ந்திருந்தார்கள். பொதுவாகப் பார்க்கும்போது, அரசாட்சியின் திறமையிலும், குடிகளின் சுதந்திரம், இராஜபக்தி, தேசாபிமானம் முதலிய நலன்களிலும், நாட்டின் செழிப்பிலும் சோழர்கள் ஆண்ட காலத்துக்கு ஒப்பான காலம் வேறு யாதொன்றுமே இல்லையெனலாம். இராஜராஜன் காலத்தில் சைவத் திருமுறைகள் வகுக்கப்பட்டன. அதற்கு அடுத்த நூற்றாண்டில் சேக்கிழார் பெரிய புராணமும் கம்பர் இராமாவதாரமும் பாடப்பெற்றன. ஆதலால் தமிழ் இலக்கியம் ஓங்கி வளர்ந்ததும் சோழருடைய ஆட்சிக் காலத்திலேதான்.

# 16. கிராமச் சீரமைப்பு

புரபசர், ஜே. எஸ். பொன்னையா, எம். ஏ.

நமது கிராமங்களின் பொருளாதார நிலையிற் பல குறைகள் இருக்கின்றன. இக்குறைகளைப் போக்குமாறு தேசத்தின் பற்பல பாகங்களில் சிற்சில ஸ்தாபனங்களும் சங்கங்களும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இச்சேவையைக் கிராமச் சீரமைப்பு[1] என்பர். இதுபற்றி இங்கே சிறிது கூறுவோம்.

### சுய முயற்சி

தம் கையே தமக்குதவி எனக், கிராம மக்கள் எண்ணித், தம் முயற்சியினாலேயே தம் குறைகளைப் போக்குவார்களாயின், அதுவே பெருஞ் சிறப்புடையதாகும். வீடுகளையும், தொழுவங் களையும், தண்ணீர் எடுக்கும் நீர் நிலைகளையும், குப்பை கொட்டி வைக்கும் இடங்களையும், ஒவ்வொரு கிராம வாசிகளும் சுத்தமாக வைத்துக்கொண்டால் நோயணுகாமல் தடுக்கலாமன்றோ? காய்ச்சலி னால் மட்டும் நம்தேசத்தில் வருடத்திற்குச் சுமார் சில கோடி மக்கள் நோய்வாய்ப் படுகின்றனரென்றும், அவர்களுள் பல லக்ஷம் பேர் இறக்கின்றனர் என்றும் அறிகிறோம். இந்நோயை முழுவதும் நீக்கல் கூடும் என மருத்துவ ஆராய்ச்சியாளார் கூறுகின்றனர். மேலும், கிராம மக்கள் ஒத்துழைத்தால் சிறு சிறு பாட்டைகள், சாலைகள், பாடசாலைகள், குடி தண்ணீர் எடுக்கத்தக்க கிணறுகள் முதலியன அமைத்துக் கொள்ளலாம். இவ்வாறான பல கருமங்களையும் கிராம வாசிகளே தம் சொந்த முயற்சியாற் செய்து வந்தால் இப்பொழு துள்ள குறைகளிற் பெரும்பாலன எளிதில் நீங்குமன்றோ? இம் முறையில் ஒவ்வொரு வேலைக்கும் தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங் களை அமைத்துக் கொண்டாலும் அரும்பெருங் காரியங்கள் எளிதிற் கைகூடிவரச் செய்யலாம்.*

---

1 Rural reconstruction

* வங்காளத்தில் குளிர்சுரத்தைத் தடுப்பதற்காகச் சுமார் 950 சங்கங்கள் **(Anti-malarial Co-operative Society)** நிறுவப்பட்டுச் சிறந்த சேவை செய்துவருகின்றன என விவசாயக் கமிஷன் அறிக்கையிற் காட்டப்பட்டுள்ளது (பக்கம் 489). பஞ்சாபில் கிராமச் சீரமைப்புச் சங்கங்களால் பாடசாலைகளும், வைத்திய சிகிச்சை வசதிகளும் வேறு பல அரிய தொண்டுகளும் ஆற்றப்பட்டு வருகின்றன. **(Inidan Central Banking Enquiry Committee Report P. 716--719).**

## பிறர் முயற்சி

இனி, கிராம வாசிகளின் முன்னேற்றத்திற்காகப் பரோபகார சிந்தையுடன் பிற மக்கள் செய்துவரும் முயற்சிகள் சிலவற்றைப் பற்றிச் சிறிது காண்போம். ஸர். டேனியல் ஹாமில்டன்[2] என்னும் ஸ்காட்லாந்து தேச வாசி, கல்கத்தாவுக்குச் சமீபத்தில் தமக்குச் சொந்தமான சுமார் 1800 ஏக்கர் பரப்புள்ள தமது பெரும் பண்ணையில், பயிரிடும் ஒவ்வொரு குடியானவனுக்கும் ஆறு ஏக்கர் அளவுள்ளதும் இலாபந் தரத்தக்கதுமான ஒரே தொகுதிப் புலங்களை அமைத்துக் கொடுத்துக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே, குடியானவர்கள் கடன் பெறுதல், குடும்ப வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை வாங்கல், விளைபொருள்களை விற்றல் ஆகிய எல்லாவற்றையும் செய்துவரும்படியாக அப்பண்ணையை நடத்தி வருகிறார். பெரிய ஜமீந்தார்களும், மிட்டாதார்களும் ஹாமில்டன் செய்யுமாறு செய்தால் குடிகள் இன்புற்று வாழ்வாரென்பதில் ஐயமென்ன ?

இந்திய சேவா சங்கம்[3] இராம கிருஷ்ண மிஷன், பூனா சேவா சதன சங்கம்[4] இந்திய கிறிஸ்தவ வாலிபர் சங்கம்[5] ஆகிய இத்தகைய பல பரோபகார சங்கங்களின் ஆதரவில் கிராமச் சீரமைப்பு வேலை பலவிடங்களில் நடைபெற்று வருகிறது. கிறிஸ்தவ வாலிப சங்கத்தார் தென்னிந்தியாவிலுள்ள ஆறு கிராமங்களில் இவ் வேலையை ஆரம்பித்திருக்கின்றனர். திருவாங்கூர் இராஜ்யத்திலுள்ள மார்த்தாண்டம் என்னும் கிராமத்தில் நடத்தப்படும் வேலை பலராலும் மெச்சப்படுகிறது. சுமார் 50 மைல் சுற்றளவிலுள்ள எல்லாக் கிராமங்களிலுள்ளவர்களுக்குள்ளும் கூட்டுறவு முறையைப் பரப்பியும், தேனீக்களை வளர்த்துத் தேன் எடுத்தல், கோழி வளர்த்தல், கைத்தறியில் துணி நெய்தல் முதலிய பல கிராமக் கைத்தொழில்களை வளர்த்தும், நன்முறையிற் கல்வியைப் புகட்டியும் இவ்வாறான பல அரிய சேவைகளை அச்சங்கத்தார் ஆற்றி வருகின்றனர்.

---

2 Hamilton 3 Servants of India Society
4 Poona Seva Sadan Society 5 Y. M. C. A

## அரசாங்கத்தார் முயற்சி

இறுதியாக, கலெக்டர் உத்தியோகஸ்தரான பிரேயன்[6] என்பாரும் அவரது மனைவியும் பஞ்சாபிலுள்ள கூர்ஹான்[7] என்னும் ஜில்லாவில் தொடங்கிய கிராமச் சீரமைப்பு வேலையும் போற்றத்தக்கது. இப்பெரியார் சர்க்கார் இலாகா அதிகாரிகளையும், பொது மக்களுக்குள் தலைவர்களாக விளங்குபவர்களையும் ஒன்றுகூட்டிக் கிராமங்களிலுள்ள எல்லாக் குறைகளையும் ஒருங்கே களையுமாறு அரிய முயற்சிகள் செய்துவந்தனர். இவருடைய இயக்கத்தின் சிறப்பியல்பு கிராமங்களுக்கு உதவி செய்யத் தக்க தொண்டர்களைப் பயிற்றுவிப்பதாம்.*

## திட்டம் வேண்டும்

நாம் மேற்காட்டியன போன்ற முயற்சிகள் போற்றத் தக்கனவாம். ஆயினும், சென்னையில் ஒரு சங்கமும், பஞ்சாபில் இரு சங்கங்களும், பம்பாயில் ஒருவரும், வங்காளத்தில் இருவருமாக மிகச்சில ஸ்தாபனங்களின் மூலமாக மிகச்சிலர் மட்டும் உழைத்து வருவார்களானால் நமது குறைகளை நாம் எப்படி நீக்கக் கூடும்? ஆதலால் கிராமச் சீரமைப்பு முயற்சியில் 'இதுவரை நடந்திருக்கும் வேலையாற் கிடைக்கப்பெற்ற அநுபவங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, நாம் மேலே காட்டியவாறு, கிராமமங்களின் சுய முயற்சியும், பரோபகார நோக்குடைய பிறர் முயற்சியும், அரசாங்கத்தார் முயற்சியும் ஒருங்கு சேர்ந்த ஒரு பெருந்திட்டத்தை வகுத்துக்கொண்டு, தேசமுழுவதிலும் கிராமச் சீரமைப்பு இயக்கத்தை உடனே தொடங்கித் தீவிரமாக முயலவேண்டும். அவ்வாறு முயன்றால், இப்பொழுது பல்கிக் கிடக்கின்ற நம் குறைகளிற் பெரும்பாலன விரைவில் நீங்கும்.

## இவ்வியக்கத்தைத் தொடங்குவது யார்?

தேச முழுவதற்கும் வழங்கவேண்டிய திட்டத்தை வகுப்பது யார்? அத்திட்டத்தை யொட்டிய இயக்கத்தைத்

---

6 Brayne  7 Gurguon

* இந்திய கிராமத்தில் சாக்ரடீஸ்' (Socrates in an Indian Village) என்னும் பெயருடன் இப்பெரியார் வெளியிட்ட நூல் எல்லோராலும் படித்து இன்புறத்தக்கது.

தொடங்குவது யார்? எல்லாச் சேவையும் அரசாங்கத்தார் கடன் எனப், பொறுப்பை அவர்கள்பாற் போட்டுவிட்டுவாளா இருப்பது நமது மக்களிற் பெரும்பாலாருடைய குறையாக இருக்கின்றது. இங்ஙனம் இருப்பது நமக்குக் கேடு விளைவிக்கும் என நாம் நன்குணரவேண்டும். நமது மக்களின் பெருங் குறையாகிய கல்வி யின்மை ஒன்றையே அரசாங்கத்தாரால் நீக்க இயலாதென்றும் அதற்குரிய நிதி முழுவதையும் வரிப்பணத்திலிருந்து கொள்ள முடியாதென்றும் நாம் உணரலா மன்றோ?

## நமது கிராம வாழ்க்கையின் சிறப்பியல்பு

இறுதியாக நாம் எடுத்துக் காட்டவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. நமது தேசத்தில் மக்கட்பெருக்கு மிக்கிருப்பதனாலும், பயிரிடத் தகுதி, வாய்ந்த நிலம் முழுவதும் பயிரிடப்பட்டிருப்பதனாலும், நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கல்விப் பயிற்சி யற்றவர்களாய் இருக்கின்றமையாலும், கைத்தொழில்கள் விரைவில் விருத்தியடையப் பல இடர்ப்பாடுகள் நிரம்பியுள்ளமையாலும், அதிர்ஷ்ட வசத்தினால் இவற்றுள் அநுகூலமான பெரு மாறுதல்கள் விளைந்தாலன்றி, நமது கிராம மக்களின் குறைகள் அனைத்தும் காலப் போக்கிற்றான் நீங்கல் கூடும். அங்ஙனம் நீங்கினும், நம் கிராம மக்கள் மேல் நாட்டு மக்கள்போல மிக்க பொருட்பெருக்கை அடைந்து விடுவரெனத் துணிந்து கூறவும் முடியாது.

ஆயினும், இதுபற்றி நாம் வருந்தவேண்டியதில்லை. பொருளீட்டுவது மட்டும் நம் வாழ்க்கையின் நோக்கம் அன்று. ஈட்டும் பொருள் நல்வழியில் வரல் வேண்டும் என்பதும், அது அறத்துக்கும் இன்பத்துக்கும் பயன்படவேண்டும் என்பதும் நம் முன்னோர் கண்டு தெளிந்த உண்மைகள். இவ்வுண்மைகளை வாழ்க்கையிற் பெறுவதற்கு ஏற்ற இடங்கள் கிராமங்களே. ஆதலால் நமது கிராமச் சீரமைப்புத் திட்டத்தின் முடிந்த நோக்கம் வறுமையை நீக்க வருவாயைப் பெருக்குதல் மாத்திரமன்றி, மக்களது புனித வாழ்க்கையையும் இணைப்பதாக இருத்தல் வேண்டும். இந்நெறியில் முனைந்து நின்று நாம் வெற்றி பெற்றால், நமது தேசத்துக் கிராம வாழ்க்கையானது பிற தேசத்துக் கிராம வாழ்க்கைக்கு ஒரு சிறந்த மாதிரியாக முன் நின்றிலங்கும்.

# 17. பழைய இரஸவாதம்

புரபசர், கே. ஸி. வீரராகவையர், எம்.ஏ., எல்.டி.

இரஸவாதம் என்பது இரஸத்தைப்பற்றிப் பேசுவது என்று பொருள்படும். பண்டைக்காலத்தில் இரஸத்தின் உதவியைக் கொண்டு பல அறிஞர்கள் தங்களது பண ஆசையைத் திருப்தி செய்ய முயன்றார்கள். அதுவே இரஸவாதமாயிற்று. தமிழ் அகராதியில் வாதம் என்ற பதத்துக்கு 'இரும்பு முதலிய லோகங்களைப் பொன்னாக்கும் வித்தை' என்ற பொருள் காணப்படுகிறது. அது பழைய பாகுபாட்டில் அறுபத்து நான்கு கலை ஞானங்களில் ஒன்று ஆகும். அந்த வித்தையில் அநேகருக்குப் பைத்தியம் உண்டு.

சரித்திர பூர்வமாக ஆராயுங்காலத்தில், முதன் முதலில் நாகரிகம் மேம்பட்ட பண்டை நாடுகளில் முதன்மைபெற்ற ஈஜிப்டு, இந்தியா, சீனா, சாலடியா என்ற இடங்களில் கைத்தொழில்கள் பல சிறந்து விளங்கின. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னர்க் கிரேக்கர்கள் முற்பட்டனர். அவர்கள் ஈஜீப்டு தேசத்தின் கைத்தொழில்கள் பலவற்றையும் கற்றுப் பதார்த்தங்களின் தத்துவத்தையும் ஆராய ஆரம்பித்தார்கள்.

கிரேக்கர்களுக்குப் பின், உலகை ஆதிபத்தியம் பெற்ற ரோம ராஜ்ய அறிஞர்களும் யுத்தி புத்தி பூர்வமாய்ப் பல ஆராய்ச்சிகள் செய்தனர். அவர்கள் பொருள்களைக் கையினால் பழகிச் சோதனை செய்வது அகௌரவமான வேலையென்று நினைத்து, ஈஜிப்டு தேச அறிஞர்கள் பின்பற்றிய கைத்தொழில்களைச் செய்வது அடிமைகளின் தொழில் என்று மதித்திருந்தனர். அந்தக் காலத்தில் ஈஜிப்டு தேசத்தில் மகா அலெக்ஸாண்டரால் கி. மு. 331-ல் நீல நதிக்கரையில் ஸ்தாபிக்கப்பட்ட அலேக்ஸாண்டரியா நகர் சிறந்து விளங்கியது. அங்கு 70,000 புத்தகங்கள் நிறைந்த புத்தகசாலையும், மியூஸியங்கள் என்ற பல காட்சிச் சாலைகளும், வைத்திய சாஸ்திரம் படிக்க விரும்புவோருக்கு ஓர் இலக்காக விளங்கின. கல்விச்சாலைகளும் ஓங்கி வளர்ந்தன. கிரேக்க ரோம வாலிபர்கள் அங்குச் சென்று தத்தம் அறிவைப் பெருக்கிக் கொண்டார்கள். ஆகவே அறிஞர்கள் பலர் அலெக்ஸாண்டரிய நகரில் கூடிக் கூடி, ஈஜிப்டு தேசப் பழைய கைத்தொழில் விஷயங்களையும் கிரேக்கர்களுடைய தத்துவமுறை விஷயங்களையும் ஆராய்ந்து கெமிஸ்டரி என இப்பொழுது வழங்கும் நவீன சாஸ்திரத்

துக்கு அஸ்திவாரம் அமைத்தனர். ஆராய்ச்சிகள் கோவில்களில் நடைபெற்றன ; பூசாரிகளும் குருமார்களும் பாண்டித்தியம் பெற்ற னர். அவர்களுக்குப் பொருள்களைக் காய்ச்சி உருக்கலும், கரைத்து ஸ்படிகங்கள் பெறலும், வடிகட்டலும், உலைகள் சூளைகள் கட்டிப் பஸ்மங்கள் பதங்கங்கள் செய்தலும், திரவங்களைக் காய்ச்சி இறக்கு தலும் நன்றாய்த் தெரிந்திருந்தன. இந்த முறைகளை இரகசியமாக வைத்திருந்து சிலருக்கே போதித்து வந்தனர். இரும்பையும் ஈயத் தையும் பொன்னாக்கும் வித்தை பிறந்தது. இதைப் பாமரர்கள் அறியாதிருப்பதற்காகத் தந்திரங்கள் பல கிளம்பின ; அவைகளை எளிதில் அர்த்தம் செய்ய முடியாத மாதிரியில் நூல்கள் பல எழுதப் பட்டன. இரும்புப் பட்டையைத் துத்தம் கரைந்த ஜலத்தில் சிறிது நேரம் வைத்திருந்தால், அது சிவப்பாக நிறம் மாறுகிறது. 'ஆகா ! இரும்பு செம்பாய் விட்டது !' என்றனர். செம்புடன் சிறிது சிந்தூரத்தைச் சேர்த்துக் காய்ச்சினால் வெண்மையான வெள்ளி கிடைத்து விடுகிறது ; இன்னும் செம்புடன் சிறிது நாகத்தைச் சேர்த்துக் காய்ச்சினால் பித்தளையின் மஞ்சள் நிறம் கிடைக்கிறது ; இதையே போன் என மதித்தனர் ! இவையே இரஸவாதம். இப்படியாக, கி. மு. 300-முதல் கி. பி. 400 வரை நடந்தது.

மேலே சொல்லிய காலத்தில் நமது நாட்டிலும் ஸம்ஸ்கிருத தமிழ் மொழிகளில் இன்னோரன்ன கொள்கைகள் ததும்பி யிருந்தன. பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்கள் பொருள்களின் அமைப்புக்கு அடிப்படையாகக் கருதப்பட்டன.

கி. பி. 400 முதல் 1500 வரை இரஸ வாதக் காலம் என்று பாகுபாடு செய்திருக்கின்றனர். அந்தக் காலத்தில் மகமதியர்கள் உலக ஆதிபத்தியம் பெற்றிருந்தனர். கி. பி. 641-ல் ஈஜிப்டு தேசத் தைக் கைக்கொண்டனர். பின்னர் ஸ்பெயின், ஸிரியா, பெர்ஷியா முதலிய தேசங்களில் தங்கள் முதன்மையைக் காட்டினர். 9, 10 11-ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாக் கண்டத்தில் அந்தகாரம் சூழ்ந் திருந்தது; நாகரிகமற்றிருந்தது; மகமதியர்கள் அந்த அந்த இடங்க ளில் சர்வகலா சங்கங்களையும் கல்லூரிகளையும் நிருமித்துக் கல்வி அறிவுகளைப் பரவச் செய்தனர். பழைய கிரேக்க ஸம்ஸ்கிருத பாஷை களிலுள்ள எண்ணிறந்த நூல்களை அரபிக் பாஷையில் மொழி பெயர்த்தனர். கி. பி. 786—809 லிருந்த ஹரூன் ஹல்ரஸ்சித் என்ற கீர்த்திபெற்ற அரசன் காலத்தில் பல வித்வான்கள் இருந்தார்கள்.

இவர்களும் பிறரும் வைத்திய சாஸ்திரத்தைப் பெரிதும் போற்றிக் கற்று வந்ததில், இரஸவாத வழிகள் பலவற்றையும் அனுசரிக்கலாயினர். இதே மாதிரியாக இந்தியாவிலும் அக் காலத்தில் சரகர், சுஷ்ருதர், சாரங்கதரர், வாக்படர், நாகார்ஜுனர் முதலிய சிரேஷ்டர்கள் தங்கள் தங்கள் அரிய பெரிய நூல்களை இயற்றினர்கள்.

நமது தமிழ் நாட்டிலே சித்தர்கள் என்ற அறிஞர்கள் வாதத்தையும் யோகத்தையும் வைத்தியத்தையும் ஒருங்கே அறிந்து, தங்களது ஆற்றல்களைப் பல நூல்களில் புலப்படுத்திப் பாடியுள்ளார்கள். அவர்கள் காலம் கி. பி. 400 முதல் 1500 வரையில் இருக்கலாம். அவர்களில் முக்கியமானவர்கள், அகத்தியர், தேரையர், கொங்கணர், சட்டைநாதர், போகர், புலிப்பாணி, திருமூலர், மச்சமுனி, சுந்தரானந்தர், கோரக்கர், கருவூரர், அழுகுணி, சித்தர், ரோமரிஷி, டமரானந்தர், நந்திதேவர், வியாக்ரபாதர், இராமதேவர், காலாங்கி நாயனர் என்பவர்கள். அவர்கள் செய்த நூல்களில் சிலவே அச்சில் வந்திருக்கின்றன; இன்னும் அச்சில்வராத பல சித்தர் நூல்கள், சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகாலயத்திலும், தஞ்சை சரபோஜி மகாராஜா புத்தகாலயத்திலும், மடாதிபதிகள் புத்தகாலயங்களிலும் கையெழுத்துப் பிரதிகளாகவே மறைந்து கிடக்கின்றன.

இரஸவாதத்தைப் பெரிதும் அப்பியசித்து வந்தவர்கள் நவநாத சித்தர்கள் என்றும், பதினெண் சித்தர்களென்றும் பலவாருகக் கூறுவர். இவர்கள் தங்கள் நூல்களைச் செய்யுளாகவே இயற்றியுள்ளார்கள்; பலர் பெரிய நூல்களைச் செய்து, பிறகு அவைகளின் சாரத்தைச் சிறு சிறு நூல்களாகத் தாமே சுருக்கியுள்ளார்கள். அவர்கள் நூல்மொழிநடை சாதாரண வழக்குச் சொற்களாகவே அமைவதாகும்; ஆனல் எளிதில் அர்த்த மாகாவண்ணம் ஒரு பொருட் பல மொழிகளை உபயோகித்திருக்கிருர்கள்; நூல்களின் பெயர்கள் பெரும்பாலும் ஆசிரியர் பெயர்களாலும் சிறுபான்மை அவ்வாசிரியரின் ஆசான் பெயர்களாலும் அமைந்துள்ளன; அவைகளில் ஒன்றிலாவது விஷயத்தை விளக்கும் சித்திரங்கள் படங்கள் வரையப் பட்டனவாகத் தெரியவில்லை. சித்தர்கள் ராஜாக்களையாவது மற்றப் பிரபுக்களையாவது அண்டியிருந்ததாகத் தெரிய

வில்லை ; அவர்கள் தங்கள் வித்தையைப் பக்குவம் வந்து நெருங்கிய சிஷ்யர்களுக்கே அறிவித்து வந்தனர்.

அவர்களில் ஒருவர் போகர் என்பார் : கி. பி. 300-ல் சீனுவிலிருந்து இந்தியாவுக்கு வந்து பல நூல்களையும் கற்று; தமக்குத் தெரிந்த வித்தைகளைத் தமிழருக்கும் கற்பித்து, பின்னர் மெக்கா, ஈஜிப்டு முதலிய தேசங்களுக்குச் சென்று, அங்கும் ஜாலவித்தை முதலியவைகளைச் சிலருக்குப் போதித்துப், பிறகு தமது தேசம் சென்று சீன பாஷையில் பல வைத்தியவாத சாஸ்திரங்களை மொழி பெயர்த்தனர் என்ற ஒரு வதந்தி உளது. இஃது ஆராயற்பாலது. ஏனெனின் சமீபத்தில் 'சீனரஸவாதம்' என்ற விஷயத்தைப் பற்றி மேனுட்டு அறிஞர்கள் 'நேச்சர்' என்ற வாரப் பத்திரிகையில் சர்ச்சை செய்து சீனுவில் இரஸவாதம் பௌத்தர்களால் கி. பி. மூன்றும் நூற்றுண்டளவில் பரப்பப்பட்டிருக்கலா மென்று ஊகித்து எழுதியுள்ளார்கள். நமது தமிழ் நாட்டில் கி. மு. 100 முதல் கி. பி. 800 வரை பௌத்தர்கள் மேன்மையுடன் விளங்கினுரென்பது தமிழாராய்ச்சியால் கண்ட விஷயம். வட இந்தியாவிலிருந்து தெற்கில் குடியேறிய பௌத்தர்கள் தம்மறிவையும் தமிழ் நாட்டில் விளங்கிய அறிவையும் கலந்து, தமிழ் நூல்கள் பல இயற்றல் சாத்தியமானதே. பிறகு அவர்கள், சீனு, அரேபியா, பெர்ஷியா முதலிய இடங்களுக்குச் சென்று இரஸவாதப் பிரசாரம் செய்திருத்தலும் கூடும்.

இரஸவாதிகள் எல்லாரும், எல்லா நாடுகளிலும் ஜனங்களின் வியாதிகளை நிதானித்துச் சிகிச்சை செய்வதில் நிபுணத்வம் அடைவதோடு, இரஸவாதக் கலையையும் கற்றுவந்தனர். அவர்களுடைய முக்கிய நோக்கங்கள் மூன்று ; அவையாவன :—இறப்பைத் தவிர்த்தல், என்றும் இளமையுடனிருத்தல், பொருள் நனி குவித்தல் என்பனவே ; இந்நோக்கங்களில் சித்தி பெறுவதற்குப் பல வழிகளைப் பின் பற்றினர். அமிர்தம் கிடைத்தால் சாவை அகற்றி இளமையை அடையலாம் ; ஸ்பர்சவேதி மணியைப் பெற்றால் பல தாழ்ந்த லோகங்களையும் உயரிய லோகங்களாக மாற்றிப் பொன் வெள்ளியை அடையலாம் ; ஆகவே அமிர்தத்தையும் ஸ்பர்சவேதி மணியையும் அடைய அவர்கள் பட்ட பாடுகளுக்குக் கணக்குக் கிடையா. அவர்கள் வலையில் சிக்காத பிரமுகர்களும் ராஜாக்களும் இல்லை. ஜெர்மன் சக்கரவர்த்தியாகிய இரண்டாவது ருடல்பும், பிரஷிய

மன்னர்களாகிய முதல் இரண்டாம் பிரடெரிக்குகளும், பிரான்சு மன்னர்களாகிய மூன்றும் பெர்டினண்டும் முதலாம் லெப் போல்டும், ஆங்கிலநாட்டு ஆறும் ஹென்றியும் நாலாம் எட்வர்ட்டும், எலிஸெபெத் அரசியும், ஸ்வீடன் தேசத்துப் பன்னிரண்டாம் ஜார்ஜூம், டென்மார்க் தேசத்து நாலாம் கிறிஸ்டியனும், தங்கள் தங்கள் சமஸ்தானங்களில் பல பல இரஸவாதிகளைத் தங்கள் கஜானுவில் அபரிமிதமாகப் பணக் குவியல்களைச் சேர்க்கும் எண்ணத்துடன் ஆதரித்து வந்தனர். மெல்ல மெல்ல அவர்களது பாசாங்குகளும் வெளியாயின.

அவர்கள் உண்மையில் தங்கத்தைச் செய்ய முடியாதபோதிலும் பொன்மதிப்புப் பெற்ற பல உபயோகமான பொருள்களைச் சேகரிப்பதில் நிபுணர்களாய்விட்டனர். அவர்களை ஆதரித்த பிரபுக்களுக்கும் அரசர்களுக்கும் பொன்னே குறியாதலின், அப் பொன்னைச் செய்து தரமுடியாது தவித்த ரஸவாதிகள் பலவாறு தண்டிக்கப்பட்டனர்; சிலர் மரண தண்டனையு மடைந்தனர். பிரன்ஸ்விக் மன்னர் 1575-ல் ஓர் இரஸவாதிப் பெண்மணியை எரித்தார்; பவேரியா மன்னர் 1590-ல் பிரகாடினே என்ற இரஸவாதியைத் தூக்கில் போட்டார்; டென்மார்க் அரசர் மூன்றும் பிரடெரிக், பொரி என்ற இரஸவாதியைப் பல ஆண்டுகள் சிறையில்அடைத்தார்; சிறையிலே அவன் 1695-ல் செத்தான். 'இரஸத்தைக் கட்டும் வித்தை எனக்கு ஒரு காலத்தில் தெரிந்தது; இன்று என்னைக் கட்டின வித்தை தெரிந்தது' என்று ஓர் இரஸவாதி தூக்கிலிடப் பட்டபோது சொன்னன். ஜேம்ஸ் பிரைஸ் தன் சரக்கு வெளுத்ததை நினைந்து வருந்தித் தற்கொலை செய்துகொண்டான். இம்மாதிரியாக இரஸவாத வித்தை சூதும் வாதும் நிறைந்தது என்று ருசுவாயிற்று. பேகன் பிரபு, 'இரஸவாத வித்தையைத், தனது திராக்ஷைத் தோட்டத்தில் வெகு தூரம் பூமிக்குக் கீழே தங்கம் புதைத்து வைத்திருக்கிறேன் என்று தனது புதல்வருக்குச் சொல்லிய ஒரு கிழவனுக்கு ஒப்பிடலாம்; பூமியைத் தோண்டிப் பார்த்த புதல்வர்களுக்குத் தங்கம் அகப்படாமற் போனுலும், அவர்கள் மெய் வியர்க்கச் செய்த வேலைக்குத் தகுந்த கூலியாக அபரிமிதமாய்த் திராக்ஷை மாசூல் பெற்று, அவைகளை விற்றதனுல் தங்கம் நிறையக் கிடைத்தது. அதுபோலத் தங்கத்தைத் தேடிய இரஸவாதிகளின் உழைப்பின் மூலமாய் நமக்குப் பல அரியபொருள்களும் விஷயங்களும் கிடைத்திருக்கின்றன' என்றுஎழுதி யுள்ளார்.

# 18. முனிவர் யார்?

நக்கீரர்

*சீரை தைஇய உடுக்கையர் சீரொடு*
*வலம்புரி புரையும் வால்நரை முடியினர்*
*மாசற இமைக்கும் உருவினர் மானின்*
*உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்*
*என்பெழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்*
*பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு*
*செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்*
*கற்ருேர் அறியா அறிவினர் கற்ருேர்க்குத்*
*தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு*
*கடுஞ்சினம் கடந்த காட்சியர் இடும்பை*
*யாவதும் அறியா இயல்பினர் மேவரத்*
*துனியில் காட்சி முனிவர்*

[சீரை - மரவுரி. தைஇய - புனைந்து. உரிவை - தோல், இகல் - பகை. செற்றம் - இம்சை செய்யும் உணர்ச்சி. காட்சி - அறிவு. இடும்பை - துன்பம். யாவதும் - சிறிதேனும். துனி - வெறுப்பு.]

மரவுரியை உடையாக அணிந்தவர், அழகோடு வலம்புரியையொத்த வெண்மையான நரை முடியை உடையோர், மாசு இல்லாமல் விளங்கும் திருமேனியை உடையோர், மான் தோலைப் போர்த்த தசை கெட்ட மார்பில் எலும்புகள் மேலே தோன்றி அசையும் உடம்பை யுடையோர், நல்ல நாட்கள் பலவற்றில் ஒருங்கே உணவை உண்ணுது விட்டவர், பகையும் இம்சையும் நீக்கிய மனத்தினர், கற்றவர் சிறிதும் அறியாத பேரறிவினர், கற்றவர்களுக்கு எல்லையாக நிற்கும் தலைமை யுடையோர், காமமும் மிக்க சினமும் நீத்த அறிவுடையோர், சிறிதளவேனும் இடும்பை என்பதை அறியாத இயல்புடையோர், மனம் பொருந்த வெறுப்பில்லாத ஞானம் பெற்றவர் ஆகிய முனிவர்.

# 19. அதியமானும் ஔவையாரும்

வித்துவான் பெ. கோவிந்த மூப்பனர்

கன்னல் வளரும் வயலெங்கும் ;
கதிர்முத் தொளிரும் அயலெங்கும் ;
தென்னை ஈனும் விரிபாளை ;
தேங்காய் வீழ்த்தும் மடவாளை ;
நன்னீ ரோடும் பன்னண்டு ;
நாளும் பாடும் பொன்வண்டு ;
பொன்னி பாயுந் தென்னடு ;
பொருவில் கொங்கு நன்னடே.

கொங்கு நாட்டின் ஒரு பகுதிக்குத் தகரூர் தலைநகராக விளங்கியது. தகடூரைச் சுற்றிப் பெரிய மதிலிருந்தது. அதனை அடுத்து, நிமிர்ந்து உயர்ந்த நெல்லும், அதனை அடுத்து வாழையும், அதனை அடுத்தடுத்துப் பலா கமுகு தென்னை மரங்களும் சூழ்ந்திருந்தன. அந் நகரத்திலிருந்த அதியர் குலத்தில் பூவின் இயைந்த மணம் போலவும் பொன்னின் இயைந்த ஒளி போலவும் அதியமான் நெடுமான் அஞ்சி தோன்றினன்.

அதியமான் இளமைப் பருவத்திலே பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றன். தமிழ்த் தேனைப் பருகினன். பண்டிதரிடத்தில் இலக்கண இலக்கியங்களையும் அரசியல் நூல்களையும் அறிவியில் நூல்களையும் கற்றுணர்ந்தான். வில்வித்தையிலும், வாள் வித்தையிலும், கரியேற்றத்திலும், பரியேற்றத்திலும் வல்லவனுனன். வடிவார் குழலி என்ற மங்கையை மணந்து உடலும் உயிரும் போல ஒன்றி, இல்லறம் நடத்தினன். அவன், தன் தந்தை விண்ணுலகடைந்தபின் தன்னுடைய நாட்டை அரசாண்டு வந்தான். அதியமான் குடையும், அவன் தன்னிடத்தே முறை வேண்டினர்க்கு நடுநிலை யறிந்து கூறும் விடையும், அவன் நாட்டு மக்களை மகிழ்வித்தன. அவனுடைய கொடை புலவர்க ளுள்ளத்தைப் பூரிக்கச் செய்தது.

ஔவையார் அதியமான் தமிழறிவையும் கொடையையும் புலவர்கள் புகழக் கேட்டார். அவனிடம் பரிசில் பெற எண்ணினர்.

பூங்கொடி கால்கொண்டு நடந்து சென்றாற் போல, வழியே நடந்து சென்றார். பொன்னளிக்கும் புரவலனை நாடிச் செல்லும் தன்னைப் போலவே, பழமுடைய மரங்களை நாடிப் பறவைகள் வானத்தில் பறந்து செல்வதைக் கண்டு, மனமகிழ்ந்து நடந்தார். நடந்து சென்ற வழியில், வண்டுகள் பாடிச் சென்றன. தாழைகள் மடல் வாய்திறந்து சோறளித்து, அவற்றிற்கு விருந்து செய்தன. கொன்றை மலர்கள் 'வண்டுகாள் கொண்டு செல்மின்' என்று பொன் மலர் நல்கின. அக்காட்சியைக் கண்டு களித்து ஔவையார் நடந்து சென்றார். காந்தட் செடிகள் மலர்களாகிய கைகளால் அவர் செல்லும் வழிகளைத் தெரிவித்தன. வயல்களில் வளர்ந்து நின்ற நெற் பயிர்கள் அவரைத் தலைகளால் வணங்கி நின்றன. மாடத்திலிருந்த கொடிகள் 'வருக' என்று அழைத்தன. தகடூரைத் தமிழ் மூதாட்டியார் அடைந்தார்.

காலை நேரத்தில் முறைவேண்டுவார்க்கும் குறை வேண்டுவார்க்கும் காட்சிக் கெளியனும் அதியமான் நாளோலக்கத்தி லமர்ந் திருந்தான். ஔவையார் அகழ் கடந்து, வாயில் கடந்து, மண்டபத்தை அடைந்தார். 'வாழ்கமன்னவ!' என்றுவாழ்த்தினார். வணங்கினார். மன்னன் இவருக்கு இருக்கை கொடுத்தான். தாம் கொண்டு வந்த யாழை எடுத்து இசை யூட்டினார். காந்தள் மலரனைய கைவிரல்களால் நரம்புகளைத் தடவி வாசித்தார். வாயினாலும் பாடினார். பாடிய பண்ணும் பாடலும் அதியமானையும் அவனிருந்தோரையும் மகிழ்வித்தன. மன்னன் 'நன்று நன்று' என்று நவின்று, அவர் பாடலையும் அவரையும் புகழ்ந்தான். ஔவையாரை அழைத்துச் சென்று, தன் வாழ்க்கைத் துணைவிக்குக் காட்டி, அவர் புலமையைத் தெரிவித்தான். அமிழ்தமனைய அறுசுவை உணவு அவருக் கருத்தினான்.

ஒரு நாளாயிற்று; இருநாளாயின; அதியமான் பரிசில் கொடுத்து ஔவையாரை அனுப்பவில்லை. அதியமானுடைய கல்வியின் திறமையும், சொல்லின் திறமையும், உபசரிக்கும் திறமையும் ஔவையாருக்கு இன்பத்தைக் கொடுத்தன. பரிசிலளித்து அனுப்பாதது அவர் மனத்தை வருத்தியது. பரிசல் பெறுமலே வீட்டுக்குச் செல்லத் துணிந்தார். அரசனிடம் சென்று தெரிவித்தாரிலர். 'வாயில் காப்போய்! வாயில் காப்போய்! விரைந்த குதிரையுடைய குரிசிலாகிய நெடுமான் அஞ்சி, தான் தன் தரமறியான்

கொல்லோ? அது கிடக்க. என் தரம் அறியான் கொல்லோ? அறிவும் புகழும் உடையோர் இறந்தாராக, வறிய இடத்தையுடைய உலகமும் அன்று. ஆதலாற் காவினேம் யாழை. கட்டினேம் பைகளை. மரத்தைத் துணிக்கும் தச்சன் பயந்த, மழுவையுடைய கைத் தொழில் வல்ல, மகார் காட்டிடத்துச் சென்றால் அக் காட்டகம் பயன்படுமாறு அவர்க்கு எத்தன்மைத்தோ? எமக்கும் யாதொரு திசைக்கட் போகினும் அத்திசைக்கண் சோறு அத்தன் மைத்து' என்னும் பொருள்பட வெகுண்டு பாடி விரைந்து சென்றார்.

வாயி லோயே? வாயி லோயே!

*　*　*

கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்னறி யலன்கொல்? என்னறி யலன்கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே. அதனால்
காவினம் கலனே. சுருக்கினேம் கலப்பை.
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.

புறம்–206

வாயிற் காவலன் ஔவையாரின் சினத்தை அறிந்தான். அரசனிடம் விரைந்து சென்று, ஔவையாரின் செல்கையைக் கூறினன். மன்னன் கலக்கமடைந்தான். நடந்து சென்று, ஔவையார் செல்கையைத் தடுத்து, அழைத்துக்கொண்டு வந்தான். இருக்கையில் இருத்திப் பொன்னும் மணியும் பூந்துகிலும் கொடுத்தனுப்பினன்.

தொண்டைமான் இளந்திரையன் என்பான் அதியமானிடம் பகைமை கொள்ளத் தொடங்கினன். தொண்டைமான் புலவர் களைப் பேணும் புகழுடையான் என்பதையும், செந்தமிழ் அறிந்த பைந்தமிழ்க்குரிசில் என்பதையும், அறிந்து, அதியமான் ஔவை யாரை அனுப்பி, அவன் பகைமையை அடக்க எண்ணினன். ஔவை யாரிடத்திலும் தன் கருத்தினை உரைத்தான். இளந்திரையன் இருந்து அரசாளும் காஞ்சிமா நகருக்கு அவரை ஏகுவித்தான்.

ஔவையார் அதியமானிடம் விடைபெற்றுக் கொண்டு அரண்மனையை அகன்றார். தகடூரையும் அதனைச் சார்ந்த வயல்களையும் கடந்து ஒரு பூம்பொழிலை அடைந்தார். குயிலும் பிறவும் ஔவையார் வருகையை அறிந்தன. தாங்கள் பழகிய இசையையும் நடிப்பையும் காட்டி அவரிடம் நல்லுரைபெற எண்ணின. குயில் இன்னிசை பாடியது. வரி வண்டு குழலூதியது. மயில் ஆடிற்று. ஔவையார் அக்காட்சியைக் கண்டார் 'நன்று நன்று' என்று நவின்று அப்பால் நடந்தார். ஒரு பக்கம் வாழை மரமும், பலாமரமும், மாமரமும் தமிழ் மொழியின் சுவையைக் கேள்விப்பட்டன. அவை தமிழின் சுவையைப் போன்ற இன் சுவையைத் தாம்பெறவேண்டும் என்று எண்ணின. உணவு உண்ணும் வேராகிய வாயையுடைய தலைப்பாகத்தைத் தரையில் வைத்துத் தலைகீழாகத் தவம்புரிந்தன. தமிழின் இன்சுவையை உண்டு உண்டு இன்புற்ற தையலாராகிய ஔவையார் தங்கள் அருகே வருவதைத் தெரிந்தன. தங்கள் பழங்கள் தமிழ்ச் சுவைபோன்று இனிமையுள்ளனவா என்று, அவற்றை உண்டு இனிமையின் தன்மையை எடுத்துரைக்க என்று, அவருக்கு முன்பு தங்கள் கனிகளை உதிர்த்தன. அவற்றை உண்டு ஔவையார் அப்பால் நடந்தார். பச்சைப் பசும் பட்டினை விரித்தாற் போன்ற பசும் புல்வெளி இருந்தது. அப்புல்வெளியினூடே நடந்து சென்றார். மாடத்தின் உச்சிகளில் கட்டப்பட்டிருந்த கொடிகள் தமிழ் மூதாட்டியாரை 'வருக வருக' என்று மகிழ்ந்து அழைப்பன போல ஆடின. காஞ்சிமா நகரை ஔவையார் கண்ணுற்றார்; நகரினுள் நுழைந்து நடந்து சென்றார்.

காஞ்சிமா நகரம் மாடங்களால் மிகுந்த வனப்புடையது. மாடங்களின்மேல் மங்கையர் மூன்று பந்துகளினாலும், அவற்றிற்கு மேற்பட்ட தொகையையுடைய பந்துகளாலும், எறிந்தும் பிடித்தும் விளையாடிக் கொண்டிருந்தனர். மாடத்தினுள்ளே சான்றோர் பலர் தமிழ்ச் செய்யுளினுள்ள தீஞ்சுவைகளைத் தேனையுண்ணும் வண்டுகள் போல் தேர்ந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்துக் கொண்டே தெரு வழியாக நடந்து சென்றார். சிறுவர்கள் சிறு தேருருட்டி விளையாடினர். மகளிர் பலர் மெல்லிய நூல்களைப் பஞ்சினால் நூற்றுக் கொண்டிருந்தனர். ஆடவர்கள் பழங்கள், பூக்கள், தளிர்கள் முதலிய உருவங்களை விளிம்பில் அமைத்துப்

பாலாவி யனைய மெல்லிய ஆடைகளை நெய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தொழிலைக் கண்டு கொண்டே காவலன் வாழும் குன்றமனைய கோவிலை அடைந்தார்.

அரசனுக்கு ஔவையார் தம் வருகையைத் தெரிவித்துச் சபையை அடைந்தார். இளந்திரையன் 'வருக' என்று வரவழைத்துத் தமிழ் மூதாட்டிக்கு இருக்கை கொடுத்தான். அவர் நலத்தை வினவி அறிந்தான். வந்த வழியைப் பற்றியும் ஆங்காங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் கேட்டறிந்தான். உண்ணற்கினிய உணவூட்டி உபசரித்தான்.

இளந்திரையன் ஔவையாரைப்பற்றி நன்கறிவான். அதியமானல் ஆதரிக்கப்படுதலை அறிவான். அவைப் புலவராய் இருத்தலை அறிவான்; அதியமான் அவருக்குப் பரிசில் கொடுத்துப் பாராட்டுதலை அறிவான். அவருக்குத் தன் படைப் பெருக்கத்தைக் காண்பித்தால் அவர் தன் வலியைப்பற்றி அவனிடம் தெரிவிப்பார் என்று எண்ணினன். தெரிவிப்பின் அதியமான் தனக்கு அடங்கி நடப்பான் என்றும் எண்ணினன்.

'வருக' என்று ஔவையாரை இளந்திரையன் அழைத்துக் கொண்டு சென்றான். சென்றுகொண்டிருக்கையில் 'நும் அகன்ற இடத்தையுடைய நாட்டில் பொருநர் உளரோ?' என்று வினவினன். அவ்வினவிற்கு ஔவையார் நன்கு விடையளிக்க வேண்டுமென்று எண்ணினர். "மடப்பத்தினையும் மையுண்ட கண்களையும் ஒளி தங்கிய நுதலினையுமுடைய விறலி! என்னோடு பொருவாருமுளரோ நும்முடைய பெரியஇடத்தையுடைய நாட்டின்கண்" என்று என்னைக் கேட்டலமையாத செருச் செய்யும் தானையையுடைய வேந்தே! நீ போர் செய்யக் கருதுவையாயின், எம்முடைய நாட்டின் கண்ணே அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர்மண்டும் பாம்பு போன்ற இளைய வலிய வீரரும் உளர். அதுவே யன்றி, மன்றின்கண் தூங்கும் பிணிப்புற்ற முரசினது காற்றெறிந்த தெளிந்த ஓசையையுடைய கண்ணின்கண் ஒலியைக் கேட்பின், அது போர்ப்பறை என்று மகிழும் என்னுடைய தலைவனுமுளன்' என்று அஞ்சாது கூறினர்.

ஔவையார் உரைத்த உரைகளைக் கேட்டுக் கொண்டே இளந்திரையன் அவரை அழைத்துச் சென்றான். அருகிலிருந்த மடவார்

உறையும் மாளிகையைக் காட்டினன். 'வருக' என்று மேலும் அழைத்துச் சென்று 'இவை போரிடும் பரிகள். இவை போரிடும் கரிகள்' என்றும் அவற்றைக் காட்டிக் கொண்டு சென்றான். படைக் கொட்டிலுக்கு அழைத்துச்சென்று, அழகுற அணி அணியாய் அமைக்கப்பட்டிருந்த வேற்படைகளையும், விற்களையும், அம்பு களையும், ஈட்டிகளையும், வாள்களையும், கேடயங்களையும், பிறவற்றை யும் காட்டினன். ஔவையார் அஞ்சினாரில்லை. அதியமான் திறமை அவருக்குத் தெரியும். அவன் திறமையை அறியாத இளந் திரையனுக்கு அதனை அறிவுறுத்த எண்ணினர்.

'இவை தாம்பீலி அணியப்பட்டு மாலை சூட்டப்பட்டு உடலிடந் திரண்ட காம்பு அழகுபடச் செய்யப்பட்டு நெய்யிடப்பட்டுக் காவலை யுடைய அகன்ற கோயி லிடத்தன. அவை தாம், பகைவரைக் குத்துதலால் கங்கும் நுனியும் முரிந்து கொல்லனது பணிக்களரி யாகிய குறிய கொட்டிலிடத்தனவாயின எந்நாளும்; செல்வ முண்டாயின் உணவு கொடுத்து, இல்லையாயின் உள்ளதனைப் பலரோடு கூடவுண்ணும், வறியோருடைய சுற்றத்திற்குத் தலைவனா கிய தலைமையையுடைய எம் வேந்தனுடைய கூரிய நுனியையுடைய வேல்கள்' என்று இளந்திரையனைப் புகழ்வது போலப் பழித்தும், அதியமானை இகழ்வதுபோலப் புகழ்ந்தும், எடுத்துரைத்தார். இறுமாந் துரையாடிய இளந்திரையன் ஔவையார் உரைகேட்டு அடங்கினன்.

மங்கை சொல்லம்புகளால் மன்னன் வலியிழந்தான். இது நாணத்தக்க செயல் என்று தான் நாணி மறைவதுபோல ஞாயிறு மேலை மலையை அடைந்தான். அரசனை வென்ற அரிவை யாவள் என்று, அலைகடல் மங்கை அகத்தெழு மகிழ்ச்சியால் தன் முகத்தை உயர்த்திப் பார்ப்பதுபோலத் திங்கள் திரைக்கடலிருந்து தோன்றிற்று. காலையில் கதிரவன் எழுந்தபின் ஔவையார் அரசனிடம் விடை பெற்று முன் சென்றவழியே திரும்பித் தகடூரை யடைந்து, நெடுமானைக் கண்டு, நிகழ்ச்சிகளனைத்தையும் எடுத் துரைத்தார். அவன் ஔவையாருடைய திறமையைக் கேட்டு வியந்து அவரிடம் முன்னையினும் பன்மடங்கு அன்பு வைத்தான். பொன்னும் பூணும் அவருக்குப் பரிசிலளித்தான்,

# 20. மண்ணியல் சிறு தேர்

மகாமகோபாத்தியாய மு. கதிரேசச் செட்டியார்.

[ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் புலவரும் புரவலருமாய் விளங்கிய சூத்திரகன் என்பவர் வடமொழியில் இயற்றிய மிருச்ச கடிகம் என்ற நாடகத்தின் மொழிபெயர்ப்பு இது.]

வேசையர் ஒழுக்கத்தை வெறுத்த பரத்தை **வசந்த சேனையும்,** பார்ப்பனர் மரபிலே தோன்றி வணிகனாய் வாழ்ந்து, அறம் செய்து வறுமை பூண்ட **சாருதத்தனும்** மெய்க்காதல் கொண்டதும், அதன் காரணமாக இருவரும் அல்லலுழந்து அவதிப்பட்டதும், இறுதியில் அறந் தலைகாப்பதும், கேடு சூழ்ந்த கயவன் சகாரனும் பாலகனும் அழி வெய்துவதும் இந்நாடகத்தின் கருப் பொருள்.

**சூத்திரதாரன் :**—நடன் ; நாடகத்தொடக்கத்திலே தன் மனைவியாகிய நடியுடன் உரையாடும் முகமாக நாடகக் கருப்பொருளைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றான்.

**நடி :**—சூத்திரதாரனாகிய நடன் மனைவி.

**சாருதத்தன் :**—நாடகத்தலைவன் ; வறுமையிற் செம்மை மிக்கவள்ளல்.

**மைத்திரேயன் :**—நாடகத்திலே விதூடகன். சாருதத்தன்பால் பேரன்புடைய பார்ப்பனத் தோழன்.

[அரங்க வழிபாடு நடந்தது ; வாழ்த்துரை முடிந்தபின்]

சூத்திரதாரன் :—இசை பாடியாயிற்று. என் கண்கள் பசியினாற் சுழலுகின்றன. ஆதலின், என் மனைவியை அழைத்துச் சிறிது பழஞ்சோறு உண்டோ இன்றோ என்று கேட்பேன். (சுற்றிப் பார்த்து) இதுதான் நமது இல்லம். (புகுந்து பார்த்து) ஆச்சரியம்! ஈ தென்னை ; நம் வீட்டில் வேறுமாதிரியான ஏற்பாடுகள் உள்ளன. வழியெல்லாம் நீண்டகழுநீர் வெள்ளத்தை உடையன. அடிசில் நறுமணத்தால் கிளர்ந்தெழும் பசி என்னை மிகவும் துன்புறுத்துகின்றது. நம் முன்னோரான் ஈட்டப்பட்ட வைப்புப்பொருள் வெளிப்படடது கொல்! அன்றி, யானே பசி மிகுதியால் இவ்வுயிருலகத்தை அன்னமயமாகப் பார்க்கின்றேன் கொல்! நம் கிருகத்தில் பழஞ் சோறும் இல்லையே. பசியோ என் ஆற்றலைக் கடந்து மிகவுந் துன்புறுத்துகின்றது. இவ்விடத்தில் எல்லாம் புதிய தொடக்கங்களாகவுள்ளன. ஒருத்தி சந்தனம் முதலிய கலவைகளைப் பிசைகின்றாள். மற்றொருத்தி மலர்களைத் தொடுக்கின்றாள். [நினைவு கூர்ந்து] ஈதென்னை? நிற்க. மனைவியை யழைத்து உண்மை

யைக் கேட்டறிகின்றேன். [வேட சாலைக்கு எதிரே பார்த்து] நங்காய்! இங்கு வருக.

நடி :—[வந்து] ஐய! இதோ வந்தேன்.

சூத்திரதாரன் :— காதலீ! நின்வரவு நல்வரவாகுக.

நடி :—ஐய! இன்னகாரியம் செய்தல் வேண்டு மென்று கட்டளை யிடுங்கள்.

சூத்திரதாரன்:—பெண்ணே! நம் வீட்டில் ஏதாவது உண்ணத்தக்க துண்டோ? இல்லையோ?

நடி : —ஐய! எல்லாம் இருக்கின்றன.

சூத்திரதாரன் :—யாதியாதிருக்கின்றது?

நடி :—அவையாவன —அக்காரவடிசில், நெய், தயிர், அரிசி, தாங் களுண்டற்குரிய மற்றைச் சுவைப் பொருள்கள் முதலிய எல் லாம் உள்ளன. இவ்வாறே என்றும் இருக்குமாறு தங்கள் குலதெய்வங்கள் அருள் செய்க!

சூத்திரதாரன் :—நம் வீட்டில் இவ்வெல்லாம் உள்ளனவா? அன்றிப் பரிகசிக்கின்றாயா?

நடி :—[தனக்குள்] [பரிகசிக்கின்றேன்] [வெளிப்படையாக] ஐய! [1] அங்காடியிலுள்ளன.

சூத்திரதாரன் :—[சினத்துடன்] ஆ! இழிந்தவளே! இத்தகைய நினது அவா சிதைவுறுக. இப்பொழுது [2] வளைவு சுவர்க்கு ஆதார மாக இடப்படும் அடுக்குச் செங்கல்லைப் போல் என்னை உயரத் தூக்கி வீழ்த்தியமையால் நீயும் கெடுவாயாக.

நடி :—ஐய! பொறுத்தருள்க. பொறுத்தருள்க. இது பரிகாச மன்றோ?

சூத்திரதாரன் :—அங்ஙனமாயின் இவ்வேற்பாடுகளெல்லாம் புதியன போற் காணப்படுகின்றனவே. ஒருத்தி சந்தன முதலியகலவை

---

1. அங்காடி :—கடைத்தெரு; வெல்லம், நெய் முதலிய எல்லாம் கடைத்தெருவிலுள்ளன வென்று பரிகசிக்கின்றாள்.

2. இவ்வுவமை பலவகையான சுவைமிக்க உணவமைக்கப்பட்டனவென்று அவனுக்குப் பேரவாவை வளர்த்துப் பின் இவ் வெல்லாம் கடைத் தெருவி லுள்ளன வென்று பரிகசித்தது அவ் விருப்பங்களை வீழ்த்தினமையைப் புலப் படுத்தும்.

களைப் பிசைகின்ருள் ; மற்றொருத்தி மலர்களைக் கட்டுகின்ருள்; இந்நிலம் பஞ்சவன்ன மலர்களின் சேர்க்கையால் விளங்குகின்றது. ஈதென்னை ?

நடி :—இன்று நோன்பு தொடங்கியிருக்கின்றேன்.

சூத்திரதாரன் :—இந்நோன்புக்குப் பெயர் யாது ?

நடி :—'கட்டழகுள்ள கணவன்' என்பதாகும்.

சூத்திரதாரன் :—மாதராய் ! இதற்குப் பயனெய்தல் இவ்வுலகத்திலா ? உம்பருலகத்திலா ?

நடி :—ஐய ! உம்பருலகத்தில்.

சூத்திரதாரன் :—[சினத்துடன்] பாருங்கள் ! பாருங்கள் ! பெரியோர்களே ! என்னுடைய சோற்றுச் செலவினுல் இவள் உம்பருலகத்துக் கணவனைத் தேடுகின்ருள்.

நடி :—ஐய ! அருள்க. அருள்க. தாங்களே மறுபிறப்பிலும் கணவனுகவேண்டும் என்பதே.[1]

சூத்திரதாரன் :—இந்நோன்பை எவன் உனக்கு உபதேசித்தான் ?

நடி :—தங்கள் அன்புமிக்க நண்பர் சூர்ண விருத்தர்.

சூத்திரதாரன் :—[கோபத்துடன்] ஆ ! இழிதகவ ! சூர்ணவிருத்த ! புதிய[2] மணப்பெண்ணின் குழற்கற்றைபோல, நின்னை [3] மணப்பொருள்களாற் பூசிப்புனைந்து, சினமிக்க பாலக னென்னும் அரசன் வெட்டிவீழ்த்தலை எப்பொழுது காண்பேன்.

நடி :—ஐய ! அருள்க ! உம்பருலகத்திலும் தங்களையே பற்றியது இந்நோன்பு [என்று அடிக்கண் இறைஞ்சுகின்ருள்.]

சூத்திரதாரன் :—நங்காய் ! எழுக. இந்நோன்பு யாரால் நிறைவேறல் வேண்டும் ? கூறுவாயாக.

---

1. இந்நோன்பின் பயனுகுமென்று முடிக்க.

2. மணப் பெண்ணின் குழற்கற்றை பூசிப்புனைந்து கட்டப்படுதல் போலச் சூர்ணவிருத்தனையும் பூசிப்புனைந்து கொலைப்படுத்த வேண்டுமென்பது. கருத்து.

3. கொலைப் படுவோர்க்குரிய சந்தனம் மாலை முதலியவற்ருல்.

நடி :—நம்போன்ருர்க்குத் தகுதியான நிலையிலுள்ளாரும் இந்நோன்பில் உண்டற்குரியவருமாகிய [1] ஓர் அந்தணரால்.

சூத்திரதாரன் :—பெண்ணே! அங்ஙனமாயின் செல்க. யானும் நம்போன்ருர்க்குத் தகுதியான அந்தணரொருவரை உணவுக்கு அழைத்து வருகின்றேன்.

நடி :—தங்கள் கட்டளைப்படியே [என்று போய்விடுகின்ருள்.]

சூத்திரதாரன் :—[உலாவி] ஆச்சரியம்! அங்ஙனமாயின் இச்செல்வம் நிறைந்த உச்சயினீநகரில் [2] நம்போன்ருர்க்குத் தகுதியான அந்தணரை எங்ஙனம் தேடுவேன்? [பார்த்து] [3] சாருதத்தருடைய நண்பராகிய மைத்திரேயரே! தாங்கள் எம் இல்லத்தில் இன்று உணவிற்குத் தலைவராக இருத்தல் வேண்டும்.

[வேடசாலையில்]

ஒ! தாங்கள் மற்ருெரந்தணரை உணவுக்கழைத்துக் கொள்ளுங்கள். யான் இப்பொழுது வேருெரு செயலில் முற்பட்டிருக்கின்றேன்.

சூத்திரதாரன் :—நிறைந்த உணவு; பகைமையும் இன்று; தக்ஷிணைப் பொருளும் கிடைக்கும்.

[பின்னரும் வேடசாலையில்]

ஒ! இப்பொழுது சற்று முன்னர்த்தானே மறுத்துரைத்தேன்; அடிக்கடி என்னைத் தடைசெய்யும் இந்நிர்ப்பந்தம் என்னை?

சூத்திரதாரன் :—இவன் மறுத்துரைத்து விட்டான். நிற்க. மற்ருெரந்தணரை உணவுக்கழைக்கின்றேன். [என்று போய்விடுகின்ருன்]

## அணிகலன் அடைக்கலம்

[விதூடகன் மேலாடை யொன்றைக் கையிலேந்தி வருகின்ருன்.]

விதூடகன் :—['ஒ! தாங்கள் மற்ருெரந்தணரை' என முன்சொல்லிய அதனையே கூறிக்கொண்டு] மைத்திரேயனுகிய யானும் பிறர் உணவுக்கு அழைத்தற்கு உரியனுயினேனே! ஆ! நல்குரவுத்

---

1. ஓர் அந்தணரால் நிறைவேறல் வேண்டும் என்று முன்வாக்கியத்தோடு முடிக்க.

2. இழிகுலமும் வறுமையும் ஒருங்குடைய நம்போன்ருர் என்க.

3. சாருதத்தருடைய நண்பரென்றதனுல் வறுமை நிலைப்பட்டிருக்கும் இவர் நமக்கு இணங்குவரென்பது கருத்து.

துன்பமே! பஞ்சாப் பறக்கச் செய்கின்றாயே. பெருமையிற் சிறந்த சாருதத்தரது செல்வத்தால் இரவும் பகலும், மிக முயன்று நன்கு சித்தஞ் செய்யப் பட்டனவும் நெய் பெய்தமையால் நறுமணங் கமழ்வனவுமாகிய கொழுக்கட்டைகளை யுண்டு தேக்கெறிந்து, அவற்றை இல்லத்தினுள்ளே நான்கு வாயில்களும் ஒன்று கூடும் வழியிடைக்கட் பற்பல உண்கலங்கள் சூழவிருந்து, ஓவியம் எழுதுபவன்போல், விரல் நுனிகளால் தொட்டுத் தொட்டெறிவேன். நகரச் சதுக்கங்களில் திரியும் ஊரேறுபோல் [1] வாயசைத்துக் கொண்டிருப்பேன். அத்தகைய யான் இப்பொழுது சாருதத்தரது வறுமையால் [2] மாடப்புறாப் போல், எவ்விடத்தினுந் திரிந்து படுத்துறங்குதற் பொருட்டு இவ்விடத்தை அடைகின்றேன். மாட்சி மிக்க சாருதத்தருடைய அன்புள்ள நண்பரான சூர்ண விருத்தர், 'தேவ காரியம் நிறைவேறியபின் மாண்பு மிக்க சாருதத்தர்பால் இது சேர்க்கற்பாலது' என்று கூறிச், சாதிமலர்களான மணம் ஊட்டப்பட்ட இம்மேலாடையை என்பால் தந்தனர். ஆதலின், பெருமை மிக்க சாருதத்தரைப் பார்க்கின்றேன். [சுற்றிப்பார்த்து] இதோ சாருதத்தர் தேவபூசையை நிறைவேற்றி இல்லுறை தெய்வங்களுக்குப் பலியை எடுத்துக் கொண்டு இங்கே வருகின்றார்.

[அதன்பின், குறிப்பிட்டபடி சாருதத்தன் வருகின்றான்.]

விதூடகன் :—இதோ பெருமான் சாருதத்தர் இருக்கின்றார். ஆதலின், இப்பொழுது இவர் பக்கலிற் போகின்றேன். [அணிமைக்கணெய்தி] தங்களுக்கு மங்கலமுண்டாகுக. தங்கள் நலம் வளர்க.

சாருதத்தன் :—ஓ! எக்காலத்தும் இனிய நண்பனாகிய மைத்திரேயன் வந்தான். நண்ப! நின் வரவு நல்லதாக இருக்கவேண்டும்.

---

1. வாயசைத்தல்—அசைபோடல், அது உணவு நிறைந்தமையால் நிகழ்வது.

2. மாடப் புறா, பலவிடங்களிலும் அலைந்து உணவு தேடி உண்டு மாலைப் பொழுதில் பழகிய ஓரிடத்தையடைந்து உறங்குதல்போல, மைத்திரேயன் சாருதத்தரது வறுமையால் உணவுக்கு வேறு பல இடங்களிற் சென்று உறங்குதற் பொருட்டு அவரில்லத்தை அடைகின்றான் என்பதாம்.

விதூடகன் :—தங்கள் கட்டளைப்படியே [இருந்து] ஓ! நண்பரீர்! நம் அன்புமிக்க நண்பராகிய சூர்ண விருத்தர் ' தேவகாரியம் நிறைவேறிய பின் மாண்பு மிக்க சாருதத்தர்பால் இதைச் சேர்க்கற்பாலது ' என்று கூறிச், சாதி மலர்களான மணம் ஊட்டப்பட்ட இம்மேலாடையைத் தந்தார். [என்று கொடுக்கின்றார்.]

[சாருதத்தன் அதனைப் பெற்றுக்கொண்டு தன்னிலையை எண்ணி வாய்வாளாதிருக்கின்றான்.]

விதூடகன் :—ஓ! நண்பரீர்! கவலுதல் ஒழிக. முன்னர் இரப்போர்க் கீந்துவந்த, செல்வராகிய தங்கள் குன்றிய நிலையும், [1] விண்ணவர்களுண்டெஞ்சிய பிரதமைப் பிறைபோல மிகவும் அழகுடையதே.

சாருதத்தன் :—நண்ப! எனக்குப் பொருளைப்பற்றிய துன்பம் இல்லை. பார்க்க.

விதூடகன் :—ஓ நண்பரீர்! [2] விடாமுட்களையுடைய வேட்டுவன் என்னும் ஒருவகை வண்டுகளுக்கு அஞ்சிய இடைச் சிறுவர், காட்டில் எங்கெங்கு அவற்றால் பீடிக்கப்படுதல் இல்லையோ அங்கங்கு விளையாடித் திரிதல்போல, இவ்விழிந்த செல்வமாகிய பழஞ்சோறு எங்கெங்கு உண்ணப்படுதலில்லையோ அங்கங்குச் செல்கின்றது.

சாருதத்தன் :—நண்ப!

**ஆசிரியவிருத்தம்**

ஊழ் வலியாற் பொருள் வரலும் உற்றதுபோ
தலும் இயல்பே ; உண்மையாக
வாழ் தருநல் வளமிலதால் வருங் கவலை
யோரு சிறிது மனத்துட் கோள்ளேன்;

1. முதற்கலையை அங்கியும், இரண்டாங்கலையைச் சூரியனும், உண்ணுகின்றனர் என்னும் அறநூற்படி, சந்திரகலைகள் தேவர்களுக்கு உணவாதலால், அக்கலைகளின் குறைவு பிறர் நலத்தின் பொருட்டு நிகழ்ந்து விசேட அழகு செய்தல் போலச், சாருதத்தரது வறுமை பிறர்க்கு ஈதலால் நேர்ந்ததாதலின் அதனை மிக்க அழகுடைய தென்றான்.

2. விடாமுட்களையுடைய வண்டுகளுக்கு அஞ்சி அவற்றாற் றுன்புறுத்தப்படாத இடங்களில் இடைச் சிறுவர்கள் திரிதல் போலப் பிறர்க்கு ஈந்து தாமும் அனுபவிக்கும் நல்லோர்களின் கொடை அநுபவங்களுக்கு அஞ்சி உலோபிகளைச் செல்வம் அடைகின்ற தென்பது கருத்து.

வீழ் தருமப் பொருளின்றி வெறிதுறு வோன்
தனைக் கண்டு, விரும்பு நட்பிற்
சூழ் தருமிம் மாக்க ளெலாஞ் சுளிக்கின்றார்
ஈதென்னைச் சுமோ லம்ம !

விதூடகன் : ஓ நண்பரீர் ! அச்செல்வமாகிய பழஞ் சோற்றையே நினைந்து துன்புறல்வேண்டா.

சாருதத்தன் : நண்ப ! ஆடவனுக்கு வறுமையானது,

[2] சிந்தனை பற் பல வுந்து காரணமாம் ;
நிந்தனை நண்பரால் வந்துறப் புரியும் ;
உள்ளிப் பிறர்நனி எள்ளற் கேதுவாம் ;
அகைவேற் றுருக்கோள் பகைமையு மாகும் ;
மேவற் சுற்றமும் ஏவன் மாக்களும்
சினமுறச் செய்யும் ; மனமுறக் கலந்த
காதலி கோடுமையுங் காடுறை வேட்கையும்
போதரப் புரியும் ; வீதரு முள்ளத்(து)
இன்னாத்(து) தீநனி இன்னாது
எரிக்குமாலந்தோ ! விரிக்குமா றென்னே ?

[3] ஆதலின், நண்ப ! இல்லுறை தெய்வங்களுக்குப் பூசை செய்தாயிற்று ; செல்க நீயும் ; நாற் சந்தி கூடுமிடத்துள்ள பிராமி முதலிய தெய்வங்களுக்குப் பலியைக் கொடு.

---

1. விதூடகனுக்குப் பழஞ் சோற்றில் விருப்பமுண்மையாற் பொருள் இங்ஙனம் உபசரிக்கப்பட்டது.

2. சிந்தனை உடலோம்பல் முதலியவற்றிற்குரிய உபாயம் ஆராய்தல் முதலியன. விரும்பியதைத் தடுத்தலானும் விரும்பாததைத் தருதலானும் உலகத்தில் ஒருவற்கு மற்றொருவன்பாற் பகைமை நிகழும்; வறியவனிடத்துக் காரணமின்றி நிகழும். இது பற்றியே வறுமை, "வேற்றுருக்கொள் பகைமையாகும்" என்று கூறப்பட்டது. சினமுறச் செய்தற்குக் காரணம் அன்னார்க்கு வேண்டுவன கொடாமையேயாம். காடுறை வேட்கைக்குக் காதலி கொடுமை காரணம் என்க. இன்னாத்தீ—வறுமைத்துன்ப நுகர்ச்சி நெடிதிராதாகலின் விரைந்துயிர் போக்காது எரித்தல் மிக்க துன்பம் தருமாதலின், "இன்னா தெரிக்கு மாலந்தோ" என்று மிகுதியாக் குறிப்புக் காட்டப்பட்டது.

3. யான் வறுமையால் இழிக்கப்பட்டிருத்தலானும், அதனால் வெளிச் சேறற்கு நாணமுடையேன் ஆதலானும் வெளித் தெய்வங்களுக்குப் பலியை நீயே கொடுக்கவேண்டும் என்று சாருதத்தன் விதூடகனை நோக்கிக் கூறியது.

விதூடகன் :—யான் போகேன்.

சாருதத்தன் :—எதற்காக ?

விதூடகன் :—இங்ஙனம் பூசிக்கப்பட்டும் தெய்வங்கள் தங்களுக்கு அருள் செய்திலவாதலின், அத்தெய்வங்களைப் பூசித்தலால் வரும்பயன் யாது ?

சாருதத்தன் :—நண்ப ! அங்ஙனமன்று. இல்லறத்தானுக்கு இது 1 நித்தியகன்ம மாகும்.

### கலிவிருத்தம்

[2] பூசனை செயன் முறை பொருந்த நித்தியம்
வாசகம் உடலோடு மனத்தி னுற்செயும்
மாசறும் அன்பர்க்கு மகிழ்ந்து தெய்வங்கள்
நேசமோ டருளுமால் நினைத்த லென்னையே.

ஆதலிற் செல்வாயாக. பிராமி முதலிய தெய்வங்களுக்குப் பலியைக் கொடு.

---

1. நித்திய கன்மம் செய்யாதவழிக் கேட்டிற்குக் காரணமாதலின் பயனை ஆராயாது இன்றியமையாது செயற்பால தென்பதாம்.

2. பயனாராய்ச்சியில்லாத கன்மம் நூலில் விதிக்கப் பட்டது வீணெனின், அதன் இன்றியமையாமையை வலியுறுத்தற்கு இச்செய்யுள் எழுந்தது—இது "தனகடன் னடியேனையுந் தாங்குதல், என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் அருட் பாசுரப்பொருளைத் தலைக் கட்டாங்கி நிற்றல் அறிக. பொறிகளின் எல்லைக்கு மேற்பட்ட பொருளைப் பற்றி உய்த்துணர முயறலினும், விதியாக உள்ளவற்றைக் கடனாக மேற் கோடலே நன்றென்பதாம்.

# 21. தேசியம்

புரபசர் வ. பொன்னுசாமி பிள்ளை, எம். ஏ.

தேசியம் என்பது, பல்வேறு தொழில்களையும், வகுப்புகளையும் உடைய ஒரு கூட்ட மக்கள் நாகரிகத்தில் தாங்கள் இதர தேசங்களில் வாழும் மக்களுக்கு வேறுபட்டவர்களென்றும், தாங்கள் ஒரு தனிப்பட்ட இனத்தினர் என்றும், தங்களது நாகரிகத்தையும் இனத்தையும் பாதுகாக்க எத்தகைய தியாகமும் அரிதல்ல என்றும், கொள்ளும் உணர்ச்சியாகும். அவ் வுணர்ச்சியின் பயனால் அவர்களுக்கு ஒரு சுதந்திர அரசாங்கம் ஏற்படின், அவர்களை தேசிய நாட்டினர், எனக் கூறலாம். தேசிய உணர்ச்சி மனதில் எழும் ஒருவகை நிலை; அது உள்ளுணர்ச்சியைக் குறிக்கும். அவ்வுணர்ச்சி பற்பல காரணங்களினால் எழுகின்றது. ஒரு கூட்டத்தில் பெரும் பான்மையோர், நிறம் தேக அமைப்பு உயரம் முதலியவைகளில் ஒத்திருந்தால், அவர்கள் தங்களை ஒரு தனி இனத்தினரென்று கருதி, ஒற்றுமையுடன் வாழ்வது இயல்பே. அக் கூட்டத்தினர் இயற்கை எல்லைகளாகிய நதிகள், மலைகள், சமுத்திரங்கள் முதலியவைகளால் சூழப்பட்ட ஒரு தனித் தேசத்தில் வாசம் செய்வரேல் அவர்களுக்குள் அந்த ஒற்றுமை ஏற்படுவது மிகவும் எளிது. அத்தகைய தனித் தேசத்தில் வாழும் மக்களின் பெரும்பான்மையோர் ஒரே மொழியை உபயோகித்தால் ஒற்றுமையுணர்ச்சி, அவர்களுக்குள் வலுவுறும். ஏனெனில் அவர்களுடைய எண்ணங்களையும், கருத்துக்களையும், இலட்சியங்களையும் அம் மொழியில் வெளியிட முடியும். அம் மொழியிலுள்ள இலக்கியங்கள் அவர்களுடைய அன்பையும், ஆதரவையும் பெறும் என்பது திண்ணம். மொழியைப் போல மதமும் அம் மக்களிடம் ஒற்றுமையுணர்ச்சியை எழச் செய்யும் ஒரு கருவியாகும். இனம், தேசம், மொழி, மதம் இவைகளைப் பொதுவாக உடைய அக் கூட்டத்தினர் நாகரிகத்தில் ஒத்திருப்பார்கள் அன்றோ? அந் நாகரிகத்தைச் செழிப்புறச் செய்ய எத்தகைய தியாகத்தையும் அவர்கள் மனமுவந்து செய்வார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து ஆற்றிய வீரச் செயல்கள், அவர்களுக்கு நேர்ந்த இன்னல்கள், இவைகளின் நினைவு, அவர்களை ஒற்றுமையுடன் இருக்கத் தூண்டும். முதன் முதலாக அவ்வுணர்ச்சி அவர்களிடையில் இயற்கையில் எழ

வேண்டுமேயன்றி அதை உற்பத்தி செய்வது அரிது. அதன் விளைவாக அவர்கள் நன்மையிலும் தீமையிலும், வளமையிலும் வறுமையிலும், தாங்கள் ஒற்றுமையுடன் இருக்கவேண்டுமென்று கருதுவர்; வாணிகத்திலும், சக்தியிலும் தலை சிறந்து இருக்க வேண்டும் என்று நினைப்பர். ஒன்று கூடியே வாழ வேண்டும்; ஒன்று கூடியே செழிப்புற வேண்டும்; ஒன்று கூடியே இதர தேச மக்களின் மதிப்பைப் பெறவேண்டும் என்று ஆர்வங் கொள்வர். நீந்துவதற்கு மீன்குஞ்சுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியதில்லையன்றோ? அதுபோன்று ஒரு கூட்ட மக்களை ஒன்றுசேர்ந்து வாழும்படி தூண்டும் மனமே தேசிய உணர்ச்சிக்கு அடிப்படையாகும்.

உள்ளுணர்ச்சியின் விளைவான தேசியத்திற்கும், அதையொட்டிய புறத்துறை சாதனங்களாகிய நாடு, இனம், மொழி, மதம், அரசியல், பொருள்நிலை, நாகரிகம், வரலாறு, பழக்கவழக்கங்களுக்கும் எத்தகைய தொடர்பு இருக்கின்றது? இதை ஆராய்ந்தால் தேசியவுணர்வுக்குக் காரணம் மதம் இனம் மொழிகள் மட்டும் அல்ல; சுதந்திர வாழ்க்கையில் ஆர்வமும், அதன் நிமித்தம் எத்தகைய தியாகத்தையும் செய்யத் துணியும் மனப்பான்மையும், ஒன்று கூடி அனுபவித்த இன்பதுன்பங்களும், அவைகளின் நினைவுமே தேசியவுணர்வுக்கு மூலாதாரம் என்பது புலப்படாமல் போகாது. ஒத்த நாகரிகமும் மதமும் இனமும் மொழியும் அவ்வுணர்வை ஊட்டுதற்குத் துணைபுரியுமே அன்றி, அவை அதை உண்டாக்க முடியாது. இவை எல்லாம் மானிடனுக்குச் சரீரம் போன்றவையே; அதனுள் இலங்கும் ஆன்மா தேசியம். கண் இன்றி, அல்லது, கைகால் இன்றி மானிடன் உயிருடன் வாழ்வதுபோல, தேசியவுணர்வுக்குக் கருவிகள் என்று கருதப்படும் நாடு மொழி மதம் இனங்களுள் சில அமையப் பெறாத மக்களும், அவ்வுணர்வு ததும்ப வாழ்வதை நாம் காண்கின்றோம்.

ஜெர்மானியர் ஒத்த இனத்தையே தேசியத்திற்கு மூலாதாரம் என்பர். ஆங்கிலேயர் மொழியையும் நாகரிகத்தையும் அதற்குக் காரணமெனக் குறிப்பிடுவர். அமெரிக்க ஐக்கிய நாட்டினர் அவைகளைப் பொருட்படுத்தாது, பொது அரசே தேசியஉணர்ச்சியை எழச் செய்யும் என்பர். பொது அரசு அதற்குக் காரணமெனின் பிரிட்டனில் தேசிய உணர்ச்சியைப் பெற்ற மூன்று தனிக் கூட்டத்தினர் இருப்பதேன்? வெல்ஷ் மக்களும், ஸ்காச்சு மக்களும் ஆங்கி

... பற்றுடையவர்களாக
இருக்கின்றனர். ... யில் எக்காரணத்தினுல் அவ்வுணர்ச்சி உற்பத்தியாகின்றது என்பதை வரையறுத்துக் கூறுவது எளிதன்று. ஒரு தேசமக்களிடையில் நிலவும் ஒத்துழைக்கும் மனப்பான்மையே அதற்கு மூலாதாரமாகும்.

தேசியம் என்பது சிக்கென்று நாம் கைபிற்பற்றும் பொருளன்று. அதைப் பிடிக்க முயன்ருல் அது எளிதில் நழுவிச் செல்லும் தன்மை உடையது. ரஸாயன நிபுணர்கள் மூலப்பொருள்களைக் கண்டுபிடிப்பதற்காக ஒருவஸ்துவைப் பிரித்துப் பகுத்துப் பரீட்சை செய்வதுபோல, நாம் தேசியத்தைப் பரீட்சை செய்யமுடியாது. அது இனத்தைச் சார்ந்ததன்று; மதத்தைச் சார்ந்ததன்று; தேச அமைப்பைச் சார்ந்ததன்று; வர்த்தக லாபத்தையும் மொழியையும் சார்ந்ததன்று; ஒரு தேசமக்கள் எக்காரணத்தினுல் தேசிய உணர்ச்சியுடன் விளங்குகின்றனர் என ஆராய்ந்திடின், அவர்கள் ஒத்துழைக்கும் மனப்பான்மையை உடையவராக இருப்பதால், அவ்வாறு விளங்குகின்றனர் எனக் கூறலாமேயன்றி, தேச அமைப்பினுலோ அல்லது இன ஒற்றுமையினுலோ அவ்வாறிருக்கின்றனர் எனக் கூறுதல் பொருத்தமன்று. தேசியம் ஒருவகை மனநிலை; உள்ளுணர்ச்சி; பொதுப்படக் கூறின், விவாகத்தடைகளின்மையும், சீவாதாரம் என அங்கீகரிக்கப்பட்ட சில நெறி தத்துவங்களும், ஒன்றுகூடி அனுபவித்த இன்ப துன்பங்களின் நினைவுமே, அவ்வுணர்ச்சிக்கு முக்கிய ...னமெனக் கொள்ளலாம். மொழியும், இலக்கியமும் அதை ...றச் செய்யும் தன்மை உடையன. இதர கருவிகளும் அவ் ...ற. அவைகளைப் பெற்றிருக்கும் மக்களைப் பிரிப்பது எளி...ன்று. அவைகள் இன்றேல் தேசிய உணர்ச்சி நிரந்தரமாக நிலவுமெனக் கருதுவது தகுதியன்று.

தேசியத்தைப் பிச்சி போன்ற மென்மையான பூஞ்செடிக்கு ஒப்பிடலாம். நன்கு பண்படுத்தப் பெற்ற நிலத்தில் அது தழைத்தோங்கும். அதன் வளர்ச்சியைத் துரிதப்படுத்தினுல் தீமை விளையுமேயன்றி நன்மை பயக்காது. அது மானிட ... ற்கு
இன்றியமையாததெனக் கருதப் போ ... கில்
நெடுங்காலம் மனித சமூக ... து.
அது அண்மையி ... திம்
... ள் ...

R5ß
843

# NAVAYUGA VACHAKAM

**FORM IV**

*By*

Rao Sahib K. ARUNACHALA GOWNDER

*Publisher:*

**R. SUBRAMANIA PILLAI**

TINNEVELLY JN.

Re. 1-2-0